

'தமிழன்' பத்திரிகை வீடுகளுக்கு நேரடியாக விநியோகிக்கப்படும். QR ஐ ஸ்கேன் செய்து தகவல்களை பெற்றுக்கொள்ளுங்கள்.


Follow us:

# தமிழன்

THAMILAN தமிலன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 03, இதழ்: 259 சோபகிருது வருடம், ஆனி மாதம் 06ஆம் திகதி புதன்கிழமை (21.06.2023) ஹிஜ்ரி 1444, துல்ஹஜ் - 02, 0115 886187 - பக்கங்கள் 10

விலை ரூ.50


## வரவு - செலவுத்திட்ட அலுவலக சட்டமூலம் நிறைவேற்றம்

பாராளுமன்ற வரவு - செலவுத்திட்ட அலுவலகத்தை அமைப்பதற்காக சமர்ப்பிக்கப்பட்ட சட்டமூலம் நேற்று (20) திருத்தங்களுடன் வாக்கெடுப்பின்றி நிறைவேற்றப்பட்டது.

பாராளுமன்ற வரவு - செலவுத்திட்ட அலுவலகத்தை அமைப்பது குறித்த சட்டமூலத்தின் இரண்டாவது மதிப்பீட்டின் மீதான விவாதம் மு.ப. 10.30 மணிமுதல் பி.ப. 4.30 மணி வரை நடைபெற்றது.

# சம்பள உயர்வு சாத்தியமில்லை!

## பெருந்தோட்டத் தொழிலாளர் தொடர்பில் முதலாளிமார் சம்மேளனம் அறிவிப்பு

•நிர்ஷன் இராமானுஜம்

ஏனைய நாடுகளுடன் ஒப்பிடுகையில் இலங்கையிலுள்ள தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கு அதிகமான சம்பளத்தை வழங்குவதாக தெரிவித்த முதலாளிமார் சம்மேளனம், தேயிலையின் உற்பத்தி அதிகரிக்கப்படாமல் மலையக பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு சம்பளத்தை அதிகரிக்க முடியாத நிலை காணப்படுவதாக கொழும்பில் நேற்று (20) அறிவித்தது.

இலங்கையின் தேயிலைத் தொழிற்றுறையின் நிலைமை குறித்து கலந்துரையாடும் நோக்கில் பெருந்தோட்ட கைத்தொழில் மற்றும் ஏனைய சங்கங்களுடன் இணைந்து முதலாளிமார் சம்மேளனம் கொழும்பு 03 இல் அமைந்துள்ள தேயிலை சபையின் கேட்போர் கூடத்தில் செய்தியாளர் சந்திப்பை நடத்தியது.

இதன்போது ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்வியொன்றுக்கு பதிலளித்த முதலாளிமார் சம்மேளனத்தின் பேச்சாளர் ரொஷான் இராஜதுரை, சம்பள விடயம் தொடர்பில் தமது நிலைப்பாட்டை தெரிவித்தார்.

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் நாளாந்த சம்பளம் போதியதாக இல்லை. ஆதலால் நாளாந்த சம்பளம் இரண்டாயிரத்து 500 ரூபாவுக்கும் அதிகமாக வழங்கப்படவேண்டுமென கோரிக்கை விடுக்கப்பட்டு வருகிறது.

அரசாங்கம் என்ற ரீதியில் உங்களுடைய நிலைப்பாடு என்னவென இதன்போது கலந்துகொண்டிருந்த பெருந்தோட்ட கைத்தொழில் இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்தவிடமும் ரொஷான் இராஜதுரையிடமும் ஒரே நேரத்தில் கேள்வி எழுப்பப்பட்டது.

இதற்குப் பதிலளித்த அமைச்சர், "இந்த நாட்டிலுள்ள மக்களின் வாழ்க்கை முறை சிறப்பாக இருப்பதை நாம் விரும்புகிறோம். பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பளத்தை அதிகரிப்பது தொடர்பில் எமக்கு எந்த எதிர்ப்பும் கிடையாது. எனினும் அதன் இருபக்கத்தையும் நோக்க வேண்டும்.

02 பக்கம்




படப்பிடிப்பு : கிறிஷான் காரியவசம்

## பாணில் விலை 0 ரூபாவால் குறைகிறது



ஒரு இறாத்தல் பாண் மற்றும் ஏனைய பேக்கரி உற்பத்திப் பொருட்களின் விலையை 10 ரூபாவால் குறைக்க அகில இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கம் தீர்மா னித்துள்ளது.

நேற்று நள்ளிரவு முதல் இந்த விலைக் குறைப்பு அமுலுக்கு வரும் என சங்கத்தின் தலைவர் என்.கே.ஜயவர்தன தெரிவித்துள்ளார்.

## ஹஜ் யாத்திரைக்கு செல்வோருக்கு வழங்கும் தடுப்பூசிகளுக்கு தட்டுப்பாடு

•நா.தினுஷா

புனித ஹஜ் யாத்திரை செல்லும் பக்தர்களுக்கு பெற்றுக்கொடுக்கப்படும் மெனிங்கோகோகல் தடுப்பூசிக்கு நாட்டில் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

மேலும், சட்டவிரோதமான முறையில் இந்த தடுப்பூசிகள் நாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளதாக அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கத்தினால் குற்றச் சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது. புனித ஹஜ் யாத்திரை செல்பவர்களின் நலன் கருதி சுகாதார அமைச்சு இது தொடர்பில் தெளிவுபடுத்தலை மக்களுக்கு வழங்க வேண்டும் என்பதுடன் யாத்திரை செல்பவர்களுக்கு மாற்றுத் தீர்வை பெற்றுக் கொடுக்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அந்தச் சங்கத்தின் செயலாளர் வைத்தியர் ஹரித்த அளுத்கே தெரிவித்தார்.

அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கத்தில் நேற்று (20) இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின்போதே இதனைக் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்தும் கருத்துத் தெரிவிக்கையில்,...

02 பக்கம்

## டெங்கு ஒழிப்பு உதவியாளர் பதவிகள் நிரந்தரமாகும்! கெஹேலிய தெரிவிப்பு

டெங்கு ஒழிப்பு உதவியாளர்களை நிரந்தரப் பணியாளராக உள்வாங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என சுகாதார அமைச்சர் கெஹேலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் தாம் மூன்று அமைச்சரவை பத்திரங்களை சமர்ப்பித்துள்ளதாகவும் இந்த நடவடிக்கைக்கு முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் எதிர்ப்புத் தெரிவித்துள்ளதாகவும் அமைச்சர் பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

"இந்த டெங்கு தடுப்பு உதவியாளர்கள் 2016ஆம் ஆண்டு அடிப்படைத் தகைமைகள் இன்றி பணியமர்த்தப்பட்டனர். எனினும் அவர்கள் எட்டு வருடங்களாக சேவையாற்றியுள்ளனர். அவர்களின் தகுதியை இப்போது பரிசீலிக்க முடியாது. இவர்களை நிரந்தரமாக்குவதற்கு மூன்று அமைச்சரவைப்...

02 பக்கம்

## பேராதனை வைத்தியசாலை மயக்க ஊசியால் பல சிறுவர்கள் உயிரிழப்பா?

### சஜித் சபையில் கேள்வி



பேராதனை வைத்தியசாலையில் செலுத்தப்பட்ட மயக்க ஊசி காரணமாக பல சிறுவர்கள் உயிரிழந்துள்ளதாகவும் இந்த ஊசிகள் அகற்றப்படுவதாக கூறப்பட்டாலும் அவை தொடர்ந்தும் பயன்படுத்தப்படுவதாகவும் தகவல்கள் வெளியாகி வருவதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச நேற்று (20) பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

இது தொடர்பில் பிரதமரிடம் கேள்வி எழுப்பியபோதே எதிர்க்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது,

பேராதனை வைத்தியசாலையில் மயக்க ஊசி மூலம் விசம் கலந்து இரண்டு சிறுவர்கள் உயிரிழந்துள்ளதாகவும் இதற்கு முன்பும் பல உயிரிழப்புகள் நடந்துள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

02 பக்கம்

## ஜனாதிபதி - பொதுநலவாய அமைப்பின் செயலாளர் நாயகம் இடையே சந்திப்பு

பிரித்தானியாவுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பொதுநலவாய அமைப்பின் செயலாளர் நாயகம் பெட்ரிசியா ஸ்கொட்லண்டை(Patricia Scotland) சந்தித்துள்ளார்.

இந்தச் சந்திப்பின்போது, பொதுநலவாய அமைப்பினால் முன்னெடுக்கப்படவுள்ள டிஜிட்டல் மயமாக்கல் செயற்றிட்டம் தொடர்பில் அமைப்பின் செயலாளர் நாயகம் - ஜனாதிபதி இடையே கலந்துரையாடப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

02 பக்கம்



## எச்.ஐ.வி. தொற்றுக்குள்ளானோர் வீதம் சடுதியாக அதிகரிப்பு

•நா.தினுஷா

நடப்பாண்டின் முதல் காலாண்டு முடிவில் 5ஆயிரத்து 176 பேருக்கு எச்.ஐ.வி. தொற்று ஏற்பட்டுள்ளதாகவும் எயிட்ஸ் நோயினால் 15 பேர் உயிரிழந்திருப்பதாகவும் தேசிய பாலியல் நோய் அல்லது எயிட்ஸ் தடுப்பு வேலைத்திட்டத்தின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த வேலைத்திட்டம் வெளியிட்டுள்ள அறிக்கைக்கமைய, 15 - 24 வயதுக்கிடையில் 22 ஆண்களும் 03 பெண்களும் பாலியல் தொற்றுக்குள்ளாகியுள்ளதாகவும் பாலியல் தொற்றினால் பாதிப்புக்குள்ளாகும் ஆண்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், நாட்டில் அண்ணளவாக 4 ஆயிரத்து 100 (3700-4700) வரையிலான வயதுக்கு வந்தவர்களும் சிறுவர்களும் பாலியல் தொற்றுடன் வாழ்ந்து வருவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளதுடன் 2022ஆம் ஆண்டு வயதுக்கு வந்தவர்களிடையே 200 வரையிலானவர்கள் புதிதாக பாதிக்கப்பட்டவர்களாகவும் 100 வரையிலானவர்கள் எயிட்ஸினால் உயிரிழப்பையும்...

02 பக்கம்

## இராணுவ வீரர்களுக்கு மாதாந்த உணவு கொடுப்பனவு அதிகரிப்பு

### ஜனாதிபதி ரணில் பரிந்துரை

2022ஆம் ஆண்டில் நடுப்பகுதியில் இலங்கையில் ஏற்பட்ட பொருளாதார வீழ்ச்சியின் தாக்கத்தைக் குறைக்கும் வகையில், இராணுவத் தளபதியின் வேண்டுகோளுக்கிணங்க அனைத்து இராணுவத்தினரின் மாதாந்த உணவு கொடுப்பனவு தொகையை ஏறக்குறைய 10ஆயிரம் ரூபாவால் அதிகரிக்க ஜனாதிபதி பரிந்துரைத்துள்ளார்.

அதற்கமைய, 2023 ஏப்ரல் மாதத்திலிருந்து அனைத்து இராணுவ வீரர்களின் மாதாந்த உணவு கொடுப்பனவு அதிகரிக்கப்பட்டு, மே மாதம் முதல் அனைத்து இராணுவ உறுப்பினர்களின் சம்பளத்துடன் வழங்கப்படுகின்றது.

போரில் காயமடைந்து ஓய்வுபெற்ற மற்றும் மரணமடைந்த இராணுவ வீரர்களுக்கு மே மாத சம்பளத்தில் வழங்க வேண்டிய உணவுக்கான கொடுப்பனவு தொகை நிர்வாகக் கடமைகள் காரணமாக வழங்குவதற்கு தாமதம் ஏற்பட்டது.

02 பக்கம்

## உர விநியோகம் தொடர்பான சிக்கல்களை முறையிடலாம்

### தொலைபேசி இலக்கங்கள் அறிவிப்பு



விவசாயிகளுக்கான உரம், உர வவுச்சர் விநியோகம் தொடர்பான சிக்கல்களை முறையிடுவதற்கு இரண்டு தொலைபேசி இலக்கங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

சிறுபோக நெற்செய்கைக்கான உரத்தை பெற்றுக்கொள்வதற்குரிய வவுச்சர்கள் இதுவரை கிடைக்கவில்லை எனவும் யூரியா உள்ளிட்ட ஏனைய உரங்களை பெற்றுக்கொள்வது தொடர்பிலும் தொடர்ச்சியாக விவசாயிகளிடம் இருந்து முறைப்பாடுகள் கிடைப்பதாக விவசாய அபிவிருத்தித் திணைக்களமும் தேசிய உரச் செயலகமும் அறிவித்துள்ளன.

02 பக்கம்

### கமெண்ட் கந்தர்...



தலதா அம்மா ஏதோ சொல்ல வாரா... ரணில் நல்லவர் என்றால் சஜித்?

## ஜனாதிபதி ரணில் நல்லவர் தான்: அவர் இருக்கும் இடம் தவறானது!

### சொல்கிறார் தலதா



•நா.தினுஷா

ரணில் விக்கிரமசிங்க எங்களுக்கு புதியவர் இல்லை. அவரை பற்றி நாங்கள் அறிவோம். அவர் எங்களின் தலைவராவார். அவருடன் இருக்கும் குழுவினர் தொடர்பிலேயே நாங்கள் அதிருப்தியில் இருக்கிறோம். அன்று போன்று இன்றும் ரணில் மீது எங்களுக்கு மதிப்பு இருக்கிறது. அவர் தொடர்பில் எந்தப் பிரச்சினையும் இல்லை. ஆனால், அந்த அசுத்தமான கிடங்கில் இருக்கவே ஜனாதிபதி விரும்புகிறார் என்பதே எங்களின் பிரச்சினையாகும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் தலதா அத்துகோரள தெரிவித்தார்.

02 பக்கம்

## தமிழர்களுக்கு எதிராகத் தொடரும் கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலை

### அவுஸ்திரேலிய செனெட்டர் கண்டனம்



தமிழ் மக்களுக்கு சுயநிர்ணய உரிமைக்குள் உள்ள உரிமை பாதுகாப்பு மற்றும் சமாதானத்துக்கு கிறீன்ஸ் கட்சி ஆதரவளிக்கின்றது என கட்சியின் செனெட்டர் டேவிட் சூபிரிட்ஜ் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் கூறியதாவது, இன்று நான் தமிழ் மக்களுக்கு ஆதரவை தெரிவிக்க விரும்புகின்றேன். தமிழ் அகதிகள் பேரவையின் அலுவலகத்தை திறந்துவைக்கும் நிகழ்வுக்கு...

02 பக்கம்

### உஷ்



சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளை ஏற்று ஊழியர் சேமலாப நிதியம் அல்லது ஊழியர் நம்பிக்கை நிதிய கணக்குகளில் அரசாங்கம் கை வைக்குமானால் அரசாங்க நிதி தொடர்பான பாராளுமன்ற குழுவின் தலைமைப் பதவியில் இருந்து விலகுமாறு ஹர்ஷ டி சில்வாவை ஐக்கிய மக்கள் சக்தி கோருமென தகவல் வெளியாகியுள்ளது.

ஏற்கனவே இந்த பதவியை ஹர்ஷ ஏற்றதால் கட்சிக்கு மக்களிடம் இருந்த செல்வாக்கு பாரிய வீழ்ச்சியை கண்டுள்ளதாக கருதுகிறது ஐக்கிய மக்கள் சக்தி. எனவே அதிலிருந்து விலகுவதே நல்லதென கருதுகிறது அக்கட்சி.

## டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம்

# மேல் மாகாணத்தில் சோதனை நடவடிக்கை

டெங்கு ஒழிப்புத் திட்டத்துக்கமைய மேல் மாகாணத்தில் அலுவலகங்கள் மற்றும் ஏனைய பகுதிகளை சோதனையிடுவதற்கான பரந்த வேலைத்திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய வார நாட்களின் திங்கட்கிழமைகளில் தனியார் பாடசாலைகள், அரசாங்க பாடசாலைகள், தனியார் கல்வி நிறுவனங்கள், உயர்க் கல்வி நிறுவனங்கள், (பல்கலைக்கழகங்கள் / பிரிவெனாக்கள்) ஆகிய இடங்களிலும் செவ்வாய்க்கிழமைகளில் தொழிற்சாலைகளிலும் புதன்கிழமைகளில் வேலைத்தளங்களிலும் வியாழக்கிழமைகளில் ஏனைய தனியார் நிறுவனங்களிலும் வெள்ளிக்கிழமைகளில் அரச நிறுவனங்களிலும் சனிக்கிழமைகளில் வீடுகள் மற்றும் வீட்டுத் தோட்டங்களை அண்மித்த பகுதிகளிலும் ஞாயிற்றுக்கிழமைகளில் வழிபாட்டுத் தலங்களிலும் சோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் நியமிக்கப்பட்ட டெங்கு ஒழிப்புக்கான நிபுணர்கள் குழுவின் மேல் மாகாணத்துக்கான உப குழு அண்மையில் கூடியபோது எடுக்கப்பட்ட தீர்மானங்களுக்கமைய இந்த திட்டம் நடைமுறைப் படுத்தப்படவுள்ளது.

அதேபோல் ஏதேனும் ஒரு நிறுவனத்துக்கு மேலதிக நாட்கள் அவசியப்படும் பட்சத்தில் அது தொடர்பில் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்துக்கு அறிவிக்குமாறும் அறிவுறுத்தப் பட்டுள்ளது.

வாராந்த சோதனையிடலின்போது தெரிவு செய்யப்படும் தொண்டர் குழுக்கள் ஊடாக சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்துக்கு மாதாந்தம் அறிக்கைகளை சமர்ப்பிக்க வேண்டியது அவசியமாகும்.

தொடர்ச்சியாக பதிவாகும் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கையை மட்டுப்படுத்தும் வகையில் டெங்கு நுளம்புக் கடியிலிருந்து ஆரம்ப வகுப்பு மற்றும் ஏனைய மாணவர்களை பாதுகாக்கும் வகையில் பெற்றோர்களுக்கு மேலதிக செலவீனங்களை ஏற்படுத்தாதவாறு பொருத்தமான ஆடைகளை அணிவிப்பதற்கான யோசனைகளும் முன்வைக்கப்பட்டுள்ளன.

## வலய மட்ட கிரிக்கெட் போட்டி

# ஆண்டிமுனை வித்தியாலயம் மாகாண மட்டத்துக்கு தெரிவு



(உடப்பு செய்தியாளர்)

புத்தளம் வலயமட்ட கிரிக்கெட் போட்டி செவ்வாய்க்கிழமை (20) தில்லையடி பாடசாலை மைதானத்தில் இடம்பெற்றது.

இதன்போது ஆண்டிமுனை தேசிய பாடசாலை பெண்கள் அணி வெற்றி பெற்று மாகாண மட்டத்துக்கு தெரிவாகியுள்ளது.

அதிபர், ஆசிரியர்கள் உட்பட பாடசாலை சமூகத்தினர் இவர்களைப் பாராட்டியுள்ளார்கள்.

# உழ்ஹிய்யா வழங்குவதற்காக மாடுகளை அறுப்பது தொடர்பான கலந்துரையாடல்

(மாளிகைக்காடு செய்தியாளர், பாறுக் ஷிஹான்)

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் உணவுக்காக மாடுகளை அறுப்பது தொடர்பிலும் எதிர்வரும் ஹஜ் பெருநாளை முன்னிட்டு உழ்ஹிய்யா வழங்குவதற்காக மாடுகளை அறுப்பது தொடர்பிலும் தீர்மானிப்பதற்கான விசேட கலந்துரையாடல் செவ்வாய்க்கிழமை(20) சுகாதார வைத்திய அதிகாரிகளின் பங்குபற்றுதலுடன் நடைபெற்றது.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஐ.எல்.எம். றிபாஸ் தலைமையில் நடைபெற்ற இக்கலந்துரையாடலில் எதிர்வரும் ஹஜ் பெருநாளை முன்னிட்டு ஆடு, மாடுகளை அறுப்பதற்கான விசேட பொறிமுறைகளை வகுத்து செயல்படுவது என தீர்மானிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக சுகாதார வைத்திய அதிகாரிகள் தத்தமது பிரதேசங்களில் மாடுகளுக்கு ஏற்பட்டுள்ள நோய்ப் பரவலின் தன்மை மற்றும் ஏனைய சுகாதார நடைமுறைகளை கவனத்திற் கொண்டு, உலமா சபை மற்றும் உள்ளூராட்சி மன்றங்களின் பங்களிப்புடன் விசேட தீர்மானங்களை மேற்கொண்டு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பணிப்பாளரினால் பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளதுடன் மாறாக அனுமதி பெறப்படாமல் நோய்வாய்ப்பட்ட மாடுகளை அறுப்பவர்களுக்கு அதிகபட்ச சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

### உர விநியோகம்...

உரத்தை பெற்றுக்கொள்வதற்கான வவுச்சர்கள் கிடைக்காவிடின், 071 764 9054 என்ற இலக்கத்துக்கும் உர விநியோகம் தொடர்பான சிக்கல்களுக்கு 077 349 7565 என்ற இலக்கத்துக்கும் அறிவிக்க முடியும்.

இதேவேளை, விவசாயத்துறையை நவீனமயப்படுத்தும் செயற்றிட்டத்தினூடாக 2022ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட உற்பத்திகளூடாக 36 மில்லியன் டொலர் வருமானம் ஈட்டப்பட்டுள்ளது.




# அநுராதபுரம் வைத்தியசாலையில் வைத்தியர் மீது தாக்குதல்

## பக்கச்சார்பற்ற விசாரணை கோரும் மருத்துவ அதிகாரிகள் சங்கம்

அநுராதபுரம் போதனா வைத்தியசாலையில் வைத்தியர் ஒருவர் தாக்கப்பட்டமை தொடர்பில் பக்கச்சார்பற்ற விசாரணைகளை நடத்துமாறு அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கம் அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

தாக்குதல் சம்பவம் தொடர்பில் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் வைத்தியர் ரஞ்சன் கனேகம தெரிவித்துள்ளார்.

உத்தியோகபூர்வ விடயம் தொடர்பான பிரச்சினையின் அடிப்படையில் அநுராதபுரம் போதனா வைத்தியசாலையின் இரு வைத்தியர்களுக்கிடையில் ஏற்பட்ட வார்த்தைப் பிரயோகத்தின் பின்னர் வைத்தியரொருவர் மற்றைய வைத்தியரை தாக்கியுள்ளார்.

இதனால் காயமடைந்த வைத்தியர் அநுராதபுரம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை



பெற்று வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையிலேயே இந்த சம்பவம் தொடர்பில் பக்கச்சார்பற்ற விசாரணை நடத்தப்பட வேண்டும் என அநுராதபுரம் போதனா வைத்தியசாலையின் அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் வைத்தியர் ரஞ்சன் கனேகம தெரிவித்துள்ளார்.

### சம்பள உயர்வு...

இந்த நிறுவனங்கள் நட்டத்தில் இயங்கிக் கொண்டு சம்பளத்தை அதிகரிக்க முடியாது. அவை இலாபத்தில் இயங்கினால் சம்பளத்தை அதிகரிக்குமாறு நாம் கேட்டுக்கொள்கிறோம் என்றார்.

இதேவேளை, முதலாளிமார் சம்மேளனத்தின் சார்பில் கருத்து வெளியிட்ட ரொஷான் இராஜதுரை, நாம் முகாமைத்துவம் என்ற ரீதியில் தொழிலாளர்களின் சம்பளத்தை உயர்த்துவதற்கு விரும்புகிறோம். எனினும் யதார்த்தம் என்ன? சம்பளம் உள்ளிட்ட ஏனைய கொடுப்பனவுகளை எமக்குக் கிடைக்கும் இலாபத்தின் அடிப்படையிலேயே உயர்த்த முடியும். அதனை நாம் நிரூபித்திருக்கிறோம்.

நாம் பெருந்தோட்டங்களை பொறுப்பேற்கும் போது 68 ரூபா சம்பளமே வழங்கப்பட்டது. ஆயினும், தற்போது சம்பளம் 21 மடங்கால் உயர்த்தப்பட்டுள்ளது. ஆனபோதும் உலக சந்தையில் தேயிலைக்குக் கிடைக்கும் விலை 08 மடங்கால் அதிகரித்துள்ளது.

நாம் ஏன் எப்போதும் சம்பளத்தைப் பற்றி மாத்திரம் பேச வேண்டும்? வெளியார் உற்பத்தி முறைமை பற்றி நாம் ஏற்கனவே பேசியிருந்தோம். அந்த முறையின் கீழ் 50 ஆயிரம் ரூபாவுக்கும் அதிகமான தொகையை தொழிலாளர்கள் சம்பளமாக பெற்று வருகிறார்கள். உற்பத்தி அதிகரிப்புக்கேற்ப அவர்கள் சம்பளம் அதிகமாக பெறுகிறார்கள்.

இந்த நாட்டில் 150 வருடங்களுக்கு மேலாக வரவின் அடிப்படையில் சம்பளம் வழங்கப்படுவது மாற்றப்பட வேண்டும்.

தொழிலாளர்கள் தொழிலுக்குச் சென்று நான்கு அல்லது ஐந்து மணித்தியாலங்களில் முப்பது கிலோகிராமுக்கும் அதிகமாக கொழுந்து பறிக்க முடியும் என்பதை நாம் நன்கு அறிவோம். அதற்குரிய கடந்த கால தரவுகள் எம்மிடம் உள்ளன. தேயிலை உற்பத்தி அதிகரிக்கப்படாத பட்சத்தில் சம்பளத்தை அதிகரிப்பது சிரமம் என்றார்.

### பேராதனை வைத்தியசாலை...

இந்த நச்சுத் தடுப்பூசிகள் அகற்றப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் அவை இன்னும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன என்பதுதான் செய்தி. இதை பிரதமர் ஆராய்ந்து தெளிவான பதில் அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம் என்றார்.

### இராணுவ வீரர்களுக்கு...

இவர்களுடைய ஏப்ரல் மற்றும் மே மாதத்துக்கான தாமத உணவு கொடுப்பனவுகள் சம்பளத்துடன் சேர்த்து வழங்குவதற்கான ஏற்பாடுகளை செவ்வாய்க்கிழமை (20) இலங்கை இராணுவம் மேற்கொண்டது.

### டெங்கு ஒழிப்பு உதவியாளர்...

பத்திரங்களை சமர்ப்பித்துள்ளேன். எனினும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் எதிர்ப்புத் தெரிவித்துள்ளது. அடுத்த அமைச்சரவைக் கூட்டத்தில் சமர்ப்பிக்க மற்றுமொரு அமைச்சரவைப் பத்திரத்தில் நான் கையெழுத்திட்டுள்ளேன். இது தொடர்பாக நிர்வாக சேவைகள் திணைக்கள அதிகாரிகளை நேரில் சந்திக்க முடிவு செய்துள்ளேன்" என்றார்.

சுமார் 8ஆயிரம் டெங்கு தடுப்பு உதவியாளர்கள் நிரந்தர சேவைக்கு உள்வாங்கப்படுவார்களா என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும்போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

குறித்த டெங்கு ஒழிப்பு உதவியாளர்களுக்கு சம்பளம் ஒரு நாளைக்கு 700 ரூபா வழங்கப் படுகிறது.

### ஜனாதிபதி - பொதுநலவாய...

காலநிலை மாற்றத்தை எதிர்கொள்வதற்கு அரசின் வழிமுறைகள் மற்றும் செயற்றிட்டங்கள் தொடர்பில் ஜனாதிபதி இதன்போது கருத்து தெரிவித்ததாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு குறிப்பிட்டுள்ளது.

### எச்.ஐ.வி. தொற்றுக்குள்ளானோர்...

இந்த தொற்றினால் பாதிக்கப்பட்டவர்களின் 15 – 49 வயதுக்கு இடைப்பட்டவர்களின் எண்ணிக்கை 0.1 சதவீதமாக காணப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் அவ்வறிக்கையில்,

பாலின அடிப்படையில் 3ஆயிரத்து 806 ஆண்களும் ஆயிரத்து 361 பெண்களும் 09 மாற்று பாலினத்தவர்களும் எச்.ஐ.வி. அல்லது எயிட்ஸ் தொற்றுக்குள்ளாகியுள்ளார்கள்.

இந்த எண்ணிக்கையை 2022ஆம் ஆண்டின் முதலாவது காலாண்டுடன் ஒப்பிடும்போது இந்த தொற்றுக்குள்ளானவர்களின் எண்ணிக்கை இந்த வருடம் 620 ஆக அதிகரித்துள்ளது. கடந்த வருடம் மொத்தமாக 19ஆயிரத்து 84 பேர் பாலியல் தொற்றினால் பாதிக்கப்பட்டுள்ளதுடன் அவர்களில் 13ஆயிரத்து 805 பேர் ஆண்களும் 5ஆயிரத்து 270 பெண்களும் 09 மாற்று பாலினத்தை சேர்ந்தவர்களும் உள்ளடங்குகின்றனர். ஆகவே, இந்த தகவல்களின் அடிப்படையில் கடந்த வருடத்தின் இறுதியிலிருந்து பாலியல் தொற்றினால் பாதிக்கப் பட்டவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

மேலும், சென்ற ஆண்டு 15 வயது முதல் 24 வயதுக்கிடைப்பட்ட 68 ஆண்களும் 06 பெண்களும் மாற்று பாலினத்தவர் ஒருவரும் இந்த நோயினால் பாதிப்படைந்துள்ளதுடன் 2022ஆம் ஆண்டில் எச்.ஐ.வியினால் மொத்தமாக 66 பேர் உயிரிழந்துள்ளனர்.

இதேவேளை, 2022ஆம் ஆண்டு 09 இலட்சத்து 66 ஆயிரத்து 67 பேரிடம் எச்.ஐ.வி. பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

### ஹஜ் யாத்திரைக்கு...

வருடாந்தம் இந்தக் காலப்பகுதியில் ஆயிரக்கணக்கான மக்கள் ஹஜ் தொழுகைக்கு செல்வார்கள்.

அதற்கமைய, ஹஜ் தொழுகைக்காக அந்த நாட்டுக்குள் நுழைவதற்கு வழங்கும் அனுமதிப் பத்திரங்களில் கட்டாயம் மெனிங் கோகோகல் தடுப்பூசி அல்லது மூளை காய்ச்சலுக்கு பெற்றுக் கொடுக்கப்படும் இந்த தடுப்பூசி பெற்றுக்கொண்டு அதற்கான சான்றிதழை முன்வைக்க வேண்டும்.

ஆனால், கடந்த வாரங்களில் பதிவு செய்யப்பட்ட மெனிங்கோகோகல் என்ற தடுப்பூசி நாட்டில் இல்லை என்றே செய்திகள் வெளியிடப்பட்டிருந்தன.

பல்வேறு குற்றச்சாட் டுகளும் முன்வைக்கப்பட்டுள்ளன. சரியான ஒழுங்குபடுத்தல்கள் எதுவுமின்றி பதிவு செய்யப்படாமல் சட்டவிரோதமான முறையில் மெனிங்கோகோகல் தடுப்பூசி நாட்டுக்கு கொண்டுவரப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

மேலும், இவ்வாறு கொண்டுவரப்பட்ட இந்த தடுப்பூசிகள் ஒருசில மருத்துவ மத்திய நிலையங்களினூடாக தேவைப்பாடுடைய நபர்களுக்கு பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளதாகவும் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளன. ஆகவே, இந்த காலப்பகுதியில் மெனிங்கோகோகல் வகையைச் சேர்ந்த தடுப்பூசிக்கான கேள்வி நிலை ஏற்படும் என்பதை அதிகாரிகள் அறிந்து வைத்திருக்க வேண்டும். ஹஜ் யாத்திரை வருடம் முழுவதும் செல்வதில்லை. குறித்த காலப்பகுதியிலேயே இந்த யாத்திரை செல்கிறார்கள்.

ஆகவே, இந்த காலப்பகுதியில் யாத்திரை செல்லும் பக்தர்களுக்கு இந்த தடுப்பூசியை பெற்றுக்கொடுக்க வேண்டியது கட்டாயமாகும். இதனூடாக ஏற்பட்டுள்ள வாய்ப்பை மருந்து மாபியாக்கல் சட்டவிரோதமாக பணம் சம்பாதிப்பதற்காக பயன்படுத்திக் கொண்டுள்ளார்கள். மேலும், இந்த தடுப்பூசியை அவ்வாறு சட்டவிரோதமாக நாட்டுக்குள் கொண்டுவர முடியாது.

தடுப்பூசியின் தரத்தை பேணாமல் சட்டவிரோதமாக முறையற்ற ரீதியில் அந்த தடுப்பூசிகள் நாட்டுக்குள் கொண்டுவரப்பட்டிருக்குமாக இருந்தால், அவற்றை பேணுவதில் சவாலாக இருந்திருக்கும். இது பாரதூரமான பிரச்சினையாகும்.

இது நோயாளர்களை ஏமாற்றி, மோசடியான முறையில் நாட்டின் சட்டத்திட்டங்களை மீறும் வகையில் முன்னெடுக்கப்பட்ட சம்பவமாகவே கொள்ள வேண்டும்.

இதுதொடர்பில் அதிகாரிகள் கவனம் செலுத்தி சட்டத்தை அமுல்படுத்த வேண்டும் என்பதுடன் உண்மை நிலையை நாட்டுக்கு தெரியப்படுத்த வேண்டும்.

இந்நிலையில், ஹஜ் யாத்திரை செல்லும் பக்தர்களுக்கு மாற்று வழியை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்பதுடன் அவர்களின் நம்பிக்கையை நிறைவேற்றிக்கொள்வதற்கான வாய்ப்புகளை வழங்கவேண்டும். சுகாதார அமைச்சு இதற்கு சரியான விளக்கத்தை பெற்றுக்கொடுக்க வேண்டும் - என்றார்.

### தமிழர்களுக்கு...

என்னை அவர்கள் அழைத்தது குறித்து மகிழ்ச்சியடைகின்றேன்.

தமிழ் அகதிகள் பேரவை தமிழ் அகதிகளுக்கு தனிப்பட்ட ஆலோசனைகளை வழங்குதல், கல்வி தொடர்பான உதவிகளை வழங்குதல், அகதிகள் தொடர்பான பரப்புரைகளை முன்னெடுத்தல் போன்ற முக்கியமான சேவைகளை அகதிகளுக்கு வழங்கிவருகின்றது.

கடந்த மாதத்துடன் முள்ளிவாய்க்காலில் தமிழ் மக்கள் படுகொலை செய்யப்பட்டு 14 வருடங்களாகின்றபோதிலும், அதற்கு காரணமானவர்கள் எவரும் இதுவரை பொறுப்புக்கூறலுக்கு உட்படுத்தப்படவில்லை.

தமிழ்மக்களின் தனிநாட்டுக்கான போராட்டத்துக்கு எதிரான இராணுவ நடவடிக்கையின்போது இவர்கள் முள்ளிவாய்க்காலில் சிக்கவைக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்டனர்.

அவர்களில் பலர் இன்னமும் இலங்கை அரசாங்கத்திலும் இராணுவத்திலும் உயர்பதவிகளில் நீடிக்கின்றனர் எனவும் குறிப்பிட்டுள்ள அவர், அவுஸ்திரேலிய கிறீன்ஸ் கட்சியினர் இலங்கையில் தமிழர்களுக்கு எதிராக தொடரும் கட்டமைக்கப்பட்ட இனப் படுகொலையை கண்டிக்கின்றது.

தமிழ் மக்களுக்கு சுயநிர்ணய உரிமைக்குள் உள்ள உரிமை, பாதுகாப்பு மற்றும் சமாதானத்துக்கு எங்கள் கட்சி ஆதரவளிக்கின்றது. அவுஸ்திரேலியாவில் உள்ள தமிழீழ அகதிகள் தொடர்பான தீர்மானங்கள், முடிவுகள் குறித்த தகவல்களை பெறுவதில் கடும் சவால்களை எதிர்கொண்டுள்ளனர் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

அவுஸ்திரேலியாவில் தமிழ் அகதிகளின் அடைக்கல கோரிக்கைகளே அதிகளவு நிராகரிக்கப்படுகின்றன எனவும் குறிப்பிட்டுள்ள அவர், எங்கள் நாட்டில் உள்ள தமிழர்கள் நாடு கடத்தப்படலாம் என்ற அச்சத்தில் வாழ்கின்றனர் எனவும் தெரிவித்துள்ளார்.

### ஜனாதிபதி ரணில்...

கொழும்பில் நேற்று (20) ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்கு பதிலளிக்கும்போதே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

இந்த அரசாங்கம் ஆட்சியில் தொடரும் நிலைமை இல்லை என்பதே எனது நிலைப்பாடாகும். மாற்றத்தை கோரிய மக்கள் ஆர்ப்பாட்டம் செய்தார்கள். ஆனால், மக்கள் எதிர்பார்த்த மாற்றமொன்று நாட்டில் இடம்பெறவில்லை. திருட்டுகளும் ஊழல்களும் தொடர்ந்து இடம்பெற்ற வண்ணமே இருக்கின்றன. மறபுறம் எரிபொருள், எரிவாயு உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களின் விலையை மேலும் குறைக்க இந்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும். அதேபோன்று, தேசிய கடன் மற்றும் சர்வதேச கடன்களை செலுத்த ஆரம்பித்ததும் அரசாங்கம் முன்னெடுக்கவுள்ள அடுத்தகட்ட வேலைத்திட்டம் என்னவென்பதை தெளிவுப்படுத்த வேண்டும்.

எரிபொருள் கூட்டுத்தாபனத்தின் 450 எரிபொருள் நிரப்பு நிலையங்களை சீனாவுக்கும் அமெரிக்காவுக்கு விற்றது போன்று, நிவாரணம் வழங்கும் பொறுப்பையும் வேறு எவருக்காவது வழங்கி மக்களுக்கு நிவாரணத்தை பெற்றுக் கொடுக்க அமைச்சர் காஞ்சன நடவடிக்கை எடுப்பார் என்றே கருதுகிறோம்.

அரசாங்கத்தினால் முன்வைக்கப்பட்டுள்ள சட்டமூலங்கள் வரவேற்கத்தக்கவையே. நாட்டில் இடம்பெறவேண்டிய விடயங்களே இடம்பெற்றுள்ளன. அது தொடர்பில் எதுவும் கூற முடியாது. ஆனால், இதற்கு அப்பால், நாளை (இன்று) சமர்ப்பிக்கப்படவுள்ள ஊழல் ஒழிப்பு சட்டமூலத்தில் இதனை விட பரந்துபட்ட வகையில் புதிய திருத்தங்களை மேற்கொள்ள வேண்டும் என்று எதிர்பார்க்கிறோம். இந்த சட்டமூலத்தை நாங்கள் இணங்கி வரவேற்கிறோம்.

இருந்தபோதும், இன்னும் சில மாற்றங்கள் ஏற்படுத்தப்பட வேண்டும்.

குறிப்பாக, பெண்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்படும் பாலியல் இலஞ்சம் தொடர்பான ஏற்பாடுகள் பற்றி இந்த சட்டமூலத்தில் குறிப்பிடப்படவில்லை. அவையும் உள்ளடக்கப்படவேண்டும். இவ்வாறான விடயங்களை ஆரம்பிப்பதே விசேட அம்சமாகும்.

ஒவ்வொரு கட்சிகளுக்கும் வெவ்வேறு அடையாளங்கள் இருக்கின்றன. ஆனாலும், நாட்டில் எதிர்காலத்துக்காக எந்தவொரு கட்சியுடனும் இணைந்து செயலாற்ற நாங்கள் தயாராகவே இருக்கிறோம்.

நாங்கள் பிரதிநிதித்துவப்படுத்திய முந்தைய கட்சியின் தலைவர் என்ற அடிப்படையிலும் நாட்டின் ஜனாதிபதி என்ற அடிப்படையில் அன்று போன்றே இன்றும் அவர் மீது எங்களுக்கு மதிப்பு இருக்கிறது. அவர்கள் தொடர்பில் எந்த பிரச்சினையும் எங்களுக்கு இல்லை. ஆனால், அந்த அசுத்தமான கிடங்கில் இருக்கவே ஜனாதிபதி விரும்புகிறார். அதுவே எங்களுக்கு இருக்கும் பிரச்சினையாகும்.

அவர் எங்களுக்கு புதியவரும் இல்லை. அவர் எங்களின் தலைவர். நானும் அவருடன் இணைந்தே எனது அரசியல் நடவடிக்கைகளை ஆரம்பித்தேன். எனது எட்டு வயதிலிருந்து அவரை அறிந்து வைத்துள்ளேன். அவருடன் இருக்கும் குழுவினர் தொடர்பிலேயே எங்கள் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது என்றார்.

# குற்றமிழைக்கும் தனியார்துறை நிறுவனங்கள் தண்டிக்கப்படும்

## துறைசார் மேற்பார்வைக் குழு





வரலாற்றில் முதன்முறையாக இலஞ்சம் கொடுக்கும் குற்றத்தை இழைக்கும் தனியார் துறை நிறுவனம் ஊழல் எதிர்ப்புச் சட்டமூலத்தால் தண்டிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நியாயமான, சட்டத்தை மதிக்கும் சமூகமொன்று பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழு அதன் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் டபிள்யூ.டி.ஜே.செனவிரத்ன தலைமையில் நேற்று (20) கூடியபோதே மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

ஊழலுக்கு எதிரான ஐக்கிய நாடுகள் சபைச் சமவாயம் மற்றும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஏனைய சர்வதேச நெறிகள், நியமங்கள் அத்துடன் மிகச் சிறந்த செயல்முறைகள் என்பவற்றுக்குப் பயன்கொடுப்பதற்கும், சுயாதீனமான ஆணைக்குழுவொன்றை ஸ்தாபிப்பதற்கு ஏற்பாடு செய்வதற்கும் சொத்துகளையும் பொறுப்புகளையும் வெளிப்படுத்தலுடன் தொடர்புபட்ட தவறுகள் மற்றும் இணைந்த தவறுகளைக் கண்டுபிடிப்பது போன்ற நோக்கத்தில் கொண்டுவரப்படும் ஊழல் எதிர்ப்புச் சட்டமூலம் தொடர்பில் இதன்போது விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

ஊழல் எதிர்ப்புச் சட்டமூலத்தில் தனியார் துறை நிறுவனத்தை குற்றவாளியாக்கும் விதிகள் உள்ளதாகவும் இலஞ்சம் வாங்கிய குற்றச்செயலில் ஈடுபட்ட அரசாங்க நிறுவனங்களுக்கு மாத்திரமே மட்டுப்படுத்தப்பட்டிருந்த நிலையில் வரலாற்றில் முதல் தடவையாக தனியார் துறையினரையும் இதில் உள்ளடக்கியிருப்பதாக கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டது. இதற்கமைய 1995ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் சட்டத்தின் 5ஆம் பிரிவின் வரைவிலக்கணத்தில் கூறப்பட்டவாறு குறித்துரைக்கப்பட்ட தொழில் முயற்சிகள் இதில் உள்ளடங்கும். பொலிஸ் அதிகாரிகளுடன் மட்டுப்படுத்தப்படாமல் விசாரணைகளுக்காக குறிப்பிட்ட துறைகளில் நிபுணத்துவம் பெற்றவர்களை இணைத்துக்கொள்வதற்கும் இந்தச் சட்டமூலத்தில் ஏற்பாடுகள் காணப்படுகின்றன.

உத்தேச சட்டமூலத்தின் நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு இதில் உள்ள சில சரத்துகளில் திருத்தங்களை மேற்கொள்ளவேண்டியிருப்பதாக் மேற்படி குழுவின் உறுப்பினர்கள் சுட்டிக்காட்டினர்.

ஒரு ஜனநாயக சமூகத்தின் பொது நல்வாழ்வின் நீதியான தேவைப்பாடுகளை எதிர்கொள்வதற்கான இலஞ்சம் ஊழலைத் தடுத்தலும் அடியோடு அழித்தலும், ஆளுகையில் வெளிப்படைத் தன்மையை அதிகரித்தல், ஆளுகையின் ஒருமைப்பாட்டை வலுப்படுத்தலும் பொறுப்புக்கூற வேண்டியதை அதிகரித்தலும் இந்தச் சட்டமூலத்தின் நோக்கங்களாகும்.

அரசாங்கம் தொடர்பில் பொதுமக்களின் நம்பிக்கையை அதிகரித்தலும் ஊழலை அடியோடு அழிப்பதற்குப் பொதுமக்களின் பங்குபற்றுகையை வலுப்படுத்தலும், அதன்மீது சுமத்தப்பட்ட பொறுப்புடைமைகளை நிறைவேற்றுவதற்கும் சுயாதீனமான ஆணைக்குழுவொன்றை ஸ்தாபித்தலும் இதன் நோக்கங்களில் உள்ளடங்குகின்றன.

இலஞ்சம், ஊழல், சொத்துகளும் பொறுப்புகளும் தொடர்பான தவறுகள் மற்றும் இணைந்த தவறுகள் என்பன பற்றிப் பூர்வாங்க விசாரணைகளையும் புலனாய்வுகளையும் நடத்துவதற்கும் அவற்றுக்கெதிராக வழக்குத் தொடுப்பதற்கும் சொல்லப்பட்ட ஆணைக்குழுவுக்குப் பணிப்பாணை விடுத்தல், இலஞ்சம் மற்றும் ஊழலைத் தடுத்தல் பற்றி கல்விசார் செயற்பாடுகளை நடத்துதல், ஒருங்கிணைத்தல், பகிரங்க உத்தியோகத்தர்கள் தந்திரமான முறையில் செல்வந்தராவதைத் தடுப்பதற்கான சொத்துகளையும், பொறுப்புகளையும் வெளிப்படுத்துவதற்கான பயனுள்ள முறைமையொன்றை அறிமுகப்படுத்தல், இலஞ்சம் மற்றும் ஊழலைத் தடுப்பதில் முகவராண்மைகளுக்கிடையிலான ஒத்துழைப்பையும் சர்வதேச உடனுழைப்பையும் ஊக்குவித்தல், இலங்கையானது திறத்தவரொருவராகவுள்ள ஊழலுக்கெதிரான ஐக்கிய நாடுகள் சபைச் சமவாயத்தின் கீழும் ஊழல்தடுப்புத் தொடர்பான வேறேதேனும் சர்வதேச சமவாயத்தின் கீழுமான கடப்பாடுகளுக்குப் பயன் கொடுத்தலும் இலங்கையில் நேர்மைக் கலாசாரத்தை நிலைநாட்டுவதற்கென சர்வதேச நியமங்களையும் மிகச்சிறந்த செயல்முறைகளை ஏற்றங்கீகாரமளித்தலும் இந்தச் சட்டமூலத்தின் நோக்கங்களாகும்.

இக் கூட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர்களான பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ், அநுர பிரியதர்ஷன யாப்பா, சந்திம வீரக்கொடி, தலதா அத்துகோரல, மதுர விதானகே, இசுறு தொடங்கொட, கே.பி.எஸ். குமாரசிறி, ஜயந்த வீரசிங்க, வஜிர அபேவர்தன ஆகியோர் கலந்துகொண்டனர்.

### ஊழல் எதிர்ப்பு சட்டமூலம்

# பாராளுமன்ற பெண் உறுப்பினர்களின் ஒன்றியத்தினால் திருத்தங்கள் முன்மொழிவு

பாராளுமன்றத்தில் இன்று(21) விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு நிறைவேற்றப்படவுள்ள ஊழல் எதிர்ப்பு சட்டமூலத்துக்கு பாராளுமன்ற பெண் உறுப்பினர்களின் ஒன்றியத்தினால் திருத்தங்கள் முன்மொழியப்பட்டுள்ளன.

பாராளுமன்ற பெண் உறுப்பினர்களின் ஒன்றியம் மற்றும் பாலினம் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழு சார்பில் பாலியல் இலஞ்சம் தொடர்பான எண்ணக்கரு ஊழல் எதிர்ப்பு சட்டமூலத்தில் உள்வாங்கப்பட்டுள்ளமை தொடர்பில் பாராளுமன்ற பெண் உறுப்பினர்களின் ஒன்றியம் மகிழ்ச்சியடைவதாக ஒன்றியத்தின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் சுதர்ஷினி பர்னாந்துபுள்ளே சபாநாயகருக்குக் கடிதம் மூலம் அறிவித்துள்ளார்.

எனினும், இன்று (21) இடம்பெறவுள்ள விவாதத்துக்கு முன்னர் மறுசீரமைக்கப்பட வேண்டிய இரண்டு முன்னுரிமைகள் இனங்காணப்பட்டுள்ளதாக சுதர்ஷினி பர்னாந்துபுள்ளே அறிவித்துள்ளார். அதில் முதலாவதாக, சட்டமூலத்தில் குறிப்பிடப்பட்டுள்ள "பாலியல் நாட்டம்" எனும் குற்றத்தில் மாற்றம் ஏற்பட வேண்டும் எனவும், "நாட்டம்" என்பதன் மூலம் குற்றம் சிறிதாக்கப்படுவதாகவும் அதனால், அதற்குப் பதிலாக "பாலியல் இலஞ்சம்" எனும் பதம் மூலம் செயற்பாட்டின் குற்றத்தின் தீவிரத்தன்மை சிறந்த முறையில் காட்டப்படுவதால் அந்தப் பதத்தைப் பயன்படுத்துமாறும் ஒன்றியம் கோரிக்கை விடுத்துள்ளது.

இரண்டாவதாக, சட்டமூலத்தில் குறிப்பிடப்பட்டுள்ள "இலஞ்சம் சம்பந்தமாக, இலஞ்சம் வழங்கும் நபர் ஒருவருக்கு எதிராக சட்டரீதியான நடவடிக்கை எடுக்க முடியும்" எனும் கருத்தைக்கொண்ட பிரிவைக் காரணமாகக் கொண்டு "பாலியல் இலஞ்சம்" என்பதில் உள்ள பாலினம் காரணமாக பாலியல் இலஞ்சம் தொடர்பில் இலஞ்சம் வழங்கும் நபருக்கு அநியாயம் இழைக்கப்படக்கூடும் என சுதர்ஷினி பர்னாந்துபுள்ளே சுட்டிக்காட்டியுள்ளார்.

அதனால் பாலியல் இலஞ்சம் வழங்கும் நபர் ஒருவருக்கு எதிராக சட்ட ரீதியான நடவடிக்கை எடுப்பதைத் தடுக்கும் வகையில் விதிவிலக்கொன்றை உள்வாங்குமாறு கோரிக்கை விடுப்பதாக பெண் உறுப்பினர்களின் ஒன்றியம் சபாநாயகருக்கு அறிவித்துள்ளது.

### அமரகீர்த்தி அத்துகோரள கொலை :

# 39 பேருக்கு எதிராக சட்ட மா அதிபரினால் குற்றப் பத்திரிகை

பொலன்னறுவை மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அமரகீர்த்தி அத்துகோரள மற்றும் அவரது பாதுகாப்பு உத்தியோகத்தர் ஆகியோரின் கொலைச் சம்பவம் தொடர்பில் 39 பேருக்கு எதிராக சட்ட மா அதிபரினால் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை (19) கம்பஹா மேல் நீதிமன்ற மூவரடங்கிய நீதியரசர்கள் குழாம் முன்னிலையில் குற்றப்பத்திரிகை கையளிக்கப்பட்டது.

இந்தப் பிரதிவாதிகளுக்கு எதிராக கொலை உள்ளிட்ட 14 குற்றச்சாட்டுகளின் கீழ் சட்ட மா அதிபரினால் தாக்கல் செய்யப்பட்ட குற்றப்பத்திரிகை திறந்த நீதிமன்றில் உயர்நீதிமன்ற நீதிபதிகளான சஹான் மாபா பண்டார (தலைவர்), ரஷ்மி சிங்கப்புலி மற்றும் டி.ஏ. ருவன் பத்திரன ஆகிய மூவரடங்கிய நீதிபதிகள் குழாம் முன்னிலையில் கையளிக்கப்பட்டது.

குற்றப்பத்திரிகையை கையளித்ததன் பின்னர் நீதிமன்றில் வாதத்தை முன்வைத்த பிரதி சொலிசிட்டர் ஜெனரல் ஜனக பண்டார, இது விசேட வழக்கு என்பதால் தினந்தோறும் அல்லது வாரத்தில் சில தினங்களில் வழக்கு விசாரணையை நடத்துமாறு கேட்டுக்கொண்டார்.

# தூதுவர் ஜெயநாத் கொலம்பகே – இந்தோனேஷிய தொழிலதிபர் சந்திப்பு



இந்தோனேஷியாவுக்கான இலங்கைத் தூதுவர் அட்மிரல் பேராசிரியர் ஜெயநாத் கொலம்பகேவுக்கும் இந்தோனேஷியாவின் தொழிலதிபரும் இந்தோனேஷிய வர்த்தக மற்றும் தொழில்துறை அதிகாரியுமான கெவின் வூவுக்குமிடையே சந்திப்பொன்று இடம்பெற்றது. ஜகார்த்தாவில் உள்ள இலங்கைத் தூதரகத்தில் கடந்த 16ஆம் திகதி இச்சந்திப்பு இடம்பெற்றது. இதன்போது இலங்கைக்கும் இந்தோனேஷியாவுக்கும் இடையிலான வர்த்தகம், சுற்றுலா மற்றும் முதலீடுகள் தொடர்பாக தூதுவர் விரிவாக விபரித்தார்.

# வெளிநாட்டில் வேலை செய்யும் பெண்களின் பிரச்சினைகளுக்கு தீர்வுகோரி போராட்டம்






வெளிநாட்டில் வேலை செய்யும் பெண்கள் எதிர்கொண்டுள்ள பிரச்சினைகளுக்கு தீர்வு பெற்றுத்தருமாறு கோரி போராட்டமொன்று நேற்று(20) முன்னெடுக்கப்பட்டது. சுதந்திரத்துக்கான பெண்கள் அமைப்பினர் இப்போராட்டத்தை ஏற்பாடு செய்திருந்தனர்.

குறித்த போராட்டம் கொழும்பு, பத்தரமுல்லை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்துக்கு முன்னால் இடம்பெற்றது.

### முட்டை பிரச்சினைக்கு நீண்டகாலத் தீர்வு

# ஒரு இலட்சம் கோழிக் குஞ்சுகளை விநியோகிக்கும் திட்டம் ஆரம்பம்

முட்டை பிரச்சினைக்கு நீண்டகாலத் தீர்வாக நாடு முழுவதும் ஒரு இலட்சம் கோழிக்குஞ்சுகளை விநியோகிக்கும் திட்டத்தை அரசாங்கம் ஆரம்பித்துள்ளது.

வர்த்தக மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சர் நளின் பெர்னாண்டோவின் ஆலோசனைக்கிணங்க மேற்குறித்த திட்டம் கம்பஹா மாவட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கம்பஹா மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற இது தொடர்பான ஆரம்ப நிகழ்வில் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான முட்டை உற்பத்தியாளர்களுக்கு 2,300 கோழிக்குஞ்சுகள் வழங்கப்பட்டன.

இத்திட்டத்தின் பயன்கள் அடுத்த 4 மாதங்களில் முழு மக்களையும் சென்றடையும் என வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்தார்.

# இறக்குமதி செய்யப்படும் சீமெந்துக்கான வரி அதிகரிப்பு

இறக்குமதி செய்யப்படும் சீமெந்துக்கு விதிக்கப்பட்டுள்ள செஸ் வரியை அதிகரிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

ஜூன் 17ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் குறித்த வரி திருத்தப்பட்டுள்ளதாக முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

இதன்படி, செயற்கை நிறம் கொண்ட அல்லது நிறமற்ற வெள்ளை சீமெந்து ஒரு கிலோ கிராமுக்கு விதிக்கப்பட்டிருந்த 3 ரூபா செஸ் வரி 5 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

மேலும், 50 கிலோ கிராம் மற்றும் அதற்கும் குறைவான பொதிகளில் இறக்குமதி செய்யப்படும் ஏனைய போர்ட்லேண்ட் சீமெந்து ஒரு கிலோ கிராமுக்கு விதிக்கப்படும் 5 ரூபா செஸ் வரி 8 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளதாக முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

அதேநேரம், 50 கிலோ கிராம் மற்றும் அதற்கு மேற்பட்ட பொதிகளில் மொத்தமாக இறக்குமதி செய்யப்படும் ஏனைய போர்ட்லேண்ட் சீமெந்து ஒரு கிலோ கிராமுக்காக அறவிடப்படும் 3 ரூபா வரி 5 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

# ஐரோப்பிய நாடுகளில் வேலைவாய்ப்பு பெற்றுத்தருவதாக 10கோடி ரூபா மோசடி

### பொலிஸாரால் ஒருவர் கைது

ஐரோப்பிய நாடுகளில் வேலைவாய்ப்பு பெற்றுத் தருவதாகக்கூறி 10 கோடிக்கும் மேற்பட்ட பணத்தை மோசடி செய்தார் என்ற குற்றச்சாட்டில் சந்தேகநபர் ஒருவர் திங்கட்கிழமை (19) மிரிஹான பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இதேவேளை குறித்த சந்தேக நபர் 50 க்கும் மேற்பட்டோருக்கு மோசடி செய்துள்ளார். அவருக்கு எதிராக மிரிஹான பொலிஸ் தலைமையகத்தில் மாத்திரம் 15க்கும் மேற்பட்ட முறைப்பாடுகள் பதிவுசெய்யப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

சந்தேகநபர் 5 இலட்சம் முதல் 10 இலட்சம் வரையில் பணம் பெற்றுள்ளதுடன் அவர் கனடா, நெதர்லாந்து மற்றும் சுவிட்சர்லாந்து ஆகிய நாடுகளில் வேலைவாய்ப்பு பெற்றுத் தருவதாகக்கூறி ஏமாற்றியுள்ளதாக நபரொருவர் வழங்கிய முறைப்பாட்டுக்கமைய பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

இந்நிலையில், மிரிஹான பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் சந்தேக நபரை மிரிஹான, மடிவெலவில் உள்ள அவரது வீட்டில் வைத்து பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# தாமதமாக அனுமதிக்கப்பட்டதால் காலை மீளப்பொருத்த முடியவில்லை

### கூறுகிறது கம்பஹா வைத்தியசாலை

கணவனால் துண்டிக்கப்பட்ட மனைவியின் காலை மீளப்பொருத்த முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளதாக கம்பஹா மாவட்ட பொது வைத்தியசாலை தெரிவித்துள்ளது.

கால் துண்டிக்கப்பட்ட நிலையில் குறித்த பெண் கம்பஹா மாவட்ட பொது வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்த போதிலும், அனுமதிப்பதில் ஏற்பட்ட தாமதம் காரணமாகவே காலை மீண்டும் பொருத்த முடியவில்லை என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

கிரிந்திவெல பிரதேசத்தில் வசிக்கும் 42 வயதுடைய பெண்ணொருவரின் கால் குடும்பத் தகராறு காரணமாக கணவனால் துண்டிக்கப்பட்டதாக வைத்தியசாலைப் பேச்சாளர் தெரிவித்தார்.

நோயாளியின் நிலை தொடர்பில் கம்பஹா வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர் வைத்தியர் பிரியந்த இலேபெரும, நோயாளியை வைத்தியசாலையில் அனுமதிப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளமையினால், துண்டிக்கப்பட்ட காலை பொருத்துவதற்கான மாற்றுச் சிகிச்சைக்கான சாத்தியக்கூறுகள் இல்லை எனவும் குறித்த பெண் தீவிர சிகிச்சைப் பிரிவில் மேலதிக சிகிச்சை பெற்று வருவதாகவும் தெரிவித்தார்.

## தினசரி பலாபலன்கள்

**சோபகிருது வருடம் ஆனி மாதம் 06ஆம் நாள்**
**புதன்கிழமை**

**மேஷம்**: நண்பர்கள் மூலம் நீங்கள் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். வீடு, வாகன லாபங்கள் அமையும்.

**ரிஷபம்**: சமயோசிதமான புத்தியால் அனைத்தையும் சாதிப்பீர்கள். அவசிய செலவுகளைச் செய்வீர்கள்.

**மிதுனம்**: பேச்சினால் பிழைப்பவர்களுக்கு புகழ்,கௌரவம் உண்டு, அரச வகையில் நன்மைகள் உண்டு.

**கடகம்**: போட்டிப் பந்தயங்களில் வெற்றி வாகை சூடுவீர்கள். திடீர் தன வரவு ஏற்படும்.

**சிம்மம்**: சுப விரயங்களால் பணத்தட்டுப்பாடு ஏற்படலாம். உடல் நலத்தில் அக்கறை காட்டுங்கள்.

**கன்னி**: தரும சிந்தனையுடன் செயலாற்றுவீர்கள். நினைத்தது நடக்கும். அனைத்துவித லாபங்களையும் அடைவீர்கள்.

**துலாம்**: தொழில் மற்றும் வியாபாரத்துறையில் சாதனை படைக்கும் நாள். முன்னெச்சரிக்கையோடு செயற்படுவீர்கள்.

**விருச்சிகம்**: எதிர்கால நன்மை கருதி திட்டங்களைத் தீட்டி முடிவுகளை எடுப்பீர்கள். தந்தைவழி நன்மைகள் உண்டு.

**தனுசு**: மௌனம் காத்து, ஆலய வழிபாடு செய்வதால் மன நிம்மதி உண்டு, துரப்பயணங்கள் வேண்டாம்.

**மகரம்**: பெண்களால் அதிர்ஷ்டங்களும் உதவிகளும் உண்டு. காதலில் மூழ்கிப்போய் இருப்பீர்கள்.

**கும்பம்**: உடல் மற்றும் மனம் ஒருங்கே பாதிப்படையலாம். உங்கள் எதிரியின் கை ஓங்கும். எனவே, எச்சரிக்கை வேண்டும்.

**மீனம்**: அதிர்ஷ்டகரமான பல நல்ல அனுபவங்கள் நிறைந்த நாள். தெளிந்த மனதுடன் மகிழ்ச்சியாக இருப்பீர்கள்,

| | |
|---|---|
| **திதி** | :திருதியை பி.ப.3.10 வரை பின் சதுர்த்தி (வளர்) |
| **நட்சத்திரம்** | :பூசம் பி.இ.1.21 வரை பின் ஆயிலியம் |
| **யோகம்** | :சித்தாமிர்தம் யோகம் |
| **வார சூலை** | : வடக்கு திசை நோக்கி சுபகாரியம் கூடாது |
| **நல்லநேரம்** | : மு.ப. 8.52– 9.52 மணி வரை |
| **ராகுகாலம்** | : 11.52– 1.22 மணி வரை |
| **எமகண்டம்** | : 7.22 – 8.52 மணி வரை |
| **குளிகை** | : 10.22 – 11.52 மணி வரை |
| **சந்திராஷ்டமம்** | :தனுசு ராசியினர் எச்சரிக்கையாக செயற்படவும் |
| **தனஅதிஷ்டம்** | : புனர்பூசம், விசாகம், பூரட்டாதி (பிறந்தவர்களுக்கு) |
| **விஷேட தினம்** | : -------- |

**கணிப்பு : சிவா பாஸ்கரராவ்**
(ஜோதிடம் மற்றும் வாஸ்து ஆய்வாளர்)
ஸ்தாபகர் - ஓம்சிவ ஜோதிட வித்தியா & வாஸ்து நிலையம்.
தொலைபேசி : 077-0525325
078-6759739

ஜீனியர் தமிழன்
மாணவ மாணவிகளே!
புலமைப்பரிசில் மாணவர்களின் வெற்றிக்கு வழிவகுக்கும் முன்னோடி வினாத்தாள்கள் மற்றும் விடைத்தாள்களுடனான விசேட பொதி




பிரபல புலமைப்பரிசில் ஆசிரியர்களால் தொகுத்து வெளியிடப்படுகிறது
விரைவில் சந்தைக்கு...
0777983308 / 0761393805

தமிழன் THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91. விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42,
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 0114 846 097
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com

**2023, ஜூன் 21ஆம் திகதி, புதன்கிழமை**

# யோகாசனத்தின் மகத்துவம்

இன்று சர்வதேச யோகாசன தினமாகும்.

உலகெங்கும் ஆண்டுதோறும் ஜூன் 21ஆம் திகதியை யோகா தினமாக 2015ஆம் ஆண்டிலிருந்து கொண்டாடப்பட்டு வருகிறது.

2014ஆம் ஆண்டு ஐ.நாவில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி உரையாற்றும்போது ஜூன் 21ஆம் திகதி யோகா தினமாக உலகெங்கும் கொண்டாடப்படலாம் என்று குறிப்பிட்டார். இதைத் தொடர்ந்து ஐ.நாவில் ஜூன் 21 யோகா தினமாகக் கொண்டாடப்படும் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

யோக சூத்திரம் என்பது பதஞ்சலி முனிவர் வகுத்த அட்டாங்க யோகம். இயமம், நியமம், ஆசனம், பிராணாயாமம், பிரத்யாஹாரம், தாரணை, தியானம், சமாதி ஆகிய எட்டு அடுக்கு எனப்படும் அட்டாங்க வழியைக் காண்பிக்கும் ஒன்று. இதனால் உடல் ஆரோக்கியமும் மன ஆரோக்கியமும் சமுதாய நலனும் மேம்படும் என்பது அறிவியல்பூர்வமாக நிரூபிக்கப்பட்டு விட்டதால் உலகெங்கும் யோகா இப்போது நடைமுறைப் பழக்கமாக ஆகிவிட்டது.

இதற்கென தனி இடமோ அல்லது விசேடமான சாதனங்களோ தேவையில்லை. உடலே இதற்கான கருவி. உள்ளமே உயரத்தை எட்டுவதற்கான ஏணி. உலகெங்கும் உள்ள சோதனைச் சாலைகளில் யோகா பற்றிய ஏராளமான ஆய்வுகள் நடத்தப்பட்டுள்ளன. அவை வியத்தகு முடிவுகளை அறிவித்துள்ளன.

1986ஆம் ஆண்டு பிரிட்டன் இராணுவ ஆய்வு நிலையமானது பிரெனர் மற்றும் கனாலி ஆகிய இரு விஞ்ஞானிகளை மூச்சை அடக்கும் யோகா திறன் பற்றி ஆய்வுசெய்ய நியமித்தது. தியானத்தின் மூலமாக மிக அதீத ஓய்வுநிலையைப் பெறுவதால் உடல் இயக்கம் நம்ப முடியாதபடி குறைந்து ஓட்சிசன் தேவையை வெகுவாகக் குறைக்கிறது. ஆகவே, இது சாத்தியமாகிறது என்று அவர்கள் ஆய்வின் முடிவைக் கூறினர்.

1927ஆம் ஆண்டு பரிஸில் நடந்த சர்வதேச அதீத உளவியல் மாநாட்டில் பேராசிரியர் வான் ஷ்ரெங் நொட்ஜிங் முன்னிலை வகிக்க, மாநாட்டில் அனைவரும் பார்த்துக்கொண்டிருக்க ஒரு இளைஞர் 27 முறை மேலே பறந்து காண்பித்தார். யோகத்தால் வந்த - மிதக்கும் - லெவிடேஷன் சக்தி இது என்று அவர் கூறியபோது அனைவரும் வியந்தனர்.

யோகம் தரும் பயன்கள்: தியானம் மற்றும் எளிய ஆசனங்கள் எல்லையற்ற பயனைத் தருபவை. தினமும் 20 முதல் 30 நிமிடங்கள் வரை இதற்கு ஒதுக்கினால் போதும். நல்லதோர் ஆசானிடம் எளிய ஆரம்பப் பயிற்சிகளைக் கற்று ஒருவர் இதில் ஈடுபட்டால் ஏராளமான பயன்களைப் பெறலாம்.

பல்வேறு காரணிகளின் அடிப்படையில் தியானம் ஒருவருக்கு ஆக்கபூர்வமான தொடர் வரிசை விளைவுகளை ஏற்படுத்துகிறது. நடத்தையைச் சீராக்கும் மருத்துவ சிகிச்சையில் இது தன்னைத் தானே கட்டுப்படுத்தும் ஒரு சிறந்த வழிமுறையாக ஆகிறது. மன அழுத்தத்தை இது நீக்குகிறது. நல்ல ஓய்வை உறுதிசெய்கிறது.

ஒருவரின் உண்மையாக தற்போது இருக்கும் ஆன்ம அடையாளத்தை அவரது இலட்சியபூர்வமான ஆன்ம அடையாளத்துடன் சமப்படுத்துகிறது. அனைத்தும் உள்ளடக்கிய முழு மருத்துவத்தைத் தன்னுள்ளே கொண்டது இது.

யோகா தியானத்தால் நம்பமுடியாத உடல் ரீதியான சாகச செயல்களைச் செய்ய முடியும். தியானத்தினால் தானியங்கி நரம்பு மண்டலத்தை நமக்கு உகந்தபடி கட்டுப்படுத்த முடியும். மன அழுத்தம், மன இறுக்கம் சம்பந்தமான உளவியல் மற்றும் இதர பிரச்சினைகளை நீக்குவதற்கு இது உதவுகிறது. மிக எளிதான பயிற்சியை நடைமுறைக்குக் கொண்டுவருவது இதுவே. இதைச் செய்ய பணம் தேவை இல்லை. வயது வரம்பு கிடையாது. ஆண், பெண் என்ற பால் பாகுபாடு இல்லை. எந்த இடத்தில் வேண்டுமானாலும் செய்யலாம். தியானத்தை எந்த நேரத்திலும் மேற்கொள்ளலாம்.

இனம், மதம், நாடு, அந்தஸ்து என்ற பாகுபாடோ பேதமோ இல்லை.மனதைப் பண்படுத்துவதுடன் உடலை மேம்படுத்தலாம். ஆன்மீக சக்தியை அதிகப்படுத்தலாம். மனித குலத்தின் பாரம்பரியத்தின் சிறந்த குணங்கள் தியானத்துடன் சம்பந்தமுள்ளவையாக இருக்கின்றன. பத்து நிமிட தியானத்துக்கே பெரும் பயன் உண்டு என்று விஞ்ஞானிகளின் சோதனைகள் நிரூபிக்கின்றன.

இந்த பத்து நிமிட தியானத்திலேயே தியானம் செய்வோர் அதிகளவு அல்பா அலைகளை (ஓய்வான மூளை அலைகள்) வெளியிடுவதையும் மனச்சோர்வு, மன அழுத்தம் இல்லாமல் இருப்பதையும் ஹார்வர்ட் மருத்துவ பாடசாலை விஞ்ஞானிகள் உறுதிப்படுத்தியுள்ளனர். தமனிகளில் தடிப்பு ஏற்படும் ஆர்தெரோலெரோசீஸ் என்ற வியாதியால் அவதிப்பட்ட அமெரிக்கர்களில் அறுபது பேர் ஆறு முதல் ஒன்பது மாதம் வரை யோகா தியானம் செய்ய அவர்களின் தமனிகளில் தடிமன் குறைய ஆரம்பித்தது என்றும் ஆய்வொன்று தெரிவிக்கிறது.

கவனத்தை ஒழுங்குபடுத்துவதன்மூலம் ஒரு தனிமனிதனின் உணர்வில் செல்வாக்கை ஏற்படுத்தும் ஒரு உத்தியே தியானம் என அறிவியல்,யோகா தியானத்தை வரையறுத்துக் கூறுகிறது. இதைத் தோற்றி வளர்த்துக் காக்கும் சைவ மதமோ, “உடல் ரீதியாக உயர்வது மட்டுமின்றி ஆன்மாவை உணர்வதற்கான கலையே யோகா” என்று கூறுகிறது.

இலங்கையிலும் கடந்தகாலங்களை விட இப்போது யோகாசனக்கலை மக்கள் மத்தியில் பரவியுள்ளது. கொழும்பிலுள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயம் சில தினங்களுக்கு முன்னர் யோகாசன நிகழ்வொன்றை ஏற்பாடு செய்ததும் குறிப்பிடத்தக்கது. மக்களின் ஆரோக்கியத்துக்கு உதவும் எந்த செயற்பாடும் நிராகரித்துவிடப்படக்கூடாது. அந்தவகையில் யோகாசன தினமான இன்று உடல் ஆரோக்கியத்தை பற்றி சிந்திக்கவேண்டும் மக்கள்.



# உறுதிகொண்ட நெஞ்சினாய்...

• பாறப்புறத் இராதாகிருஷ்ணன்

மனித வாழ்க்கையில் நம்பிக்கை என்னும் சக்தியை பிடித்து விட்டால் இவ்வுலகில் முடியாதது ஏதும் இல்லை என்பதை பல நிகழ்வுகள் அவ்வப்போது படம் பிடித்துக் காட்டிக் கொண்டேயிருக்கின்றன. காலமும் சூழலுமே நம்மையும் நமது செயற்பாடுகளையும் தீர்மானிக்கும் சக்திகளாக விளங்குகின்றன.

வாழ்க்கையில் நாம் சந்திக்கும் அனுபவங்களும் முன்னோரின் அறிவுரைகளும் சூழ்நிலைகளை சிறப்பாக கையாளுவதற்கு உதவுகின்றன. அனுபவத்தால் அறிய முடியாததை ஆயிரம் தத்துவ ஞானிகளாலும் அறிய முடியாது.

கொலம்பியாவின் அமேசன் காடு, தென்அமெரிக்காவின் அமேசன் ஆற்றுப் படுகையில் அமைந்துள்ள ஒரு பெரிய மழைக் காடாகும். ‘அமேசனியா’ அல்லது ‘அமேசன் படுகை’ என்றழைக்கப்படும் இதன் பரப்பளவு ஏழு மில்லியன் சதுர கிலோ மீற்றர் ஆகும். இதில் காடு மட்டும் 5.5 மில்லியன் சதுர கிலோ மீற்றர். மேலும், இது பிரேஸில், பெரு, கொலம்பியா, வெனிசுலா, ஈக்குவெடார், பொலிவியா, கயானா, சுரிநாம், பிரான்ஸ் (பிரெஞ்சு கயானா) ஆகிய ஒன்பது நாடுகளில் பரவியுள்ளது.

கொலம்பியாவில் நாட்டு மக்கள் அனைவரும் எதையோ எதிர்பார்த்து பிரார்த்தனை செய்து கொண்டிருந்தபோது, கொடிய விலங்குகள் வாழும் அந்தக் காட்டுக்குள் ‘வயர்லெஸ்’ கருவிகளில் உண்டான இரைச்சலையும் தாண்டி அந்த ஒரு சொல் மட்டும் திரும்பத் திரும்ப தெளிவாக ஒலித்தது. ‘அதிசயம்’ ‘அதிசயம்’ ‘அதிசயம்’ என்பது தான் அந்தச் சொல். கடந்த ஏப்ரல் முதலாம் திகதியன்று ஆபத்துகள் நிறைந்த, அடர்ந்த காட்டுக்குள் காணாமல்போன நான்கு குழந்தைகள் உயிருடன் உள்ளதை அந்நாட்டு இராணுவத்தினர் மகிழ்ச்சியுடன் அறிவித்ததன் வெளிப்பாடுதான் அந்தக் குரல்.

அமேசன் வனப்பகுதியையொட்டிய கிராமமான அராராகுவாராவிலிருந்து விபத்து நிகழ்ந்த சான்ஜோஸ் டெல் குவாவியாரே பகுதிக்கு ஹுய்டோட்டோ பழங்குடியினத்தைச் சேர்ந்த மூன்று சிறுவர்கள், ஒரு வயதுக் குழந்தை, அவர்களின் தாயார், விமான ஓட்டி உட்பட ஏழு பேர் ‘செஸ்னா’ எனும் ஒற்றை என்ஜின் பொருத்திய இலகுரக விமானத்தில் பயணம் மேற்கொண்டனர்.

திடீரென அந்த விமான என்ஜினில் கோளாறு ஏற்பட, சற்று நேரத்தில் ரேடார் கண்காணிப்பிலிருந்து அந்த விமானம் மறைந்துபோனது. இதையடுத்து, விமானத்தை தேடும் பணி தொடங்கியது. விபத்து நடந்த ஆறு வாரங்களுக்குப் பிறகு கடந்த மாதம் 16ஆம் திகதி அடர்ந்த அமேசன் காட்டுப் பகுதியில் நொறுங்கி விழுந்த விமானத்தின் பாகங்களும் பயணிகள் மூவரின் உடல்களும் கண்டறியப்பட்டன.

கொடிய மிருகங்கள், உயிர்க்கொல்லி பூச்சிகள் காணப்படும் பகுதி அது. அத்தகைய ஆபத்து நிறைந்த அடர்ந்த காட்டுக்குள், காணாமல் போன நான்கு குழந்தைகளின் கதி என்னவானது என்பது தெரியவில்லை. காட்டுக்குள் அக்குழந்தைகள் தனியாகத் தவித்து வந்துள்ளனர். இவர்களின் நிலையை நினைத்து நாடே வருந்தி பிரார்த்தனை செய்தது.

ஆனால், சிறுவர்களின் உடல்கள் சம்பவ இடத்தில் கண்டறியப்படாததால், அவர்கள் உயிரோடு இருக்கலாம் என கொலம்பியா இராணுவம், மோப்ப நாய்கள் உதவியுடன் தீவிர தேடுதல் பணியில் ஈடுபட்டது. ஹெலிகொப்டர்கள் தரையிறங்க வசதியில்லாததால் கயிறு மூலம் கீழே இறங்கி வீரர்கள் மீட்புப் பணியில் ஈடுபட்டனர். மாயமான சிறுவர்களுக்காக காட்டில் ஆங்காங்கே உணவுப் பொட்டலங்கள் வீசப்பட்டன. சிறுவர்களை அவர்கள் இருக்கும் இடத்திலேயே இருக்குமாறு ஒலிபெருக்கி மூலம் அறிவிக்கப்பட்டது.

வனப்பகுதியில் காணப்பட்ட, காலடிச் சுவடுகள், பாதி கடித்து தூக்கி எறியப்பட்ட பழங்கள், பால் புட்டிகள் ஆகியவற்றால் சிறுவர்கள் உயிரோடுதான் இருக்கிறார்கள் என்ற நம்பிக்கை பிறந்தது. எனவே, தொடர்ந்து வீரர்கள், பழங்குடியினர் உதவியோடு தேடுதல் வேட்டையில் ஈடுபட்டனர். இந்நிலையில், 40 நாட்களுக்குப் பிறகு, வீரர் ஒருவர் சிறுவர்களின் இருப்பிடத்தைக் கண்டறிந்தார்.

சுமார் 150 இராணுவ வீரர்கள், உள்ளூர் பழங்குடிகளைச் சேர்ந்த 200 பேர் இந்நடவடிக்கையில் ஈடுபட்டனர். இந்த மீட்பு நடவடிக்கை சுமார் 124 சதுர மைல் பரப்பளவில் மேற்கொள்ளப்பட்டது. ‘இந்த மீட்புப் பணி மிகவும் சவாலாக இருந்தது. ஏனெனில் அக்குழந்தைகள் தினமும் வேறு வேறு இடங்களுக்கு மாறிக் கொண்டேயிருந்தனர்’ என இராணுவ ஜெனரல் சான்செஸ் தெரிவித்தார்.

விமான விபத்து நடந்த பின்னர், தங்களிடமிருந்த ஃபரினா என்ற மாவை உட்கொண்டு அந்தக் குழந்தைகள் உயிர் வாழ்ந்துள்ளனர். சில நாட்களில் அந்த மாவு தீர்ந்துவிடவே, பழங்களின் விதைகளை உண்டு பசியாறியுள்ளனர். ஒரு வயது குழந்தையைக் கையில் பிடித்திருந்த மூத்த மகள் லெஸ்லியை மீட்புக் குழுவினர் நெருங்கியபோது ‘எனக்குப் பசிக்கிறது’ என்பதுதான் அவர் வாயிலிருந்து வந்த முதல் சொல். பக்கத்தில் இருந்த சிறுவன், ‘என் அம்மா இறந்து விட்டார்’ என சோகம் ததும்பிய குரலில் கூறியுள்ளான்.

பூர்வக்குடிகள் குறித்து ஆராய்ந்து வரும் அந்நாட்டு நிபுணர் அலெக்ஸ் ருஃபினோ, ‘ பழங்குடி சமூகத்தில் வளர்க்கப்பட்ட 13 வயது சிறுமி, காட்டுப் பகுதியில் அச்சம் சூழ்ந்த அத்தகைய நிலையை சமாளித்து, எதிர்கொண்டு வாழத் தேவையான பல திறன்களைப் பெற்றிருப்பார்’ எனக் கூறினார்.

குழந்தைகளின் உறவினரான டாமரிஸ் முகுடுய், ‘பதின்மூன்று வயதான லெஸ்லி, காட்டில் பல நச்சுப் பழங்கள் இருப்பதால், என்னென்ன பழங்களைச் சாப்பிடலாம், எதைச் சாப்பிடக் கூடாது என்பதைத் தெளிவாக அறிந்து வைத்திருந்தாள். ஒரு பச்சிளங் குழந்தையை எப்படிப் பராமரிப்பது என்று கூட அவளுக்குத் தெரியும், அதற்குக் காரணம் அவளது மறைந்த தாய்தான்’ என உருக்கமாகக் குறிப்பிட்டார்.

மீட்கப்பட்ட சிறுவர்களுக்கு தலைநகர் போகோடாவில் உள்ள இராணுவ மருத்துவமனையில் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. பூச்சிக்கடி, நீரிழப்பு, சோர்வு ஆகியவற்றால் பாதிக்கப்பட்டுள்ள குழந்தைகளுக்கு மனநல சிகிச்சையும் அளிக்கப்பட்டு வருவதாக சிறுவர்களின் உறவினர்கள் தெரிவித்துள்ளனர். அவர்களுக்கு திரவ உணவே அளிக்கப்பட்டு வருகிறது. எனினும், அவர்களின் உடல்நிலை சீராக உள்ளதாக அந்நாட்டு பாதுகாப்புத் துறை அமைச்சர் இவான் வெலஸ்குவெஸ் விளக்கமளித்துள்ளார்.

‘விபத்து நடந்த இடத்திலிருந்து 5 கி.மீ. தொலைவில் சிறுவர்கள் கண்டெடுக்கப்பட்டனர். மீட்புப் பணியின்போது 50 மீற்றர் இடைவெளியில் குழந்தைகளை இருமுறை தவறவிட்டிருக்கிறோம். காட்டில் கிடைத்த பழங்களை மட்டுமே உண்டு உயிர் வாழ்ந்து வந்ததால் குழந்தைகள் பலவீனமாக உள்ளனர்’ என மீட்புப் பணியினை ஒருங்கிணைத்த இராணுவ தளபதி பெட்ரோசான்செஸ் கூறியுள்ளார்.

இந்த நெகிழ்ச்சியான சம்பவம் குறித்து கொலம்பிய நாட்டு ஜனாதிபதி குஸ்டாவோ பெட்ரோ கூறுகையில். ‘அடர்ந்த காட்டுக்குள் நாற்பது நாட்களுக்குப் பின் நான்கு குழந்தைகள் மீட்கப்பட்ட இந்த நிகழ்வு என்றும் வரலாற்றில் நிலைத்திருக்கும். இது ஓர் அதிசயம். வனமே, அவர்களைக் காத்து வருகிறது. அவர்கள் வனத்தின் குழந்தைகள்’ என உணர்ச்சி ததும்பக் கூறினார்.

உடலின் பலத்தைவிட உள்ளத்தின் பலம் உயர்வானது. கடந்த 2018இல் தென்கிழக்கு ஆசிய நாடான, தாய்லாந்தின் சியாங்ராய் மாகாணத்துக்கு, அந்நாட்டின் கால்பந்து விளையாட்டு வீரர்களான சிறுவர்கள் பன்னிரண்டு பேரும் பயிற்சியாளரும் சுற்றுலா சென்றனர். அங்கு 10கி.மீ. நீளமுடைய தாம் லுவாங் குகைக்குள் அவர்கள் மலையேற்ற பயிற்சி மேற்கொண்டபோது, பலத்த மழையால் கடும் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டு குகைக்குள் வெள்ளம் புகுந்தது.

இதனால், அவர்கள் குகையை விட்டு வெளியேற முடியாமல் உணவும் நீருமின்றி குகைக்குள் சிக்கித் தவித்தனர். உலகமே பதறியது. ஒன்பது நாட்களுக்குப் பின்னர், அவர்கள் குகைக்குள் சிக்கியிருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. இவர்களை மீட்க, தாய்லாந்து அரசின் மீட்புக் குழு பல்வேறு முயற்சிகளை செய்தும் பலனில்லை. இதையடுத்து, சர்வதேச நீச்சல் வீரர்கள் மேற்கொண்ட கடும் முயற்சியைத் தொடர்ந்து, 17 நாட்களுக்குப் பின், அனைவரும் பத்திரமாக மீட்கப்பட்டனர். இது பெரும் உலக சாதனையாகக் கருதப்பட்டது.

எவர் விடாமுயற்சியுடன் இருக்கிறாரோ அவருக்கு வெற்றி சொந்தமாகும். ஸ்பெயின் நாட்டில் இயங்கும் அல்மேரியா, கிரனடா, முர்சியா பல்கலைக்கழகங்களைச் சேர்ந்த விஞ்ஞானிகள் குழு, மனித மனமும் உடலும் தனிமையை எவ்வாறு சமாளிக்கும் என்பது குறித்து ஆராய, ஸ்பெயின் நாட்டைச் சேர்ந்த மலை ஏறும் வீராங்கனை பியாட்ரிஸ் ஃப்ளாமினி என்பவரை ஸ்பெயின் நாட்டுக்கு அருகே உள்ள கிரனாடா என்ற 70 மீற்றர் ஆழமுள்ள, சூரிய வெளிச்சம் புகாத குகைக்குள் அனுப்பி வைத்தனர்.

அவருக்குத் தேவையான அடிப்படை வசதிகள் குகையில் செய்யப்பட்டன. மனித தொடர்பின்றி 500 நாள் குகைக்குள் தனியாக இருந்த பியாட்ரிஸ் ஃப்ளாமினி பின்னர் வெளியே வந்துள்ளார். வெளியே வரும்போது அவர் குகைக்குள் சென்ற 2021ஆம் ஆண்டு மனநிலையிலேயே உள்ளார். மனிதத் தொடர்பு இல்லாதது மாறுபட்ட அனுபவத்தைத் தந்ததாகவும் தனக்கு உலகத்தைப் பற்றி எதுவும் தெரியாது என்றும் தனது கண்கள் கூசுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

வாழ நினைத்தால் வாழலாம். விரக்தியில் தற்கொலை செய்து கொள்ளும் இளைய தலைமுறையினருக்கு இந்நிகழ்ச்சிகள் ஒரு பாடம். மிகப் பெரிய சாதனைகள் சாதிக்கப்படுவது வலிமையினால் அல்ல, விடாமுயற்சியினால்தான்.

துணிவும் மன உறுதியும் இருந்தால் எந்த நெருக்கடியையும் சமாளிக்க முடியும் என்பதையே இந்த நிகழ்வுகள் நமக்கு உணர்த்துகின்றன.



**நன்றி - தினமணி**

## இன்றைய நாளில்...

* 1736 – இலங்கையில் உள்ளூர் மொழிகளில் நூல்கள் அச்சிட அச்சியந்திரசாலையை ஒல்லாந்தர் நிறுவினர்.
* 1990 – மன்னாரில் கொண்டச்சி இராணுவ முகாம் விடுதலைப் புலிகளால் தாக்கி அழிக்கப்பட்டது.
* 2002 – உலக சுகாதார நிறுவனம் ஐரோப்பாவை போலியோ நோய் அற்ற கண்டமாக அறிவித்தது.
* 2004 – முதலாவது தனியார் விண்ணூர்தி ஸ்பேஸ்சிப்வன் மனித விண்வெளிப் பறப்பை மேற்கொண்டது.
* 2006 – புளூட்டோவின் புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட இரண்டு துணைக்கோள்களுக்கு நிக்ஸ், ஹைட்ரா எனப் பெயரிடப்பட்டது.
* 2009 – கிறீன்லாந்து தன்னாட்சி பெற்றது.

## நக்கல் நமசிவாயம்



# நாடு முடக்கப்படாமலிருந்திருந்தால் 2020இல் மின்வெட்டு தொடங்கியிருக்கும்

## அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவிப்பு

நாங்கள் மிகவும் கடினமான பாதையில் பயணித்துக்கொண்டிருக்கிறோம். ஒரு வருடத்துக்கு முன்பு 12-14 மணி நேர மின்வெட்டை எதிர்கொண்டோம். இரண்டு மூன்று நாட்கள் எரிபொருள் மற்றும் எரிவாயு வரிசையில் நின்றோம். அப்போது எங்களுக்குத் தேவையான பால்மா உள்ளிட்ட உணவுகள் சந்தையில் இருக்கவில்லை. கட்சி, எதிர்க்கட்சி வேறுபாடில்லாமல் அனைவரும் இதனை எதிர்கொண்டனர் என்று தெரிவித்த அமைச்சர் காஞ்சன விஜேசேகர, நாடு முடக்கப்படாமலிருந்திருந்தால் நம் நாட்டில் மின்சார வெட்டு மார்ச் 2020 இல் தொடங்கியிருக்கும் - என்றும் தெரிவித்தார்.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் நாவலப்பிட்டி தொகுதிக்கான பொதுக்கூட்டம் (18) இடம்பெற்றது. இந்நிகழ்வில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்த அமைச்சர் மேலும் கூறியதாவது:-

2019ஆம் ஆண்டு இறுதியில் ஜனாதிபதி கோட்டாபய ஆட்சிக்கு வந்தார். மார்ச் 2020 இல் நாடு கொவிட் நெருக்கடியை எதிர்கொண்டது. இதனால் நாடு பல மாதங்களாக முடக்கப்பட்டது. நாடு முடக்கப்படாமலிருந்திருந்தால் நம் நாட்டில் மின்சாரவெட்டு மார்ச் 2020 இல் தொடங்கியிருக்கும். ஜனாதிபதி கோட்டாபய ஆட்சிக்கு வந்த போதும் இந்த நெருக்கடி உச்சத்தை எட்டியிருந்தது. நம் நாடு மட்டுமல்ல, உலகின் அனைத்து சக்தி வாய்ந்த நாடுகளும் அதை எதிர்கொண்டன.

2014 ஆம் ஆண்டு இறுதியில் இருந்து மின் உற்பத்தி அமைப்பு முறையாக இயக்கப்படாததால் 12 முதல் 14 மணி நேரம் மின்வெட்டுக்கு உள்ளாகவேண்டியிருந்தது.

நுரைச்சோலை மின் நிலையத்தை அன்று திறந்து வைத்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மின்சாரக் கட்டணம் 25 வீதம் குறைக்கப்படும் எனத் தெரிவித்தார். அந்தப் பலன் மக்களுக்கு வழங்கப்பட்டது.

2005 ஆம் ஆண்டு ஜனாதிபதி மஹிந்த பதவிக்கு வந்தபோது நாட்டின் 30 வீதம் மின்சாரம் நிரம்பியிருந்தது. 10 வீடுகளை எடுத்துக் கொண்டால் 3 வீடுகளில்தான் மின்சாரம் உள்ளது. இது 2015 இல் 100 வீதமாக்கப்பட்டது. அந்த நேரத்தில், நாட்டில் மின் உற்பத்தி நிலையங்கள் அமைக்கப்பட்டன. ஆனால், 2015க்குப் பிறகு அவை தொடர்ந்து செயற்படவில்லை. மின் உற்பத்தித் திட்டத்தை செயற்படுத்தாததால் கடந்த ஆண்டு மின்வெட்டு ஏற்பட்டது. எனக்கு வழங்கப்பட்ட அமைச்சினால்தான் நாட்டின் போராட்டங்கள் எழுந்தன. மின்சாரம் இல்லை, எரிபொருள் இல்லை. எங்களுடைய கையிருப்புகளைப் பயன்படுத்தி நீண்ட காலத் திட்டங்களுக்கு வைத்திருந்த பணத்தை எரிபொருள் வாங்கச் செலவழித்தோம். அதற்கு டொலர் கையிருப்பு பயன்படுத்தப்பட்டது - என்றார் .





கதிர்காம கொடியேற்றத்தைத் தொடர்ந்து தலவாக்கலை ஸ்ரீ கதிரேசன் ஆலய பாதயாத்திரைக் குழுவினர் கதிர்காம யாத்திரையை ஆரம்பித்துள் ளனர். யாத்திரைக் குழுவினர் தலவாக்கலை, லிந்துலை, நானுஓயா, நுவரெலியா, சீத்தாஎலிய, ஹக்கல, பொரகஸ், கெப்பட்டிபொல, வெலிமட, பண்டாரவளை, எல்ல, வெல்லவாய மற்றும் புத்தள வழியாக கதிர்காமத்தைச் சென்றடையவுள்ளனர்.

(படங்கள்:தலவாக்கலை நிருபர்)

# காலாவதியான சாரதி அனுமதிப்பத்திரங்களின் செல்லுபடிக்காலம் இரு ஆண்டுகளுக்கு நீடிப்பு

## மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் தீர்மானம்

காலாவதியாகியுள்ள சாரதி அனுமதிப் பத்திரங்களின் செல்லுபடிக்காலத்தை இரண்டு ஆண்டுகளுக்கு நீடிப்பதற்கு மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் தீர்மானித்துள்ளதாக ஆணையாளர் நாயகம் நிஷாந்த அனுருத்த வீரசிங்க தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

காலாவதியாகியுள்ள சாரதி அனுமதிப் பத்திரத்தை புதுப்பிப்பதில் மக்கள் எதிர்கொள்ளும் சிரமங்களைக் கருத்தில் கொண்டு மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

கால நீடிப்பு தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் இந்த வாரத்துக்குள் வெளியிடப்படும்.

சாரதி அனுமதிப்பத்திரம் அச்சிடும் அட்டைகளுக்கு தட்டுப்பாடு நிலவுவதால் இத்தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

## மேல்மாகாண பாடசாலை மாணவர்களுக்கு வெளிர் நிற ஆடைகளை அணியுமாறு கோரிக்கை

டெங்குக் காய்ச்சலில் இருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்ளும் வகையில் மேல்மாகாணப் பாடசாலை மாணவர்களின் பாடசாலைச்சீருடைக்கு மேலதிகமாக உடலுக்குப் பொருந்தக்கூடிய வெளிர் நிற ஆடைகளை அணியுமாறு தேசிய டெங்குக் கட்டுப்பாட்டுப் பிரிவு கேட்டுக்கொண்டுள்ளது.

அண்மைக்காலமாக, பாடசாலை மாணவர்கள் டெங்கு நோயினால் பாதிக்கப்படும் நிலை அதிகரித்துள்ளமையினாலேயே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக அதன் தலைவர் நளின் ஆரியரத்ன தெரிவித்துள்ளார்.

# குருநாகலில் தீ விபத்து மூவர் வைத்தியசாலையில்

*(இக்பால் அலி)*

குருநாகல் நகரிலுள்ள மாடிக் கட்டடமொன்றில் திடீரென ஏற்பட்ட தீ விபத்தில் சிக்குண்ட மூன்று சேவையாளர்கள் குருநாகல் போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

குருநாகல் நகரிலுள்ள மாடிக்கட்டடமொன்றின் நான்காவது மாடியில் நேற்று திடீரென தீப்பற்றியது. இதன்போது உயிரைப் பாதுகாத்துக் கொள்வதற்காக யன்னல் ஊடாக வெளியே குதிப்பதற்கு முயற்சித்த மூன்று பேரே காயமடைந்து சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், உடன்செயற்பட்ட குருநாகல் மாநரக சபையின் தீயணைப்புப் படையினர் தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர்.





## ஐஸ் போதைப்பொருள் வைத்திருந்தவர் கைது

வெல்லவாய பொலிஸ் பிரிவுக்குட்பட்ட யாலபோவ பகுதியில் கடந்த 19 ஆம் திகதி பொலிஸார் சுற்றிவளைப்பொன்றை மேற்கொண்டனர். இதன்போது 180 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருளை வைத்திருந்த சந்தேக நபரொருவர் கைதுசெய்யப்பட்டதாக வெல்லவாய பொலிஸார் தெரிவித்தனர்.

யாலபோவ பகுதியைச் சேர்ந்த 31 வயதுடைய வரே இதன்போது கைது செய்யப்பட்டுள்ளார்.

இதுதொடர்பான மேலதிக விசாரணைகளை வெல்லவாய பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

# மாத்தறை கடை வீதியில் ஷாதுலிய்யா மஜ்லிஸ்







*(பேருவளை நிருபர்)*

ஆன்மீக ஞானி இமாம் அபுல் ஹஸன் அலியுஷ் ஷாதுலி (ரலி) அவர்களின் ஞாபகர்த்த வருடாந்த ஷாதுலிய்யா மனாகிப் மஜ்லிஸ் மாத்தறை கடைவீதி ஸாவியாவில் இடம்பெற்றது.

மின்னதுல் பாஸிய்யா அரபுக் கல்லூரி முதல்வர் கலீபதுஷ ஷாதுலி மௌலவி எம்.எஸ்.எம் இஸ்திகார் (பாரி) தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் ஷாதுலிய்யா தரீக்காவின் புதிய கலீபதுல் குலபா மௌலவி எம்.இஸட்.எம் ஸுஹூர் ஆலிம் (பாரி) பிரதம பேச்சாளராக கலந்து கொண்டார்.

நிகழ்வில் புதிய கலீபதுல் குலபா பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப் பட்டமை குறிப்பிடத்தக்கது.

ரயீஸுல் முகத்தமுஷ் ஷாதுலிகளான மௌலனா அஸ் ஸெய்யித் பஸ்மின் மௌலான (முர்ஸி), மௌலவி எம்.என்.எம் இக்ராம் (பாஸி) அஸ்ஸெய்யித் மௌலவி அலி ஹுஸைன் மௌலானா (முர்ஸி) உட்பட உலமாக்கள, ஸாவியா நிர்வாகிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# மோட்டார் சைக்கிள்கள் திருட்டு: சந்தேக நபருக்கு விளக்கமறியல்

*(கலஹா செய்தியாளர்)*

மோட்டார் சைக்கிள்களைத் திருடினார் என்ற குற்றச்சாட்டில் சந்தேகத்தின்பேரில் கைது செய்யப்பட்ட ஓட்டமாவடியைச் சேர்ந்த இளைஞனை எதிர்வரும் 28 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கம்பளை மாவட்ட நீதிமன்ற மேலதிக நீதவான் நந்தனி காந்திலதா உத்தரவிட்டுள்ளார்.

ஓட்டமாவடியைச் சேர்ந்த சந்தேகநபர் சிறியவயதில் நாவலப்பிட்டியில் இருக்கும் தனது சிறிய தாயின் வீட்டில் தங்கி கம்பளை பிரதேச பாடசாலையொன்றில் கல்விகற்றதாகவும் தற்பொழுது மட்டக்களப்பில் கடற்றொழிலில் ஈடுபட்டு வருவதாகவும் தெரியவருகிறது.

இந்நிலையில், கடந்த ஞாயிற்றுகிழமை மட்டக்களப்பிலிருந்து நாவலப்பிட்டியில் இருக்கும் தனது சிறியதாயைப் பார்ப்பதற்காக தம்புள்ளை வரை வந்துள்ளார். இதன்போது அங்கிருந்து நாவலப்பிட்டி செல்வதற்கு பணம் இல்லாததால் அங்கு விகாரை ஒன்றுக்கருகில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஸ்கூட்டர் ரக மோட்டார் சைக்கிளைத் திருடிக்கொண்டு சென்றுள்ளார்.

இதன்போது கம்பளை பிரதேசத்தில் வைத்து குறித்த மோட்டார் சைக்கிளில் எரிபொருள் முடிந்ததையடுத்து இரவு வியாபார நிலையம் ஒன்றின் முன்னால் நிறுத்தப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளில் எரிபொருளைத் திருடியுள்ளதோடு தம்புள்ளையில் திருடிய மோட்டார் சைக்கிளை அவ்விடத்திலேயே நிறுத்திவிட்டு அங்கிருந்த மற்றைய மோட்டார் சைக்கிளைத் திருடிக்கொண்டு தப்பிச் செல்வது அங்கு பொருத்தப்பட்டிருந்த சீ சீ ரி வி கெமராவில் பதிவாகியுள்ளது.

இதன்போது தனது மோட்டார் சைக்கிள் காணாமல் போனமை தொடர்பாக கம்பளை வியாபாரியினால் கம்பளை பொலிஸ் நிலையத்தில் செய்யப்பட்ட முறைப்பாட்டையடுத்து பொலிஸார் இராணுவத்தினரின் ஒத்துழைப்புடன் பல வீதித் தடைகளை ஏற்படுத்தி சோதனை நடவடிக்கைகளை முன்னெடுத்தனர்.

இந்நிலையில், சந்தேக நபர் தனது சிறிய தாயை பார்த்துவிட்டு மீண்டும் வாழைச்சேனைக்கு கம்பளை - தொலுவ வீதியூடாக திங்கட்கிழமை (19) பயணித்தவேளை கம்பளை பொலிஸாரிடம் கையும் களவுமாகச் சிக்கியுள்ளார்.

சந்தேக நபரிடம் பொலிஸார் மேற்கொண்ட விசாரணையிலிருந்து தனக்கு தம்புள்ளைவரை வருவதற்கு மட்டுமே பணம் இருந்ததாகவும் மீதிப் பயணத்தைத் தொடர்வதற்கே மோட்டார் சைக்கிளைத் திருடியதாகவும் இதற்கு முன்னரும் 8 மோட்டார் சைக்கிள்களைத் திருடியுள்ளதாகவும் தெரிவித்திருந்தார்.

விசாரணையின் பின்னர் சந்தேக நபரை 19ஆம் திகதி மாலை கம்பளை மாவட்ட நீதிமன்ற மேலதிக நீதவான் நந்தனி காந்திலதா முன்னிலையில் ஆஜர்படுத்தினர்.இதன்போது அவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

## பெயர் மாற்றம்

நுவரெலியா மாவட்டம், அம்பகமுவ பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட மஸ்கெலியா மொக்கா கிராம உத்தியோகத்தர் பிரிவு 320/q மிட் லோதியன் பிரிவில் வசிக்கும் கிருபானந்தன் ஷ்ரத்தா ரித்திக் ஹர்ஷன ஆகிய நான் எனது இலக்கம் 4200 கொண்ட பிறப்புச் சான்றிதழில் உள்ள எனது பெயரை இன்று முதல் கிருபானந்தன் ஷித்தேஷ் பிரனவ் என மாற்றியுள்ளேன் என்பதை இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசுக்கும் இலங்கை வாழ் மக்களுக்கும் இத்தால் அறியத் தருகிறேன்.

ஒப்பம்
ஷித்தேஷ் பிரனவ்

## அகில இலங்கை வை.எம்.எம்.ஏ. பேரவையின் தேசிய மாநாடு

*(இக்பால் அலி)*

அகில இலங்கை வை. எம். எம். ஏ. பேரவையின் 73 ஆவது வருடாந்த தேசிய மாநாடு எதிர்வரும் 24 ஆம் திகதி சனிக்கிழமை 10.00 மணிக்கு பதுளை கெப்பிட்டல் சிட்டி ஹோட்டலில் தேசிய தலைவர் இஹ்சான் ஏ. ஹமீட் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக அமைச்சர் நிமால் ஸ்ரீபால டி சில்வா, கௌரவ அதிதியாக கல்வி இராஜாங்க அமைச்சர் ஏ. அரவிந்தக்குமார் மற்றும் நாட்டின் பல பாகங்களிலும் உள்ள 170 க்கும் மேற்பட்ட அகில இலங்கை வை. எம். எம். ஏ. கிளைகளின் பிரதிநிதிகள் இம்மாநாட்டில் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

## கொழும்பில் வசந்த கானங்கள்

கலைவாதி கலீல் நினைவேந்தலும் பாடும் நிலா எஸ். பி. பாலசுப்ரமணியத்தின் ஜனன தின நிகழ்வும் எதிர்வரும் 25ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 5.00 மணிக்கு கொழும்பு 07, பொது நூலக கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளன.

IDM Nations Campus International அனுசரணையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் கவிக்கமல் , பாசில், ரஜினி இணைந்து வழங்கும் "அக்ஷரா" - "வீனஸ்" இசைக்குழுவினர்களின் "தேனும் பாலும் கலந்த வசந்த கானங்கள்" இசை நிகழ்வும் இடம்பெறவுள்ளது. இந்நிகழ்வில் இலங்கையின் முன்னணி பாடகர்களான கவிக்கமல், பாசில், நித்தியகலா,கோபி, கீதா,சான்,ஜெயமோகன், டாக்டர் ஜமீல் ஆகியோரின் பாடல்களும் இடம்பெறவுள்ளன. முற்றிலும் இலவசமாக இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் கவிஞர்கள் , அரசியல் பிரமுகர்கள், ஊடகவியலாளர்கள்,கலைஞர்கள்,தொழிலதிபர்கள் என பல்வேறு தரப்பினரும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.இதன்போது கலைஞர்களை ஊக்குவிக்கும் "உழைப்பால் உயர்ந்தவர்கள்" வரிசையில் தேசமான்ய தேசகீர்த்தி, தேசசக்தி, லங்காபுத்ர குருசாமி பிச்சைக்கிருஷ்ணா கௌரவிக்கப்படவுள்ளார்.

# ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் 26ஆவது வருடாந்த பொதுக்கூட்டம்

SLMMF

*(பொலிவேரியன் செய்தியாளர்)*

ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் 26ஆவது வருடாந்த பொதுக்கூட்டம் 310 டி.ஆர்.விஜேவர்தன மாவத்தையில் அமைந்துள்ள தபால் தலைமைக் காரியாலயத்தில் எதிர்வரும் 25ஆம் திகதி காலை 09 மணி முதல் நடைபெறும்.

மீடியா போரத்தின் தலைவி புர்கான் பீ.இப்திகார் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில், இலங்கைக்கான மலேசியத் தூதுவர் பதி ஹிஷாம் ஆதம் பிரதம அதிதியாகக் கலந்துகொள்வதோடு, சிறப்பதிதியாகக் களனிப் பல்கலைக்கழகத்தின் தொல்லியல் பட்டதாரி நிறுவனத்தில் தொல்லியல் துறையில் சிரேஷ்ட பேராசிரியராகக் கடமையாற்றும் தெல்ஹகவத்தகே ராஜ்குமார் சோமதேவவும் கலந்து கொண்டு 'இலங்கையில் முஸ்லிம்கள் மீள் நோக்கிப் பார்த்தல்' எனும் தலைப்பில் விசேட உரையாற்றவுள்ளார்.

இரு அமர்வுகளாக நடைபெறும் இக்கூட்டத்தின் முதல் அமர்வில் ஊடகத்துறையில் பல வருடங்களாக சேவையாற்றியுள்ள சிங்கள, தமிழ், முஸ்லிம் ஊடகவியலாளர்கள் கௌரவிக்கப்படவுள்ளதோடு, அண்மையில் மறைந்த சிரேஷ்ட ஊடகவியலாளரான கலைவாதி கலீல் அரங்கில் அவர் பற்றிய இரங்கலுரைகளும் இரண்டாவது அமர்வில் புதிய செயற்குழு தெரிவு செய்யும் நிகழ்வும் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பெயர் மாற்றம்

ஹெலயன்வத்த, கம்கருவிடுதி, எலபாத்த, இரத்தினபுரியைச் சேர்ந்த தேசிய அடையாள அட்டை இல 895973785 ஐ கொண்ட செல்வத்துரை செல்வகுமாரி ஆகிய நான் இன்று முதல் புனித இஸ்லாம் மதத்தைத் தழுவி எனது பெயரை ஆயிஷா உம்மா என மாற்றிக் கொண்டுள்ளேன் எனவும் இனிமேல் சகல ஆவணங்களிலும் எனது புதிய பெயரையே பயன்படுத்துவேன் எனவும் இத்தால் இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசுக்கும் மக்களுக்கும் அறியத்தருகின்றேன்.

ஆயிஷா உம்மா

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
திங்கட்கிழமை 2023.06.19
உத்தியோகபூர்வ முடிவுகள்
www.nlb.lk
NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 5150
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 17,904,007.00
ஆங்கில எழுத்து U
வெற்றி இலக்கங்கள் 4 4 1 9 4 0

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3392
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 64,376,334.40
ஆங்கில எழுத்து V
வெற்றி இலக்கங்கள் 23 42 45 60

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 1605
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 12,723,735.12
வெற்றி இலக்கினம்
வெற்றி இலக்கங்கள் 7 0 2 0 6 4

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் 1180
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 95,625,763.60
ஆங்கில எழுத்து I
வெற்றி இலக்கங்கள் 38 46 49 51

ராசி சுப பலன்
Handahana
சீட்டிழுப்பு இலக்கம் 459
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,728,669.20
வெற்றி இலக்கினம் மேஷம்
வெற்றி இலக்கங்கள் 02 07 10 16
விசேட இலக்கினம் மேஷம்

Mega POWER
சீட்டிழுப்பு இலக்கம் 1498
அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 330,691,690.00
ஆங்கில எழுத்து H
சுப்பர் இலக்கம் 04
வெற்றி இலக்கங்கள் 01 43 73 78
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

# பாதிப்புற்ற மக்களின் பிரச்சினைகளை இந்தியா இல்லாமல் தீர்க்க முடியாது



## முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன்

(வவுனியா நிருபர்)

பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் பிரச்சினையை இந்தியா இல்லாமல் ஒருபோதும் தீர்க்க முடியாது - என வன்னி மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் பத்மநாபாவின் 33 ஆவது நினைவுதினம் வவுனியா நகர மத்தியிலுள்ள அவரது சிலையடியில் இடம்பெற்றது. ஈ.பி.ஆர்.எல்.எவ். வவுனியா அலுவலகத்தில் நடைபெற்ற அஞ்சலி உரையின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர்,

யுத்தம் முடிந்து 14 ஆண்டுகளில் தமிழ் மக்களுக்கான தீர்வொன்றையோ அல்லது போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான ஏனைய பிரச்சினைகளையோ தீர்க்கமுடியாத நிலையே காணப்படுகிறது.

இதற்கப்பால் ஒருசில கட்சிகளைத் தவிர ஏனைய தமிழ்த் தேசியக் கட்சிகள் மீண்டும் இந்தியாவையே நாடியிருக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. இந்தியா இல்லாமல் இந்தப் பிரச்சினையைத் தீர்க்கமுடியாது எனக் கூறியே இந்தியாவை நாடியிருக்கின்றது.

இந்தியப் பிரதமர் ஈழத்தமிழர்களின் பிரச்சினைக்கு இலங்கைக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் என்ற நிலைப்பாடு ஏற்பட்டுள்ளது. ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிர்வாகம் கூடியபோதும் முக்கியமாக ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அதாவது, 21 ஆம் திகதி இலங்கை ஜனாதிபதி இந்தியப் பிரதமரை சந்திக்கவுள்ளார். இந்தச் சந்திப்பில் ஈழத்தமிழர்களின் பிரச்சினைக்கு நிரந்தரமான அரசியல் தீர்வைக் காணவேண்டும். அதற்கும் அப்பால் இலங்கை - இந்திய ஒப்பந்தத்திலுள்ள 13ஆவது திருத்தச் சட்டத்தின் பிரகாரம் மாகாண சபைக்குள்ள முழுமையான அதிகாரங்கள் வழங்கப்படவேண்டும், போரால் ஏற்பட்ட பல்வேறு பிரச்சினைகளான நில ஆக்கிரமிப்பு, பௌத்த மயமாக்கல் போன்ற பல பிரச்சினைகளுக்கு இந்தியப் பிரதமர் இலங்கை ஜனாதிபதிக்கு அழுத்தத்தைப் பிரயோகித்து பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் ஏனைய தமிழ்த் தேசிய பரப்பிலுள்ள கட்சிகளும் இணைந்து குறித்த சந்திப்புக்கு முன்னதாக இந்தியப் பிரதமருக்கு ஒரு கடிதத்தை கையெழுத்திட்டு அனுப்பவேண்டும் என்ற தீர்மானம் எட்டப்பட்டுள்ளது – என்றார்.

# 09 தமிழக கடற்றொழிலாளர்கள் கைது

(யாழ். நிருபர்)

இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் ஒன்பது தமிழக கடற்றொழிலாளர்கள் கைதுசெய்யப் பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்டவர்கள் தமிழகத்தின் இராமேஸ்வரம் பகுதியைச் சேர்ந்தவர்கள் எனத் தெரியவருகிறது.

நெடுந்தீவு அருகே நேற்று முன்தினம் (19) திங்கட்கிழமை இரவு அப்பகுதியில் ரோந்துப் பணியில் ஈடுபட்ட இலங்கை கடற்படையினர் இலங்கை கடற்பரப்பினுள் அத்துமீறி நுழைந்த தமிழக படகொன்றை கைப்பற்றியதுடன், அதிலிருந்த ஒன்பது கடற்றொழிலாளர்களையும் கைதுசெய்தனர்.

கைதுசெய்யப்பட்ட கடற்றொழிலாளர்களை மயிலிட்டிக்கு அழைத்துச் சென்று கடற்றொழில் மற்றும் நீரியல் வளத்துறை திணைக்களத்தினிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

வடக்கு செய்திகள்
thamilannorth@gmail.com

# மன்னார் மாவட்ட விவசாயிகளுக்கு பயறு, உளுந்து விதைகள் வழங்கிவைப்பு

(மன்னார் நகர் நிருபர்)

மறு வயல் பயிர்ச்செய்கையை ஊக்குவிக்கும் நோக்குடன் மன்னார் மாவட்ட விவசாயிகளுக்கு பயறு மற்றும் உளுந்து விதைகள் நேற்று முன்தினம் திங்கட்கிழமை (19) இலவசமாக வழங்கப்பட்டுள்ளன.



நாட்டின் உணவுப் பாதுகாப்பை உறுதிசெய்யும் நிகழ்ச்சித் திட்டத்துக் கமைவாக நாட்டின் பொருளாதார நெருக்கடியைக் கருத்திற்கொண்டு விவசாயிகளுக்கு கமத்தொழில் அமைச்சின் ஏற்பாட்டில் பயறு மற்றும் உளுந்து விதைகள் வழங்கப்பட்டுள்ளன.

மன்னார் பிரதேச பகுதிகளைச் சேர்ந்த 140 விவசாயிகள் தெரிவுசெய்யப்பட்டு 130 விவசாயிகளுக்கு பயறு விதைகளும் 10 விவசாயிகளுக்கு உளுந்து விதைகளும் நேற்று முன்தினம் மன்னார் உயிலங்குளம் கமநல சேவைகள் நிலையத்தில் காலை 9.30 மணியளவில் வைபவ ரீதியாக இலவசமாக வழங்கப்பட்டன.

குறித்த நிகழ்வில் இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான், மன்னார் பிரதேச செயலாளர் எம்.பிரதீப், மன்னார் மாவட்ட விவசாயப் பணிப்பாளர் ஆகியோர் கலந்துகொண்டு இந்த விதைகளை விவசாயிகளுக்கு வழங்கினர்.

இவ்வாறு மாந்தை மேற்கு, மடு, நானாட்டான் மற்றும் முசலி பிரதேச செயலாளர் பிரிவில் தெரிவுசெய்யப்பட்ட பயனாளிகளுக்கு வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# குழந்தைகளுக்கிடையிலான வயது இடைவெளியை குறைத்து சனத்தொகையை அதிகரிக்க தாய்மார் முன்வரவேண்டும்

## மேலதிக சுகாதார வைத்திய அதிகாரி சிவசுதன் கோரிக்கை

(சாவகச்சேரி நிருபர்)

குழந்தைகளுக்கிடையிலான வயது இடைவெளியைக் குறைத்து சனத்தொகையை பெருக்கிக்கொள்ள தாய்மார்கள் முன்வர வேண்டியது காலத்தின் கட்டாயம் - என சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் மேலதிக சுகாதார வைத்திய அதிகாரி க.சிவசுதன் தெரிவித்துள்ளார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை தென்மராட்சி-மட்டுவில் மோகனதாஸ் சனசமூக நிலையத்தில் இடம்பெற்ற ஆண்டு விழா நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் மேற்படி தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில், இன்று பல சனசமூக நிலையங்கள் இயக்கமின்றி பெயரளவில் மாத்திரம் காணப்படுகின்றன. அந்த நிலையில் மட்டுவில் மோகனதாஸ் சனசமூக நிலையம் 75ஆவது ஆண்டு விழாவை முன்னெடுப்பதும், அதில் பெருமளவானவர்கள் கலந்துகொண்டிருப்பதும் ஆச்சரியமளிக்கிறது. மக்கள் மத்தியில் மாற்றம் ஏற்பட்டிருப்பது வரவேற்கத்தக்கது.

இன்று கோவில் திருவிழாக்களில் மாத்திரமே சனத்தொகையைக் காண முடிகிறது.

சனசமூக விழாக்கள் மற்றும் விளையாட்டு நிகழ்வுகளில் மக்கள் பங்குபற்றுவது மிக மிகக் குறைவாகவே உள்ளது.

சனசமூக நிலையங்கள் இயக்கமின்றி காணப்பட பல காரணங்கள் உள்ளன. அதில் ஒரு காரணம் புலம்பெயர்வு. நாம் சிறுவர்களாக இருந்தபோது இருந்த பல சனசமூக நிலையங்கள் இன்று இல்லை. அந்த சனசமூக நிலையங்களை முன்நின்று நடத்திய இளைஞர்கள் பலர் யுத்தத்தில் இறக்க, மீதிப் பேர் வெளிநாடுகளுக்குச் சென்றுள்ளனர்.

இதனால் அடுத்த தலைமுறையினர் சனசமூக நிலையங்களைத் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்லத் தயாராக இல்லை. புலம்பெயர்வு என்பது பாரிய பிரச்சினையாக அமைந்து காணப்படுகின்றது. சனத்தொகை குறைந்து கொண்டே செல்கிறது.

நான் தாய்மார்களிடம் கேட்பது ஒன்றே ஒன்றுதான். குழந்தைகளுக்கு இடையிலான வயது இடைவெளியைக் குறையுங்கள். ஒரு குழந்தை பெற்றால் 8 மாதங்களின் பின்னர் அடுத்த குழந்தைக்குத் தயாராகுங்கள். ஆனால், நாம் முதல் குழந்தை பாடசாலைக்குச் சென்ற பின்னரே அடுத்த குழந்தை பற்றி சிந்திக்கின்றோம். அந்த இடைவெளியைக் குறைத்து சனத்தொகையை அதிகரிக்க வேண்டும்.

அத்துடன், தற்போது குடும்ப உறுப்பினர்களுக்கு இடையிலும் உறவினர்கள் மத்தியிலும் உறவு இடைவெளி அதிகரித்துக் காணப்படுகிறது. பிள்ளையுடன் கதைப்பதற்கு அலாரம் வைத்து எழும்பவேண்டிய காலகட்டத்தில் வாழ்ந்து வருகிறோம்.

பெற்றோர்கள் கல்வியை முன்னிலைப்படுத் துவதால் பிள்ளைகள் ஓய்வின்றி ஓடுகின்றனர். பிள்ளைகள் சனசமூக நிலைய நிகழ்வுகள், விளையாட்டு நிகழ்வுகள் மற்றும் கலாசார நிகழ்வுகளில் பங்குபற்ற வேண்டும்.

இன்று பெரியவர்களை மதிக்கும் தன்மை எம்மவர்கள் மத்தியில் குறைந்து வருகிறது. நாம் இதனை எமது சகோதர இனத்தவர்களிடமிருந்து கற்றுக்கொள்ள வேண்டும்.

அறநெறிப் பாடசாலைகள் ஊடாக எமது அடுத்த தலைமுறைக்கு ஒழுக்க விழுமியங்களை போதிக்க வேண்டும். பாடசாலைகள் கூட கல்விக்கு மாத்திரமே முக்கியத்துவம் கொடுக்கின்றன.

இன்று சமூகத்தில் போதைவஸ்து உள்ளிட்ட பாரிய பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்து வருகிறோம். மன அழுத்தம் இன்று பலருக்கும் பெரிய ஒரு பிரச்சினையாக உள்ளது. பெற்றோர்கள் கல்விக்கு கொடுக்கும் அதே முக்கியத்துவத்தை விளையாட்டு மற்றும் விழுமியங்களைப் போதிப்பதற்கும் கொடுக்க வேண்டும் – என்றார்.

# யாழில் இரு மருத்துவர்களின் வீடுகள் மீது குண்டுத் தாக்குதல்

யாழில் இரு மருத்துவர்களின் வீடுகள் மீது பெற்றோல் குண்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

யாழில் கந்தர்மடம் பழம் வீதியிலுள்ள மருத்துவர்களின் வீடுகள் மீதே இவ்வாறான செயலை மேற்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு 10.30 மணியளவில் (ஜூன் 19) மேற்கொள்ளப்பட்டது என்று யாழ்ப்பாணம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அத்தோடு நபர் எவருக்கும் பாதிப்பு இல்லை எனத் தெரிவித்த பொலிஸார் சம்பவம் தொடர்பில் விசாரணைகள் இடம்பெறுவதாகத் தெரிவித்துள்ளனர்.

இதனையடுத்து தாக்குதல் நடத்தப்பட்ட வீட்டில் இருவர் மருத்துவர் என்று குறிப்பிட்ட பொலிஸார், காணிப் பிணக்கு ஒன்றை வைத்தே இந்தத் தாக்குதலை மேற்கொண்டதாக ஆரம்ப விசாரணைகளில் தெரிய வருவதாகவும் கூறினர்.

# சிவனொளிபாதமலை யாத்திரைக்கு முன்னர் தியகல – நோர்ட்டன் பிரிட்ஜ் வீதியை நவீனமயப்படுத்த தீர்மானம்

## ஜனாதிபதி விசேட கவனம்



(மஹுர சுதத் செல்லஹேவா)

சிவனொளிபாதமலை யாத்திரை ஆரம்பமாகு வதற்கு முன்னர் பயன்படுத்த முடியாத நிலையில் இருக்கும் தியகல - நோர்ட்டன் பிரிட்ஜ் வீதியை நவீனமயப்படுத்துவது தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கவனம் செலுத்தியுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் மஸ்கெலியா பிரதான ஒருங்கிணைப்பாளர் கே.கே.பிரியதாச தெரிவித்தார்.

மஸ்கெலியா தேர்தல் தொகுதிக்கு உட்பட்ட பிரதேசங்களின் அடுத்தகட்ட அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே இதனைக் குறிப்பிட்டார்.

தியகல, நோர்டன் பிரிட்ஜ் வீதியின் ஒரு பகுதி தற்போது வரையில் சேதமடைந்துள்ள நிலையில், அந்த வீதியில் பல்வேறு விபத்துகளும் இடம்பெறுகின்றன. சிவனொளிபாதமலை யாத்திரை காலத்தில் விபத்துகள் அதிகரிக்கும் நிலை காணப்படுகின்றது.

கடந்த வருடம் இடம்பெற்ற யாத்திரை காலத்தின் போது இந்த வீதியில் பஸ் ஒன்று விபத்துக்குள்ளானதில் உயிரிழப்புகளும் இடம் பெற்றிருந்தன. இந்நிலைமை தொடர்பில் கவனம் செலுத்தி இந்த வீதியை சிவனொளிபாதமலை யாத்திரைக் காலம் ஆரம்பிப்பதற்கு முன்னர் நவீன மயப்படுத்துவது தொடர்பில் ஜனாதிபதி கவனம் செலுத்தியுள்ளார். இந்த விடயம் குறித்து போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரின் கவனத்திற்கும் கொண்டுசெல்லப்பட்டுள்ளது.

மேலும், மஸ்கெலியா தேர்தல் தொகுதிக்குட்பட்ட பொகவந்தலாவை பிரதேசத்தில் கோல்ப் விளையாட்டு மைதானமொன்றை நிர்மாணிப்பதற்கும் இடைநிறுத்தப்பட்டுள்ள பொகவந்தலாவை வீதியின் நவீனமயப்படுத்தும் நடவடிக்கைகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

இதற்கும் மேலதிகமாக மஸ்கெலியா தொகுதியில் மேலும் அபிவிருத்தி நடவடிக்கைகள் முன்னெடுப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளதுடன் அந்த அபிவிருத்தித் திட்டங்களினூடாக எதிர்காலத்தில் இந்தப் பிரதேசத்தில் மக்களின் வாழ்வாதாரமும் பலமடையும் என்று நம்புவதாக அவர் மேலும் சுட்டிக்காட்டினார்.

# வை. எம். எம். ஏ. பேரவையின் வருடாந்த தேசிய மாநாடு பதுளையில்

(இக்பால் அலி)

அகில இலங்கை வை. எம். எம். ஏ. பேரவையின் 73 ஆவது வருடாந்த தேசிய மாநாடு எதிர்வரும் 24 ஆம் திகதி சனிக்கிழமை 10.00 மணிக்கு பதுளை கெப்பிட்டல் சிட்டி ஹோட்டலில் தேசியத் தலைவர் இஹ்சான் ஏ. ஹமீட் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக தபால் மற்றும் துறைமுக அமைச்சர் நிமால் ஸ்ரீபால டி சில்வாவும், கௌரவ அதிதியாக கல்வி இராஜாங்க அமைச்சர் ஏ. அரவிந்தகுமாரும் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

நாட்டின் பல பாகங்களிலுமுள்ள 170 க்கும் மேற்பட்ட அகில இலங்கை வை. எம். எம். ஏ கிளைகளின் பிரதிநிதிகள் இம்மாநாட்டில் கலந்துகொள்ளவுள்ளனர்.

# ஸ்ரீ நாக காளியம்மன் ஆலய அஷ்டபந்தன பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகம்

(பதுளை நிருபர்)

ஹல்துமுல்ல நீட்வூட் ஸ்ரீ நாக காளியம்மன் ஆலய அஷ்டபந்தன பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகப் பெருவிழா எதிர்வரும் 26ஆம் திகதி ஆரம்பமாகி, 28ஆம் திகதி மஹா கும்பாபிஷேகம் இடம்பெறவுள்ளதாக ஆலய நிர்வாகம் தெரிவித்துள்ளது.

26ஆம் திகதி கிரியாரம்பம், விநாயக வழிபாடு, புண்ணியாகவாஜனம், கணபதி ஓமம், திருக்கண் திறத்தல், தீர்த்த சங்கீரணம் ஆகியனவும், 2ஆம் திகதி அக்னி காரியம் துவஜம், சுவாமி திருச் சிலைகளுக்கு எண்ணைக்காப்பு சாத்துதல் உள்ளிட்ட ஆகம நிகழ்வுகளும் இடம்பெற்று, மறுதினம் 28ஆம் திகதி முற்பகல் 9.15 முதல் 10.15 மணிக்குள் வரும் சுபவேளையில் மஹாகும்பாபிஷேகம் நடைபெறும்.

இதையடுத்து, அடியார்களுக்கு அன்னதானம் வழங்கப்படும். உயிருடன் நாகங்கள் வாழ்ந்து வரும் இவ்வாலய மஹா கும்பாபிஷேகக் கிரியைகளை களுபானை ஸ்ரீதேவி கருமாரியம்மன் தேவஸ்தான பிரதம குருவான பிரம்மஸ்ரீ பாலமூர்த்தீஸ்வர சிவாச்சாரியார் தலைமையிலான சிவாச்சாரியார்கள் ஆகம விதிப்படி நடத்தி வைப்பர்.

மஹா கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து 48 நாட்களுக்கு மண்டலாபிஷேகப் பூஜை நிகழ்வுகளும் இடம்பெறும்.

# எம்பிலிப்பிட்டிய பிரதேசத்தில் பெருந்தொகை கஞ்சா மீட்பு!

## சந்தேகநபர்கள் மூவர் கைது



(ஏ.ஏ.எம்.பாயிஸ்)

இலங்கை வரலாற்றிலேயே முதலாவது தடவையாக அதிகளவிலான உலர் கஞ்சா நேற்று முன்தினம் எம்பிலிப்பிட்டிய பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

எம்பிலிப்பிடிய புதிய நகரிலுள்ள மாடிவீடொன்றின் மேல் மாடியில் விசேட பாதுகாப்புடன் கூடிய அறையொன்றில் இவை விற்பனைக்காக தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்ததாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இங்கு, 1,150 கிலோ கிராம் உலர் கஞ்சாவுடன் சந்தேக நபர்கள் மூவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். அத்துடன், இதன் போது கைப்பற்றப்பட்ட இரண்டு தராசுகள் உள்ளிட்ட உபகரணங் களுடன் சந்தேகநபர்களை நீதி மன்றத்தில் ஆஜர்ப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

மலையக செய்திகள்
thamilanmalayagam@gmail.com





சப்ரகமுவ மாகாணத்தில் கல்வி நிர்வாகசேவையில் சேவையாற்றி ஓய்வுபெற்ற முன்னாள் பிரதி மற்றும் உதவிக் கல்விப்பணிப்பாளர்களான ஐ. பாண்டு ரெங்கநாதன், செல்வராஜ், செல்வி கலாரமணி அம்மையார் ஆகியோரின் சேவை நலனைப் பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் இரத்தினபுரி புதிய நகரில் கேத்துமதி விருந்துபசார மண்டபத்தில் இடம்பெற்றது. இந்திகழ்வை சப்ரகமுவ தமிழ்பேசும் கல்வியியலாளர் ஒன்றியம் ஏற்பாடு செய்திருந்தது. (படங்கள் -அவிசாவளை நிருபர்)

# கொத்மலையில் இறைச்சிக்காக கொல்லப்படும் எருமை மாடுகள்

## பாதுகாப்பு நடவடிக்கையை தீவிரப்படுத்துமாறு மக்கள் கோரிக்கை

(தலவாக்கலை நிருபர்)

கொத்மலை பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட கிராமங்களில் இருக்கும் எருமை மாடுகள் கொல்லப் படுவதாகவும் அவ்வாறு கொல்லப்படும் மாடுகள் இறைச்சிக்காகப் பயன்படுத்தப்படுவதாகவும் அப்பிரதேசவாசிகள் தெரிவிக்கின்றனர்.

கொத்மலை, கடதொர மற்றும் ரன்மல்ஹா ஆகிய பிரதேசங்களில் அண்மையில் எருமை மாடொன்றைக் கொன்று அதன் தலையை வீதியில் விட்டுவிட்டு எஞ்சிய பாகங்களை இறைச்சிக்காக சிலர் எடுத்துச் சென்றுள்ளதாகவும் அந்தப் பிரதேசங்களைச் சேர்ந்த மக்கள் குறிப்பிடுகின்றனர்.

மேலும் கிராமங்களில் இரவு வேளைகளில் சுற்றித்திரியும் எருமைகளைக் கொன்று இறைச்சியை எடுத்துச் சென்று அதன் இறைச்சியை கடைகளில் விற்பனை செய்வதை சிலர் வழக்கமாகக் கொண்டுள்ளதாகவும் கிராம மக்கள் குறிப்பிடுகின் றனர். கொத்மலையை சூழவுள்ள கிராமங்களில் அதிகளவான எருமைகள் சுற்றித்திரிவதாகவும் இவற்றில் பெரும்பாலான விலங்குகள் மக்களால் கைவிடப்பட்டமையினால் தற்போது காட்டு எருமைகளாக மாறியுள்ளதாகவும் மலையக சுற்றாடல் அமைப்புகள் தெரிவிக்கின்றன.

வனப் பகுதிகளை அண்மித்து வாழும் மக்கள் சுற்றித் திரியும் எருமை மாடுகளை இறைச்சிக்காக வேட்டையாடி வருகின்றனர். எனவே, இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனம் செலுத்தி சுற்றித் திரியும் எருமை மாடுகளை பாதுகாக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென பிரதேச மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# ஜனநாயக ரீதியில் அதிகாரத்துக்கு வருவதற்கு முடியாதோர் சதிமூலம் பதவிக்கு முயற்சி

## அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவிப்பு



ஜனநாயக ரீதியில் அதிகாரத்துக்கு வர முடியாதவர்களே மக்கள் மனதில் வெறுப்பை விதைத்து சதி மூலம் பதவிக்கு வர முயற்சிக்கிறார்கள் என நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாவலப்பிட்டி தொகுதிக்கான பொதுக்கூட்டம் (18) இடம்பெற்றது. இந்நிகழ்வில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்த அமைச்சர் மேலும் கூறியதாவது:-

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன 2015 இல் மஹிந்த ராஜபக்ஷவின் தோல்வியின் பின்னர் ஆரம்பமான கட்சி. மஹிந்த ராஜபக்ஷ பற்றி நாம் புதிதாக எதுவும் சொல்லத் தேவையில்லை. 30 வருட கால யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வந்து மக்கள் அச்சமின்றி வாழக்கூடிய சூழலை உருவாக்கியது மட்டுமன்றி, நெடுஞ்சாலைகளை அமைத்து நாட்டை அபிவிருத்தியடையச் செய்த தலைவர் .

இந்தக் கட்சி நல்ல அடித்தளத்தில் கட்டப்பட்ட கட்டடம். எங்களிடம் நல்ல உறுப்பினர்கள் குழு உள்ளது.ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்கு சவால்விடக்கூடிய வேறு எந்த அரசியல் கட்சியும் இன்று இல்லை. அதனால்தான் இக்கட்சியின் தலைமையை அழிக்க போராட்டக்காரர்கள் பாடுபட்டனர். 2019 ஜனாதிபதித் தேர்தலில் கோட்டாபய ராஜபக்ஷ பெரும் நம்பிக்கையுடன் வெற்றிபெற்றதைக் கண்டோம். பாராளுமன்றத் தேர்தலில் மூன்றில் இரண்டு பங்கு அதிகாரம் எமக்கு வழங்கப்பட்டது. துரதிர்ஷ்டவசமாக, கொவிட் வைரஸால் ஒட்டுமொத்த உலகப் பொருளாதாரமும் சரிந்தது. நாமும் அந்தச் சவாலை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. அப்போது அனுபவம் வாய்ந்த அமைச்சர் குழுவை நாங்கள் வைத்திருந்தோம். ஆனால், மின்சாரம் துண்டிக்கப்பட்டு எரிபொருள் வரிசைகள் உருவாக்கப்பட்ட போது அந்த அமைச்சர்களால் தீர்வுகளை வழங்க முடியவில்லை.

கடந்த ஆண்டு பொருளாதார நெருக்கடியால் மக்கள் பாதிக்கப்பட்டபோது எங்கள் கட்சி பெரும் புயலில் சிக்கியது. பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் கொல்லப்பட்டார். மக்கள் பிரதிநிதிகளின் வீடுகள் எரிக்கப்பட்டன. கட்சியினர் பல பிரச்சினைகளைச் சந்திக்க வேண்டியிருந்தது. இந்த நேரத்தில், ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன கலைந்துவிடும் என்று பலர் எதிர்பார்த்தனர். ஆனால், இன்றும் இந்த நாட்டில் மிகவும் பலமான மற்றும் மிகவும் ஒழுங்கமைக்கப்பட்ட அரசியல் கட்சி என்றால் அது ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தான்.

கடந்த ஆண்டு நீங்கள் நியமித்த தலைவர், பதவியை விட்டு வெளியேறினார். மஹிந்த ராஜபக்ஷ பிரதமர் பதவியை இராஜினாமா செய்தார். அமைச்சரவை வெளியேறியது. அதன்பிறகு 69 இலட்சம் மக்களின் தேவைகளை நிறைவேற்றக்கூடிய அரசை அமைக்க விரும்பினோம். அதன்படி நாட்டைக் கட்டியெழுப்பக்கூடிய தலைவரை அழைத்தோம். பல தலைவர்கள் அழைப்பை ஏற்கவில்லை. பின்னர் நாட்டின் தலைமைத்துவத்தை ரணில் விக்கிரமசிங்கவிடம் ஒப்படைக்க கட்சி தீர்மானித்தது. இரண்டு எதிரிகள் சேர்ந்து என்ன செய்கிறார்கள் - என்று பலர் கேட்கிறார்கள்.

69 இலட்சம் மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுவதற்கு நாங்கள் நிபந்தனையின்றி ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிக்கிறோம். அன்று ரணில் விக்கிரமசிங்கவுக்கு உதவுவதற்காக எடுக்கப்பட்ட தீர்மானம் குறித்து இன்று நான் மகிழ்ச்சியடைகிறேன். அப்போது அவர் சவாலை ஏற்று நாட்டைக் கட்டியெழுப்புவார் என நினைத்தோம். வீழ்ந்த நாட்டைக் கட்டியெழுப்புவதற்காக எடுக்கப்பட்ட சில முடிவுகள் மக்கள் ஆதரவு கிடைக்கும் முடிவுகள் அல்ல. ஆனால், அவை மிகவும் நல்ல முடிவுகள். மூன்று சதவீத உறுப்பினர்களை வைத்து ஜனநாயகத்தின் மூலம் ஆட்சிக்கு வர முடியாதவர்கள் சதி மூலம் ஆட்சிக்கு வர முயற்சிக்கின்றனர். மக்கள் ஏற்கனவே அவர்களை நிராகரித்து விட்டனர். போராட்டத்திலிருந்து அலையை உருவாக்க முயன்றனர். ஆனால், தற்போது அந்த அலை மணலில் புதைந்து விட்டது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை பலப்படுத்துவதற்காக மக்கள் மீண்டும் மொட்டுடன் இணைந்து செயற்பட்டு வருகின்றனர். 69 இலட்சம் என்ற ஆணையை ஒருபோதும் காட்டிக்கொடுக்க மாட்டோம் என்றார்.

# கலைக்கமலின் கீத்ராத் இசை நிகழ்ச்சியும் பாராட்டு விழாவும்



(அஷ்ரப் ஏ. சமத்)

கலைக்கமலின் 58ஆவது கீத் ராத் இசை நிகழ்ச்சியும் பாராட்டு நிகழ்வும் கொழும்பு 7, ஜே.ஆர்.ஜெயவர்த்தன மண்டபத்தில் 18ஆம் திகதி இரவு இடம்பெற்றன.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் ஆலோசகர் இலக்கியப் புரவலர் ஹாஷிம் உமர், கல்வி மற்றும் சமூக சேவையில் தன்னை அர்ப்பணித்த பிரபல தொழிலதிபர் எம்.சி பஹார்தீனுக்கு 'கலைக்கமல் சமூக தீபம்' என்னும் பட்டம் வழங்கி கௌரவித்தார்.

கீத் ராத் நிகழ்ச்சியில் பிரபல இசைக்குழுவினர்களான விசாரத ரட்ணம், ரட்ணதுறை,செந்தூரன், அயாஸ் சவாஹிர் ஜென், பாடகிகளான மொரின், ஜெனட், அபிலாஷா, ரோய் ஜெக்சன்,உபைத் மஹ்தும் கலைக்கமல் ஆகியோர் கலந்து கொண்டு பாடல்களைப் பாடினர்.

## உயிரினங்களின் அட்டகாசத்தால்

# கேகாலை மாவட்டத்தில் உணவு உற்பத்தி பாதிப்பு

## கட்டுப்படுத்த உடன் நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை



(எம்.எஸ். அமீர் ஹுசைன்)

கேகாலை மாவட்டத்தில் குரங்குகள், காட்டுப் பன்றி, முள்ளம்பன்றி, நத்தை, காட்டெலி போன்ற உயிரினங்களினால் விவசாய செய்கை மற்றும் வீட்டுத் தோட்டச் செய்கைக்கு பெரும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. இதனால் எதிர்காலத்தில் கடுமையான உணவுப் பஞ்சம் ஏற்படும் அபாயம் இருப்பதாக கேகாலை மாவட்ட சமூக நடவடிக்கைக்கான அமைப்பின் பிரதிநிதிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

கேகாலை மாவட்ட சமூக நடவடிக்கைக்கான அமைப்பு நேற்று முன்தினம் மாவனல்லை கனேதன்னை சங்ஹிந்த ஹோட்டலில் நடத்திய செய்தியாளர் மாநாட்டின்போதே மேற்கண்ட விடயம் சுட்டிக்காட்டப்பட்டது.

நாடு பொருளாதார நெருக்கடி நிலையை எதிர்கொண்டுள்ள இன்றைய காலகட்டத்தில் வீட்டுத் தோட்டச் செய்கை அன்றாட உணவுத் தேவையை ஈடுசெய்வதில் பெரும் பங்களிப்பாற்றி வருகின்றது.

அத்துடன், பிரதான பணப் பயிர்களாக தென்னை, சாதிக்காய் போன்ற பயிர்கள் இருந்து வருகின்றன. இவற்றுக்கும் மேலதிகமாக மரவள்ளி போன்ற கிழங்கு வகைகளும் பயிரிடப் படுகின்றன.

இந்நிலையில், மேற்குறித்த உயிரினங்கள் இரவு நேரங்களில் விவசாய நிலங்கள் வீட்டுத் தோட்டங்களுக்குள் புகுந்து அவற்றின் உணவுக்காக இவ்வாறான பயிர்களை முற்றாக நாசம் செய்து வருகின்றன. அதனால் மக்கள் கடுமையாகப் பாதிக்கப்படுகின்றனர். தங்களுக்கான நிலத்தை வைத்துக்கொண்டு எந்த விதமான பயிர்களையும் பயிரிட முடியாமல் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். இதனால் மக்களது வருமானங்களும் வீழ்ச்சி கண்டு வருகின்றன.

அதேபோன்று குரங்குகளும் மர அணில்களும் தென்னை, வாழை உட்பட பழவர்க்கங்களை நாசப்படுத்தி வருகின்றன. தற்போதைய நிலையில் தேங்காய் விலையுயர்வாக இருந்தாலும் தென்னந் தோட்டம் வைத்திருப்பவர்களுக்கு அதனால் போதுமான பிரதிபலனை அடைய முடியாமல் உள்ளது.

குரங்குகளின் எண்ணிக்கையைப் பொறுத்தவரையில் கேகாலை மாவட்டத்தில் மாவனல்லை, அரனாயக்க, அஸ்மடல, மஹன்தேகம, கடுகன்னாவை உட்பட பிரதான பகுதிகளில் 40 இலட்சத்துக்கம் மேற்பட்ட குரங்குகள் இருக்கலாம் என்று பிரதேச விவசாய சேவை நிலையங்களின் கணிப்பீடுகள் தெரிவிப்பதாக "அத்வெல" சமூக நல அமைப்பின் பிரதிநிதிகளான கே.ஜி. ஜயதிலக, பண்டார மற்றும் காந்தி குணவர்தன ஆகியோர் தெரிவிக்கின்றனர்.

கேகாலை மாவட்டம் விவசாயம் மற்றும் பயிரிடலுக்குப் பொருத்தமான காலநிலை, செழிப்பான மண்வளம் என்பவற்றைக் கொண்டிருந்தாலும் அதன்மூலம் உரிய பலனை அடைய முடியாததால் எதிர்காலத்தில் இப்பிரதேசத்தில் பாரிய உணவுத் தட்டுப்பாடு ஏற்படலாம் என்று அஞ்சப்படுகின்றது.

அதனால் இவ்விடயத்தில் அரசாங்கம் உடனடியாக கவனம் செலுத்தி குரங்குகள், மர அணில், காட்டுப் பன்றி, முள்ளம்பன்றி போன்றவற்றைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மேற்படி அமைப்பு வலியுறுத்துகின்றது.

# வெலிப்பன்னையில் சம்மேளனக் கூட்டம்





(பேருவளை நிருபர்)

களுத்துறை மாவட்ட முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகள் சம்மேளன விஷேட கூட்டம் வெலிப்பன்னையில் மாவட்டத் தலைவர் எம்.எம்.எம் ஜவ்பர் தலைமையில் இடம்பெற்றது.

மத்துகமை பிரதேச சபை முன்னாள் உறுப்பினர் எம்.எச்.எம் ரம்ஸானின் ஏற்பாட்டில் அண்மையில் இடம்பெற்ற இக்கூட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் பாக்கிர் மாக்கார் விஷேட அதிதியாகக் கலந்து கொண்டார்.

களுத்துறை மாவட்ட முஸ்லிம்களின் பிரச்சினைகள், முஸ்லிம் கிராமங்களில் நிலவும் முக்கிய குறைபாடுகள் தொடர்பில் இதன்போது விரிவாக ஆராயப்பட்டது.

வெலிப்பன்னை கிராமத்தில் நிலவும் பிரச்சினைகள் இங்கு சுட்டிக்காட்டப்பட்டன.

குடி நீர், வீதி புனரமைப்பு, வடிகால் திட்டம் மற்றும் பாடசாலையில் நிலவும் பௌதீக வளக் குறைபாடுகள் தொடர்பில் இதன்போது பாராளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் பாக்கிர் மாக்காரின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டது.



உடப்பு, முத்துப்பந்திய ஸ்ரீ முத்துமாரியம்மன் காட்டுக்கோயில் ஆலய வருஷாபிஷேகம் திங்கட்கிழமை (19)நடைபெற்றது. இந்நிலையில், ஆலயத்திலிருந்த கலசம் கடந்த 8ஆம் திகதி இனந்தெரியாதோரால் களவாடப்பட்டிருந்தது. அதன் பின்னர் மீண்டும் விஷேச பூஜை இடம்பெற்று கலசம் வைக்கப்பட்டு அபிஷேகம் நடைபெற்றது.விஷேட பூஜைகளை உடப்பு ஸ்ரீமுத்துமாரியம்மன் ஆலய பிரதம குரு சிவனேஸ்வரக்குருக்கள் நடத்தினார்.

(படங்கள்:உடப்பு செய்தியாளர்)

# ரக்பி விளையாட்டை மீளவும் ஆரம்பிக்கும் கொழும்பு ஸாஹிரா







1924 ஆம் ஆண்டு போட்டித்தன்மையுடன் விளையாடத் தொடங்கிய இலங்கையின் பாடசாலை அளவிலான ரக்பியின் முன்னோடிகளில் ஒன்றான கொழும்பு ஸாஹிரா கல்லூரி மீண்டும் ரக்பி விளையாட்டை ஆரம்பிக்கவுள்ளது.

இதற்கிணங்க ஸாஹிரா ரக்பி 2023 இன் A பிரிவுக்கு பிரதான அனுசரணை வழங்க Moose Clothing முன்வந்துள்ளது. அவர்கள் தவிர, Diamond Best Foods இன் ROZA இந்த ஆண்டு ஸாஹிரா ரக்பி விளையாட்டுக்கு இணை அனுசரணையை வழங்கவுள்ளது.

கடந்த சில வருடங்களாக ஸாஹிராக் கல்லூரி விளையாட்டுத்துறையில் பாரிய வளர்ச்சியடைந்துள்ளது.

பிரதான அனுசரணையாளர் மூஸ் ஆடை சந்தைப்படுத்தல் தலைவி கித்மின் டி சில்வா, இணை அனுசரணையாளர் Diamond Best Food சந்தைப்படுத்தல் தலைவர் ரிம்ஸான் பாரூக் ஆகியோர் சாஹிரா கல்லூரி அதிபர் ட்ரிஸ்வி மரிக்காருக்கு அனுசரணைகளை வழங்கினர்.



மேலும் Jersey> Bag and Ball ஆகியவை அறிமுகப்படுத்தப்பட்டன.

கல்லூரி ஆளுநர் சபையின் செயலாளர் அலவி முக்தார், விளையாட்டுக் குழுவின் தலைவர் நைனா மொஹம்மட், பழைய மாணவர் சங்கத் தலைவர் எம்.என். ஷிராஸ், செயலாளர் நுஸ்ரி முன்சூர்,கல்லூரி விளையாட்டுப் பொறுப்பாசிரியர் எம். இசட். பாரூக் மற்றும் றக்பி விளையாட்டுப் பிரிவு பிரதித் தலைவர் ஷர்வார் யூனூஸ் ஆகியோர் இதில் கலந்துகொண்டனர்.

# இரண்டு மாணவிகளுக்கு மடிகணினிகள் அன்பளிப்பு



(பதுளை நிருபர்)

பதுளை மலையக சிறுவர் இல்லத்திலிருந்து கல்வி கற்று,பல்கலைக்கழக அனுமதி பெற்றுள்ள இரு மாணவிகளுக்கு யாழ். செல்வச் சந்நிதியான் ஆச்சிரம சுவாமி மோகனதாஸ் மற்றும் மலையக இல்ல ஸ்தாபகர் ஆர்.எம். கிருஸ்ணசாமி ஆகியோர் இணைந்து மடி கணினிகளை அன்பளிப்பாக வழங்கினர்.

இதுதொடர்பான நிகழ்வு நேற்று முன்தினம் (19) பதுளை மலையக சிறுவர் இல்லத்தில் இடம்பெற்றது. பதுளை மலையக இல்லப் பொறுப்பாளர் கே. காண்டீபன், இணைப்பாளர் கே. பாமினி ஆகியோரும் மேற்படி நிகழ்வில் கலந்து கொண்டனர்.

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

## நாணய மாற்று வீதம் (20.06.2023)

| நாணயம் | கொள்வனவு வீதம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 201.6172 | 215.5301 |
| கனேடியன் டொலர் | 223.6305 | 239.2467 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 40.8426 | 44.3526 |
| யூரோ | 323.8327 | 344.8839 |
| ஜப்பான் யென் | 2.0935 | 2.2262 |
| சிங்கப்பூர் டொலர் | 220.6164 | 235.5995 |
| ஸ்ரேலிங் பவுண் | 380.0096 | 403.5242 |
| சுவிஸ் பிராங்க் | 329.7788 | 353.2739 |
| ஐ.அ. டொலர் | 297.2877 | 314.3802 |

| நாடு | நாணயம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 811.4779 |
| குவைட் | குவைட் தினார் | 996.1677 |
| ஓமான் | ஓமான் றியால் | 794.6364 |
| கட்டார் | கட்டார் றியால் | 83.9779 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய றியால் | 81.5599 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம் | 83.2920 |

# பேண்ட் வாத்திய இசைப்போட்டியில் புனித மிக்கேல் கல்லூரி முதலிடம்

(வெல்லாவெளி செய்தியாளர்)

மட்டக்களப்பு கல்வி வலயத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட பாடசாலைகளுக்கிடையிலான மேற்கத்திய பேண்ட் வாத்திய இசைப் போட்டி 2023 சனிக்கிழமை (17) பிற்பகல் மட்டக்களப்பு வெபர் மைதானத்தில் இடம்பெற்றது.

இந்த மேற்கத்திய பேண்ட் வாத்தியப் போட்டியில் வலயத்தில் மொத்தமாக 21 பாடசாலைகள் பங்குபற்றியமை குறிப்பிடத்தக்கது. இதன்போது முதலாம் இடத்தை புனித மிக்கேல் கல்லூரியும் இரண்டாவது இடத்தை புனித சிசிலியா பெண்கள் தேசிய பாடசாலையும் மூன்றாவது இடத்தை மகாஜனா கல்லூரியும் பெற்றுக்கொண்டன.

மட்டக்களப்பு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி சுஜாத்தா குலேந்திரகுமார் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதம அதிதிகளாக மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் திருமதி கலாமதி பத்மராஜா, கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் செல்வி அகிலா கனகசூரியம், கௌரவ அதிதிகளாக இலங்கை இராணுவ 231ஆம் படைப்பிரிவுத் தளபதி பிரிகேடியர் டெலுப பண்டார, மட்டக்களப்பு மாவட்ட பொலிஸ் பொறுப்பதிகாரி உஜித் என்.பி.லியானகே, சிறப்பு அதிதிகளாக கல்குடா வலயக் கல்விப் பணிப்பாளர் டி.ஆனந்தரூபன், மட்டக்களப்பு மத்திய வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.எம்.எம்.அமீர், மேற்கு உதவிக் கல்விப் பணிப்பாளர் வை.ஜெயச்சந்திரன், பட்டிருப்பு வலயக்கல்விப் பணிப்பாளர் எஸ்.ஸ்ரீதரன் அதிதிகளாகவும் கலந்து கொண்டனர்.




வெற்றிபெற்ற பாடசாலை பேண்ட் வாத்தியக் குழுக்களுக்கு பெறுமதியான பரிசில்களும் சான்றிதழ்களும் அதிதிகளினால் வழங்கப்பட்டன. இதன்போது பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டு சிறப்பித்தனர். பேண்ட் வாத்திய அணிநடைகள் அனைவரதும் கவனத்தை ஈர்க்கும் வகையில் அமைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.



அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்தில் கடமைபுரிந்து பதவியுயர்வு பெற்றுச்சென்ற அக்கரைப்பற்று தொழில்நுட்பக் கல்லூரி பதிவாளர் எம்.ஏ.சி.றகிப், அட்டாளைச்சேனை கல்விக் கல்லூரி பதிவாளர் எம்.ஜிப்ரி, லாகுகல பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் ஆர்.எம்.நழீல் ஆகியோருக்கு அண்மையில் அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் எம்.ஏ.சி.அகமது ஷாபிர் தலைமையில் கௌரவிப்பு நிகழ்வு இடம்பெற்றது. (திராய்க்கேணி செய்தியாளர்)




Green Tree English Academy திருமதி மரிய ஜெயந்தா ஆசிரியரின் கற்பித்தலின் கீழ் பயிற்றப்பட்டு London Noisy Class room நடத்திய International Oratory Festival (Zoom மூலம்) போட்டியில் கலந்து கொண்ட மாணவிகளான பிரியங்கா உமாசங்கர் மற்றும் தீப்சிக்கா பிரபாகரன் ஆகிய இருவரும் அகில உலக ரீதியில் 3ஆம் இடத்தைப் பெற்று Bronze medal வென்று இலங்கை நாட்டுக்குப் பெருமை சேர்த்துள்ளனர். (கிண்ணியா செய்தியாளர்)

# சமயக் கடமைகளுக்கு இடையூறு ஏற்படாத வகையில் நிகழ்வுகளை ஒழுங்கு செய்க

## இம்ரான் எம்.பி. கிழக்கு ஆளுநரிடம் கோரிக்கை

(அப்துல்சலாம் யாசீம், மீனோடைக்கட்டு, கிண்ணியா செய்தியாளர்கள்)



கிழக்கு மாகாணத்தில் ஒழுங்கு செய்யப்படும் நிகழ்வுகள் சமயக் கடமைகளுக்கு இடையூறு ஏற்படாத வகையில் இருப்பதை உறுதி செய்து கொள்ளுமாறு திருகோணமலை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானிடம் கோரிக்கை விடுத்து கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளார்.

அக்கடிதத்தில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

நாட்டின் ஏனைய மாகாணங்களோடு ஒப்பிடுகையில் கிழக்கு மாகாணத்தில் அதிக முஸ்லிம்கள் வாழ்கின்றனர் என்பதைத் தாங்கள் அறிவீர்கள். இந்நிலையில், கிழக்கு மாகாணத்தினால் ஒழுங்கு செய்யப்படும் நிகழ்வுகளை முஸ்லிம்களின் சமயக் கடமைகளுக்கு இடையூறு ஏற்படுத்தாத வகையில் ஒழுங்கு செய்வது குறித்து கவனம் செலுத்துமாறு தயவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

கடந்த 2023.06.16ஆம் திகதி திருகோணமலையில் இடம்பெற்ற கல்விக் கல்லூரி ஆசிரியர்களுக்கு நியமனம் வழங்கும் வைபவத்தில் தாங்கள் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு நியமனக் கடிதம் வழங்கி வைத்துள்ளீர்கள். இது குறித்து நான் மிகவும் சந்தோஷமடைகின்றேன்.

எனினும், அன்றைய தினம் வெள்ளிக்கிழமை(16ஆம் திகதி) நாளாகும். முஸ்லிம்கள் ஜும்ஆத் தொழுகைக்குச் செல்ல வேண்டிய நாள். அந்த வைபவத்தை ஒழுங்கு செய்தவர்கள் இதனைக் கவனத்தில் கொள்ளாது அந்நிகழ்வை நீட்டிச் சென்றதால் நிகழ்வில் கலந்து கொண்ட முஸ்லிம் அதிகாரிகள், நியமனம் பெற்ற ஆசிரியர்கள், அவர்களது பெற்றோர் எனப் பலரும் ஜும்ஆவுக்குச் செல்ல முடியாத நிலையேற்பட்டுள்ளது.

இது குறித்து பலரும் மிகவும் கவலையோடு எனது கவனத்துக்கு கொண்டு வந்துள்ளனர். எனவே, கிழக்கு மாகாணத்தில் எதிர்காலங்களில் ஏற்பாடு செய்யப்படும் நிகழ்வுகள் எந்தவொரு சமயக் கடமைகளுக்கும் இடையூறு ஏற்படாத வகையில் இருப்பதை உறுதிசெய்துகொள்ளத் தேவையான அறிவுறுத்தல்களை அனைத்து அதிகாரிகளுக்கும் வழங்குமாறு கேட்டுக் கொள்கிறேன் என அக்கடிதத்தில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# லாகுகல பிரதேச செயலகத்தில் இரத்ததான நிகழ்வு



(பொத்துவில் செய்தியாளர்)

சர்வதேச இரத்தக் கொடையாளர் தினத்தினை முன்னிட்டு, 'உதிரம் கொடுப்போம் உயிர் காப்போம்' எனும் தொனிப்பொருளில் அம்பாறை, லாகுகல பிரதேச செயலகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட இரத்ததான நிகழ்வு பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் திங்கட்கிழமை (19) இடம்பெற்றது.

பொத்துவில் ஆதார வைத்தியசாலையின் இரத்த வங்கியில் நிலவும் இரத்தப் பற்றாக்குறையினை நிவர்த்தி செய்யும் நோக்கில் இடம்பெற்ற இரத்ததான நிகழ்வில் லாகுகல பிரதேச செயலகத்தின் உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

பிரதேச செயலாளர் என்.நவநீதராஜா தலைமையில் இடம் பெற்ற இந்நிகழ்வில் நிர்வாக உத்தியோகத்தர் ஆர்.எம்.நளில், சமூக சேவை உத்தியோகத்தர் ஆர்.என்.ரவீந்திரன், பொத்துவில் ஆதார வைத்தியசாலை இரத்த வங்கி பொறுப்பு வைத்திய அதிகாரி டொக்டர் எஸ்.கருணாரத்ன, தாதியர்கள், சுகாதார உதவியாளர்கள் கலந்துகொண்டனர். லாகுகல பிரதேச செயலக சமூக சேவை பிரிவு மேற்குறித்த இரத்ததான நிகழ்வினை மிகவும் சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.




மென்பொருள் சேவை நிறுவனங்களுக்கான இலங்கை சங்கத்தினால் நடத்தப்பட்ட 2023ஆம் ஆண்டுக்கான தேசிய புத்தாக்க சிந்தனைகளுக்கான விருதுகளில் தொழில்நுட்ப சிறார்கள் பிரிவில் மென்பொருள் உருவாக்கங்களுக்கான போட்டி நிகழ்ச்சியில் கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரி மாணவி ஸுஹ்றா நதா தேசிய ரீதியில் வெற்றி பெற்ற 05 சாதனையாளர்களில் ஒருவராக அண்மையில் தெரிவு செய்யப்பட்டிருந்தார். அவரின் திறமையைப் பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு கல்லூரியில் திங்கட்கிழமை(19) அதிபர் யூ.எல்.எம்.அமீன் தலைமையில் இடம்பெற்றது. (மாவடிப்பள்ளி, நிந்தவூர் செய்தியாளர்கள்)



கல்முனை பிரதேச செயலக சமுர்த்திப் பிரிவின் சிரேஷ்ட சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் என்.எம்.நௌசாத் சமுர்த்தி முகாமையாளராக பதவியுயர்வு பெற்று கல்முனை பிரதேச செயலக சமுர்த்தி வங்கிச் சங்கத்தின் முகாமைத்துவப் பணிப்பாளராக வெள்ளிக்கிழமை(16) பிரதேச செயலகத்தில் தனது கடமையைப் பொறுப்பேற்றுக் கொண்டார். கல்முனை பிரதேச செயலாளர் ஜே.லியாக்கத் அலி முன்னிலையில் நடைபெற்ற இந்நிகழ்வில் சிரேஷ்ட தலைமை சமுர்த்தி முகாமையாளர் ஏ.ஆர்.எம்.சாலிஹ், கருத்திட்ட முகாமையாளர் ஏ.எம்.எஸ்.நயீமா, மகாசங்க சிரேஷ்ட உதவி முகாமையாளர் எம்.எம்.எம்.மன்சூர் மற்றும் சமுர்த்திப் பிரிவில் கடமையாற்றும் ஏனைய உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர். (மருதமுனை செய்தியாளர்)

# அல்-பஹ்ரியா தேசிய பாடசாலை பழைய மாணவர் ஒன்றுகூடல் விழா




(பாறுக் ஷிஹான்)

அம்பாறை கல்முனை கல்வி வலயத்துக்குட்பட்ட அல்-பஹ்ரியா தேசிய பாடசாலை பழைய மாணவர் ஒன்றுகூடல் நிகழ்வு பாடசாலை அதிபர் எம்.எஸ்.எம்.பைஸால் தலைமையில் ஞாயிற்றுக்கிழமை(18) இடம்பெற்றது.

பாடசாலை வளாகத்தில் இடம்பெற்ற குறித்த நிகழ்வில், முதலில் கிராஅத் ஓதப்பட்டு கல்முனை மாநகர சபை முன்னாள் உறுப்பினரும் சட்டத்தரணியும் பழைய மாணவர் சங்கத்தின் உப தலைவியுமான ஆரிகா காரியப்பரால் வரவேற்புரை நிகழ்த்தப்பட்டது.

தலைமையுரையை பாடசாலை அதிபர் மேற்கொண்டதுடன் அண்மைக்காலமாக பாடசாலையின் நற்பெயருக்கு களங்கம் விளைவிக்கின்ற செயலில் சில குழுக்கள் திட்டமிட்டு செயற்படுவதாகவும் சமூக ஊடகங்களில் போலி அடையாளங்களுடன் இவ்வாறான கீழ்த்தரமான நடவடிக்கைகளை மேற்கொள்வோர் உண்மையான தகவல்களைப் பெற்று அதனை வெளிப்படுத்த வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

தொடர்ந்து நிகழ்வின் பிரதம அதிதியாக கலந்துகொண்ட கல்முனை கோட்டக் கல்விப் பணிப்பாளரும் உதவிக் கல்விப் பணிப்பாளருமான ஏ.பி.எப்.நஸ்மியா சனூஸ் உரையாற்றி நிகழ்வில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசில்களை வழங்கி வைத்தார்.

இந்நிகழ்வில் பாடசாலை பிரதி அதிபர் எம்.ஏ.அஸ்தர், பாடசாலை பழைய மாணவிகள் சங்கப் பிரதித்தலைவரும் கல்முனை மாநகர சபை முன்னாள் உறுப்பினருமான சிரேஷ்ட சட்டத்தரணி ஆரிகா காரியப்பர், பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்றுக் குழுவினர், பாடசாலை பழைய மாணவர் சங்க உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்துகொண்டதுடன் ஓவியக்கண்காட்சி, மைதான நிகழ்வு, சிறுவர்களின் நடனம் உட்பட பழைய மாணவிகளின் பல்வேறு நிகழ்வுகளும் இடம்பெற்றன.

# ஒரு கைப்பிடி அரிசி சேகரித்து பிறர் உயிர்வாழ உதவும் செயற்றிட்டம் ஆரம்பித்து வைப்பு



(மட்டக்களப்பு)

அறநெறிப் பாடசாலைகளில் ஒரு கைப்பிடி அரிசி சேகரித்து பிறர் உயிர்வாழ உதவும் செயற்றிட்டம் மட்டக்களப்பு மாவட்டத்தில் முன்னெடுக்கப்பட்டது.

மாவட்ட செயலக மேலதிக அரசாங்க அதிபர் திருமதி சுதர்ஷினி ஸ்ரீகாந்தின் அறிவுறுத்தல் மற்றும் ஆலோசனைக்கமைவாக மாவட்டத்திலுள்ள அனைத்து அறநெறிப் பாடசாலைகளிலும் இச்செயற்றிட்டம் ஞாயிற்றுக்கிழமை(18) முன்னெடுக்கப்பட்டது.

இந்நிகழ்வின் உத்தியோகபூர்வ நிகழ்வு மாவட்ட இந்து கலாசார உத்தியோகத்தர் கி.குணநாயகம் ஒழுங்கமைப்பில் களுவாஞ்சிக்குடி பிரதேச செயலகப் பிரிவிலுள்ள சைவ மகாசபை அறநெறிப் பாடசாலையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இதன்மூலம் சேகரிக்கப்படும் அரிசி அப்பிரதேசத்திலுள்ள சிறுவர் மற்றும் முதியோர் இல்லங்களுக்கு வழங்கப்படவுள்ளது. களுவாஞ்சிக்குடி சைவ மகாசபையின் தலைவர் சிரேஷ்ட விரிவுரையாளர் கே.மதிசீலனின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் ஸ்ரீ மாணிக்கப் பிள்ளையார் ஆலய பிரதம குரு, அதன் கிராமத் தலைவர், பிரதேச செயலக இந்து கலாசார உத்தியோகத்தர், கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர், ஆலயங்களின் நிர்வாகிகள், அறநெறிப் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

# கற்றல் உபகரணங்கள் வழங்கல்



(கிண்ணியா செய்தியாளர்)

திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச செயலகப் பகுதிக்குட்பட்ட சென்மேரிஸ் பாடசாலையில் கல்வி கற்கும் தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் திங்கட்கிழமை(19) வழங்கப்பட்டன.

குறித்த நிகழ்வானது, சென்மேரிஸ் பாடசாலையில் இடம்பெற்றதுடன் திருகோணமலை மாவட்ட செயலக பிரதம கணக்காளர் பரமேஸ்வரனின் கோரிக்கைக்கமைவாக உலக சுகாதார ஸ்தாபனத்தில் கடமையாற்றும் குணாளன் என்பவரின் முயற்சியின் பயனாக கந்தையா தொண்டு நிறுவன உரிமையாளரின் தந்தை மறைந்த சுரேஸ்குமாரின் நினைவாக கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

04 இலட்சம் ரூபா பெறுமதியான பாடசாலை கற்றல் உபகரணங்கள் சுமார் 200 மாணவ மாணவிகளுக்கு இதன்போது வழங்கப்பட்டது. திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச செயலாளர் பி.தனேஸ்வரன், மாவட்ட செயலக சமூக சேவைத் திணைக்கள இணைப்பாளர் த.பிரணவன், பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் எனப் பலரும் இதில் கலந்து கொண்டனர்.

# மர்ஹூம் ஹமீட்டின் நினைவேந்தல் நிகழ்வு





(பாறுக் ஷிஹான், சாய்ந்தமருது செய்தியாளர்)

காலஞ்சென்ற அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் செயலாளர் நாயகமும் சட்ட முதுமாணியுமான மர்ஹூம் வை.எல்.எஸ்.ஹமீட் பற்றிய நினைவேந்தல் நிகழ்வு கல்முனை அஸ்-ஸுஹரா வித்தியாலயத்தில் கல்முனை மாநகர சபையின் முன்னாள் உறுப்பினரான சிரேஷ்ட சட்டத்தரணி ஆரிகா காரியப்பர் தலைமையில் திங்கட்கிழமை(19) மாலை நடைபெற்றது.

கிராஅத் ஓதலுடன் ஆரம்பமாகிய இந்நிகழ்வினை ஹமீட்டிடம் ஆங்கில பாடம் கற்ற பழைய மாணவிகள் ஏற்பாடு செய்திருந்தனர்.

நிகழ்வில் வரவேற்புரையை பாடசாலை அதிபர் எம்.எச்.எஸ்.ஆர். மஜீதியாவும் தலைமையுரையை சட்டத்தரணி ஆரிகா காரியப்பரும் ஆற்றினர்.

அத்துடன் மர்ஹூம் வை.எல்.எஸ்.ஹமீட் பற்றிய நினைவுக்கவிதையை பாடசாலை அதிபர் எம்.எச்.எஸ்.ஆர்.மஜீதியா வாசித்தார். தொடர்ந்து மர்ஹூம் வை.எல்.எஸ்.ஹமீட் பற்றிய நினைவுரையை காத்தான்குடி ஸாவியா மகளிர் வித்தியாலய பிரதி அதிபர் எம்.வை.எம்.யூசுப் இம்ரான் மற்றும் கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரி முன்னாள் அதிபர் ஏ.எச்.ஏ.பஷீர் ஆகியோரும் மேற்கொண்டனர்.

குறித்த நிகழ்வில் மர்ஹூம் ஹமீட்டின் வாழ்க்கை வரலாறு பற்றிய நினைவுக் குறிப்பும் வெளியிடப்பட்டதுடன் ஆசிரியை ஹாபியா றிசாம் குறித்த நிகழ்வினை தொகுத்து வழங்கினார்.

இதன்போது யாசீன் ஓதுதலும் துஆப் பிரார்த்தனையும் மௌலவி அல்-ஹாபிழ் எம்.ஐ.எம் றியாஸ்(அல்-தாபி), நினைவுக் கவிதை காமிலா காரியப்பர், ஏற்புரையை ஹமீட் குடும்பத்தினர் சார்பில் அவரது சகோதரர் வைத்தியர் யூசுப் மேற்கொண்டதுடன் இறுதியாக நன்றியுரை ஸலவாத்துடன் நிகழ்வுகள் நிறைவடைந்தன.

# ‘நெல்லுக்கான நிர்ணய விலையை நிர்ணயிக்குக!’

## குச்சவெளி விவசாய சம்மேளனம், அம்பாறை விவசாயிகள் கோரிக்கை

*(அப்துல்சலாம் யாசீம், அக்கரைப்பற்று செய்தியாளர்)*

நெல்லுக்கான நிர்ணய விலையை நிர்ணயிக்குமாறு குச்சவெளி விவசாயிகள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

சிறுபோக அறுவடை காலம் தற்போது நெருங்கிக் கொண்டிருப்பதாகவும் கடந்த காலங்களில் குறைந்த விலையில் நெல் கொள்வனவு செய்துள்ளதாகவும் இம்முறையாவது விவசாயிகளின் நலன்கருதி நெல்லுக்கான நிர்ணய விலையை நிர்ணயிக்குமாறும் அரசாங்கத்திடமும் கிழக்கு மாகாண ஆளுநரிடமும் குச்சவெளி மகா ஆலங்குளம் விவசாய சம்மேளனம் கோரிக்கை விடுத்துள்ளது.

படைப்புழு தாக்கத்திலிருந்து மீண்டெழுந்து உரம் மற்றும் கிருமி நாசினிகளை அதிக விலைக்கு வாங்கி தற்போது பாரிய கஷ்டங்களுக்கு மத்தியில் நெல் அறுவடைக்கான கட்டத்தை நெருங்கியுள்ள நிலையில், நெல் கொள்வனவின்போது விலைகளில் பாரிய மோசடிகள் இடம்பெற்று வருகின்றன. இந்நிலையில், நிர்ணய விலையைத் தீர்மானிக்க வேண்டும் எனவும் விவசாயிகள் கோருகின்றனர்.

குச்சவெளி பிரதேசத்தில் மீனவர்களும் விவசாயிகளும் வாழ்ந்து வருவதாகவும் குறித்த இரு சாராரினது பிரச்சினைகளை தீர்ப்பது குறித்து பேசுவதை விடுத்து முட்டை விலை பற்றி பாராளுமன்றத்தில் பேசுவதாகவும் பாதிக்கப்பட்ட விவசாயிகளின் நலன் கருதி எதுவும் பேசவில்லையெனவும் விவசாயிகள் அதிருப்தி தெரிவிக்கின்றனர்.

பல கஷ்டங்களுக்கு மத்தியில் விவசாயத்தை மேற்கொள்ளும்போது நெல் அறுவடையின்போது குறைந்த விலைக்கு வியாபாரிகள் சுரண்டி எடுத்துச் செல்கின்றனர். ஆகவே, அரசாங்கமும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் நெல்லுக்கான நிர்ணய விலையைத் தீர்மானிக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுக்கின்றனர்.

இதேவேளை, அம்பாறை மாவட்டத்தில் நெல் அறுவடை ஆரம்பித்துள்ளதால் அரசாங்கம் உத்தரவாத விலைக்கு நெல்லைக் கொள்வனவு செய்ய நடவடிக்கை எடுக்குமாறு அம்பாறை மாவட்ட விவசாயிகள் விவசாய அமைச்சரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

அம்பாறை மாவட்டத்தின் சில பிரதேசங்களில் நெல் அறுவடை ஆரம்பித்துள்ளதனால் அறுவடை செய்யப்படும் நெல்லுக்கு உத்தரவாத விலை கிடைக்காமையினால் விவசாயிகள் பெரும் சிரமத்துக்குள்ளாகியுள்ளனர். தற்போது தனியாரினால் குறைந்த விலையிலேயே நெல் கொள்வனவு செய்யப்பட்டு வருகிறது.

வங்கிகளிலும் தனியார் நிறுவனங்களிலும் கடன்களைப் பெற்று விவசாயத்தை மேற்கொண்டு வந்த இந்நெற்செய்கைகளுக்கு அறுவடையின் போது உத்தரவாத விலை கிடைக்காவிட்டால் விவசாயிகளின் நிலை மிகவும் கீழ்மட்ட நிலைக்கே சென்றுவிடும். பெற்ற கடன்களைக்கூட அடைப்பதற்கு வழியில்லாது நெற்செய்கையாளர்கள் திண்டாடுகின்றனர். அறுவடையின்போது கிடைக்கும் நெல்லை விற்பனை செய்வதன்மூலம் பெறும் பணம் நஷ்டத்திலேயே காணப்படுவதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

எனவே, தற்போது அறுவடை செய்யப்படும் நெல்லை அரசாங்கம் உத்தரவாத விலைக்கு கொள்வனவு செய்ய உடன் நடவடிக்கை எடுக்குமாறு அம்பாறை மாவட்ட விவசாயிகள் விவசாய அமைச்சரிடம் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

## தன்னார்வலர்களுக்கான அடையாள அட்டை வழங்கல்



*(மாளிகைக்காடு, சாய்ந்தமருது செய்தியாளர்கள்)*

மனித மேம்பாட்டு அமைப்பின் தன்னார்வலர்களுக்கான உத்தியோகபூர்வ பொறுப்புச் சான்றிதழ் மற்றும் அடையாள அட்டை வழங்கும் செயற்றிட்டம் அமைப்பின் தலைவர் எஸ்.ஏ.முகம்மட் அஸ்லம் தலைமையில் சாய்ந்தமருது அல்-ஹிலால் வித்தியாலயத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் அம்பாறை மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் ஒருங்கிணைப்பாளரும் அமைப்பின் தேசிய அமைப்பாளருமான ஐ.எல்.எம். இர்பான், மூத்த ஊடகவியலாளரும் அமைப்பின் பிரதித் தலைவருமான எம்.ஐ. சம்சுதீன், அமைப்பின் உயர்பீட உறுப்பினர்கள், பிரதேச அமைப்பாளர்கள், அமைப்பின் கீழ் இயங்கும் பிரிவுகளின் தலைவர்கள் என்று பலர் பங்கேற்றனர்.

இதன்போது கடந்த காலங்களில் இந்த அமைப்போடு இணைந்து செயற்பட்டு வந்த அமைப்பின் பிரதேச அமைப்பாளர்கள், HDA ஸ்ரீலங்காவின் கீழ் இயங்கும் பிரிவுகளின் தலைவர்களுக்கு உத்தியோகபூர்வ பொறுப்புச் சான்றிதழ் மற்றும் அடையாள அட்டைகள் அம்பாறை மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் ஒருங்கிணைப்பாளரால் உத்தியோகபூர்வமாக வழங்கப்பட்டு அமைப்பில் இணைத்துக்கொள்ளப்பட்டதோடு எதிர்கால செயற்றிட்டங்கள் பற்றியும் கலந்துரையாடப்பட்டன.

## போடியார் புலம்பல்!



**கூட்டுத்தலைமையிலதானாம் இனி விளக்கு கொளுத்தப்போறதாக அந்த கட்சிக்காறர்கள் வவுனியா கூட்டத்தில முடிவு எடுத்துத்தாங்க எலுவா? அப்ப ஊட்டுத்தலைமைக்குள கால் வைக்க மாட்டங்கபோல. ஆனா இதுவும் கொஞ்சக்காலத்தால விளக்கு வேற.. திரிவேற.. எண்ணெய் வேற.. நெருப்பெட்டி வேற என சிதறாம உடாது. ஏன் தெரியுமா..? ஊடக பேச்சாளர் சுரேஷ் தலையில்லாமல் வால் ஆட்டக்கூடியவர். இருந்து பாருங்கவன் என்ன நடக்குமெண்டத**

## மோட்டார் சைக்கிள் திருட்டு

*(மீராவோடை செய்தியாளர்)*

வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஓட்டமாவடியிலுள்ள வீடொன்றில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள் திங்கட்கிழமை(19) அதிகாலை திருடப்பட்டுள்ள சம்பவமொன்று இடம்பெற்றுள்ளது.

வீட்டு முற்றத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த BDM - 2960 எனும் இலக்கமுடைய பல்ஸர் மோட்டார் சைக்கிள் ஒன்றே இவ்வாறு திருடப்பட்டுள்ளது. இரண்டு நபர்கள் மோட்டார் சைக்கிளைத் திருடிச் செல்லும் காட்சி அங்கு பொருத்தப்பட்டிருந்த சிசிரிவி கெமராவில் பதிவாகியுள்ளது.

இத்திருட்டுச் சம்பவம் தொடர்பாக வாழைச்சேனை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதுடன் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## கல்முனையில் இருந்து தினமும் கதிர்காமம், உகந்தை முருகன் ஆலயத்துக்கு பஸ் சேவை

*(பாண்டிருப்பு செய்தியாளர்)*

வரலாற்றுப் பிரசித்திபெற்ற கதிர்காமம் முருகன் ஆலயத்தின் வருடாந்த உற்சவம் ஜூன் 19ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது. எதிர்வரும் ஜூலை 04ஆம் திகதி மாணிக்க கங்கையில் நடைபெறும் நீர்வெட்டு தீர்த்தோற்சவத்துடன் உற்சவம் நிறைவடையவுள்ளது.

இதனையிட்டு இலங்கைப் போக்குவரத்துச் சபையினால் கல்முனையில் இருந்து தினமும் காலை 6.30 மணிக்கு கதிர்காமத்துக்கான விசேட பஸ் சேவை நடைபெற்று வருகிறது. இங்கு ஒருவழி பயணக்கட்டணமாக 730 ரூபா அறவிடப்படுகிறது.

இதேவேளை, கதிர்காமத்துக்கு காட்டுவழிப் பாதையூடாகப் பயணிக்கும் அடியார்களின் நலன் கருதி உகந்தை முருகன் ஆலயத்துக்கும் இங்கிருந்து தினமும் காலை 6.30 மணிக்கு விசேட பஸ் சேவை நடைபெற்று வருகிறது. இதற்கு ஒருவழிப்பயணக்கட்டணமாக 600 ரூபா அறவிடப்படுகிறது.

போதியளவு பயணிகள் வருகையைப் பொறுத்து அவர்களுக்கு மேலதிகமான விசேட போக்குவரத்து ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படும் என சாலை முகாமையாளர் டி.ஜெளபர் தெரிவித்தார். இம்முறை உகந்தை முருகன் ஆலய வருடாந்த உற்சவம் ஜூலை 18ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி ஓகஸ்ட் மாதம் 02ஆம் திகதி நடைபெறும் தீர்த்தோற்சவத்துடன் நிறைவடையவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கத்தின் கல்முனைக் கிளையின் பொதுக்கூட்டம்

*(மாளிகைக்காடு செய்தியாளர்)*

அகில இலங்கை பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கத்தின் கல்முனைக் கிளையின் வருடாந்த பொதுக்கூட்டம் கல்முனைக்கிளை உப தலைவர் எம்.எஸ்.அப்துல் மலிக் தலைமையில் அக்கரைப்பற்றில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கல்முனைப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஐ.எல்.எம்.றிபாஸ் கலந்து கொண்டதுடன் கௌரவ அதிதியாக கல்முனைப் பிராந்திய சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் டாக்டர். எம்.பி.அப்துல் வாஜித் கலந்து கொண்டார். மேலும் பல பிராந்தியப் பணிமனைப் பிரிவுத் தலைவர்கள் அதிதிகளாகக் கலந்துகொண்டனர்.

பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் பலர் விரைவில் ஓய்வு பெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டு அவர்களின் சேவை மற்றும் அர்ப்பணிப்பைப்



பாராட்டி தொழிற்சங்கம் அவர்களுக்கு பாராட்டுச் சின்னமாக நினைவுச் சின்னங்களை வழங்கியது. பொதுச் சுகாதாரத்தில் ஓய்வு பெறும் அதிகாரிகளின் பங்களிப்புகளுக்கு தொழிற்சங்கத்தின் நன்றியைத் தெரிவித்த அவர்கள் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் எதிர்நோக்கும் பல்வேறு சவால்கள் தொடர்பிலும் இங்கு உரை நிகழ்த்தினர். அதனைத் தொடர்ந்து நடப்பாண்டுக்கான புதிய நிர்வாகம் தெரிவுசெய்யப்பட்டது.

# படுகொலை செய்யப்பட்ட ஈ.பி.ஆர்.எல்.எவ். உறுப்பினர்களின் தியாகி தினம் அனுஷ்டிப்பு



*(கல்லடி செய்தியாளர்)*

இந்தியாவில் படுகொலை செய்யப்பட்ட ஈ.பி.ஆர்.எல்.எவ்.இயக்கத்தின் தலைவர் பத்மநாபா உட்பட படுகொலை செய்யப்பட்ட உறுப்பினர்களின் தியாகிகள் தினம் மட்டக்களப்பில் அனுஷ்டிக்கப்பட்டது.

தமிழர் சமூக ஜனநாயகக் கட்சியின் ஏற்பாட்டில் மட்டக்களப்பு வீச்சுக்கல்முனையில் உள்ள கட்சியின் காரியாலயத்தில் திங்கட்கிழமை(19) நடைபெற்றது.

தமிழர் சமூக ஜனநாயகக் கட்சியின் மத்திய குழு உறுப்பினரும் அம்பாறை மாவட்ட அமைப்பாளருமான அலியார் முகம்மது பிர்தௌஸ் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், ஈழவர் ஜனநாயக முன்னணியின்(ஈ.பி.டி.பி.) மட்டக்களப்பு -அம்பாறை மாவட்ட அமைப்பாளர் சிவானந்தராஜா, தமிழர் சமூக ஜனநாயகக் கட்சியின் செயலாளர் எஸ்.மோகன், தமிழர் சமூக ஜனநாயகக் கட்சியின் மத்திய குழு உறுப்பினரும் மட்டக்களப்பு மாவட்ட அமைப்பாளருமான கே.மதன் உட்பட கட்சியின் உறுப்பினர்கள், உயிரிழந்தவர்களின் குடும்ப உறவினர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது, ஈ.பி.ஆர்.எல்.எவ்.இயக்கத்தின் தலைவர் பத்மநாபா உட்பட படுகொலை செய்யப்பட்ட உறுப்பினர்களின் பதாகைகள் வைக்கப்பட்டதுடன் தலைவரின் படத்துக்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டு பிரதான தீபம் ஏற்றப்பட்டதைத் தொடர்ந்து உயிர்நீத்தவர்களின் உறவினர்கள் ஒளியேற்றி அஞ்சலி செலுத்தினர். அதனைத் தொடர்ந்து கட்சித் தலைவரின் உரை செயலாளரினால் வாசிக்கப்பட்டதைத் தொடர்ந்து சிறப்புரைகள் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

## இந்து சமய கலாசார திணைக்களத்தின் ஏற்பாட்டில் பல்கலை மாணவர்களுக்கான சாசனவியல் கருத்தரங்கு





*(களுதாவளை செய்தியாளர்)*

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் பல்கலைக்கழக மாணவர்களுக்கான சாசனவியல் பயிற்சிக் கருத்தரங்கு திங்கட்கிழமை (19) மட்டக்களப்பு நாவற்குடாவில் உள்ள இந்து கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் ய.அனிருத்தனன் தலைமையில் நடைபெற்ற இந்தப் பயிற்சிக் கருத்தரங்கின் ஆரம்ப நிகழ்வில் இலங்கையின் பிரபல தொல்லியல் ஆய்வாளரும் யாழ். பல்கலைக்கழக வேந்தருமான பேராசிரியர் சி.பத்மநாதன், கிழக்கு பல்கலைக்கழக வரலாற்றுத்துறை விரிவுரையாளர் திருமதி கௌரி லக்ஷ்மிகாந்தன், யாழ். பல்கலைக்கழக வரலாற்றுத்துறை வருகைதரு விரிவுரையாளர் க.கிரிதரன் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

தமிழ் பேசும் மக்கள் மத்தியில் வரலாற்று ஆய்வுச்செயற்பாடுகள் குறைந்துள்ள நிலையில், அதனை ஊக்குவிக்கும் வகையில் இந்தப் பயிற்சிக் கருத்தரங்கு நடத்தப்படுகின்றது. இதன்போது கல்வெட்டுகளை வாசிப்பது குறித்து பயிற்சிகள் வழங்கப்படவுள்ளதுடன் களப்பயணங்களும் முன்னெடுக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதன்போது கருத்து தெரிவித்த பேராசிரியர் பத்மநாதன், இந்து ஆலயங்களின் வரலாறுகள் தேவாரங்களுடன்தான் ஆரம்பமாகின்றன என்கின்ற நிலை இருந்துவந்தது. இப்பொழுது அந்த நிலைமை முற்றாகமாறிவிட்டது. திருக்கோணேஸ்வரம், திருக்கேதீஸ்வரம் போன்று முன்னேஸ்வரம், நகுலேஸ்வரம், திருக்கோவில், கொக்கட்டிச்சோலை போன்ற ஆலயங்கள் இரண்டாயிரம் ஆண்டுகள் பழமையானவை என்பதை நாங்கள் தமிழ் சாசனங்களை பயின்றதன் காரணமாக நிறுவிக்கொள்ள முடிந்தது. அதுமட்டுமன்றி, தற்போதெல்லாம் இந்து ஆலயங்களில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள அரைக்கல்வட்டத்துக்கும் பௌத்தர்களின் சந்திரவட்டக்கல்லுக்கும் வேறுபாடுகள் உள்ளன.

அரைவட்டக்கல் இருந்தால் அது சைவ ஆலயங்களுக்கு ஒரு பேரிடராக அமைந்துவிடுகின்றது. முன்பு பௌத்த ஆலயம் இருந்தது, அதனை இடித்துவிட்டு ஆலயம் கட்டியுள்ளீர்கள் என்று கூறுகின்றார்கள். கொக்கட்டிச்சோலையில் அரைவட்டக்கல் இருக்கின்றது. அகஸ்தீஸ்வரத்தில் அரைவட்டக்கல் இருக்கின்றது. இந்த அரைவட்டக்கல்லுக்கும் இவர்கள் சொல்லும் சந்திரவட்டக்கல்லுக்குமிடையே வேறுபாடு உண்டு. நான்கு விலங்குகளின் அணிவரிசை. யானை, குதிரை, சிங்கம், காளை. இது அநுராதபுரத்தில் 06ஆம் நூற்றாண்டுக்குப் பின்னர் ஏற்பட்ட வளர்ச்சி. கல்வெட்டு சாசனங்களைப் பொறுத்தவரையில் எல்லா துறைகளுக்கும் அதிமுக்கியமானவை.

உலகிலேயே பாரத கண்டத்தில் மட்டும்தான் அதிகளவான கல்வெட்டுகளும் செப்பேடுகளும் காணப்படுகின்றன. இவை ஐம்பதாயிரத்துக்கும் மேலானவை. அதில் முப்பதாயிரத்துக்கும் மேற்பட்டவைகள் தமிழ் மொழி கல்வெட்டுகள். பத்தாயிரம் கல்வெட்டுகள் சோழமன்னர் காலத்து கல்வெட்டுகளாகும் - என்றார்.

## உத்தேச சட்டம் கொண்டுவரப்பட்டால் நாட்டின் ஊடகக் குரல் நசுக்கப்படும்

### அம்பாறை மாவட்ட முன்னாள் எம்.பி. கோடீஸ்வரன்



*(மாளிகைக்காடு செய்தியாளர்)*

இலங்கை மிகவும் பொருளாதார ரீதியாக பின்னடைவு கண்டுள்ளது. இந் நிலையில், பாராளுமன்றத்தில் ஊடக ஒலி, ஒளிபரப்பு அதிகாரசபை சட்டமூலம் கொண்டுவரப்படவிருக்கின்றது. இந்த உத்தேச சட்டம் கொண்டு வரப்பட்டால் நாட்டிலுள்ள ஊடகக் குரல் நசுக்கப்படுகின்ற நிலை காணப்படும். உண்மையான விடயங்களை வெளிக்கொண்டு வரமுடியாத சூழ்நிலை ஏற்படுத்தப்படும். இவ்வாறான விடயங்களை அரசு மேற்கொள்ளும்போது கடுமையாகப் பாதிப்புறுபவர்கள் தமிழ் மக்களேயன்றி வேறு யாருமல்லர் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அம்பாறை மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கவீந்திரன் கோடீஸ்வரன் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், இவ்வாறான சட்டங்களை இயற்றுகின்றபோது ஊடக சுதந்திரம் மறுக்கப்படுகின்றது. அவ்வாறு மறுக்கப்பட்டால் மக்கள் வாழ்வதற்கான உரிமை நசுக்கப்படுகிறது. இதனால் மக்களின் பிரச்சினைகளை வெளிக்கொண்டுவர முடியாத துர்ப்பாக்கிய நிலைமை ஏற்படுகிறது.வடகொரியாவில் எவ்வாறு மக்கள் நசுக்கப்படுகின்றார்களோ அவர்களுக்கான வாழும் உரிமை மறுக்கப்பட்டு கருத்துச் சுதந்திரம் எவ்வாறு இல்லாமலாக்கப்பட்டதோ அந்த நிலைமை இலங்கையிலும் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் காணப்படுகின்றன.

ஆகவே, இந்தச் சட்டமூலங்களை எதிர்க்க வேண்டிய கடப்பாடு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு உண்டு. அது நிச்சயம் இவற்றை எதிர்க்கும். தமிழர்களோடும் தமிழ் பண்புகளோடும் தமிழுக்காகவும் தமிழ்த் தேசத்துக்காகவும் நாம் குரல் கொடுப்போம்.

மேலும், கடந்த காலத்தில் அம்பாறை மாவட்டம் அரசியல் ரீதியில் பின்தள்ளப்பட்டது. கடந்த பாராளுமன்றத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனக்குக் கிடைத்த ஒரேயொரு ஆசனத்தை அம்பாறை மாவட்டத்துக்கு வழங்கியமைக்கான மூலகாரணம் அம்பாறை மாவட்டத்திலுள்ள தமிழ் மக்கள் அநாதைகள் ஆக்கப்படக்கூடாது, அவர்களைக் கைவிடக்கூடாது, தமிழ் மக்கள் தமக்கான பிரதிநிதியில்லாமல் அவர்களின் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு ஏற்ற தலைமை இல்லாமல் அநாதைகளாக்கப்படக்கூடாது என்பதற்காகவே - என்றார்.

## உதவிக் கொடுப்பனவு வழங்கல் தொடர்பான கலந்துரையாடல்



*(கல்லடி செய்தியாளர், மட்டக்களப்பு)*

மட்டக்களப்பு மாவட்டத்தில் Save the Children நிறுவனத்தின் மனிதாபிமான செயற்றிட்டம் தொடர்பான கலந்துரையாடல் மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது. இச்செயற்றிட்டம் தொடர்பாக திங்கட்கிழமை(19) மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் உதவி மாவட்ட செயலாளர் ஆ.நவேஸ்வரன் தலைமையில் கலந்துரையாடப்பட்டது.

மாவட்டத்தில் தெரிவுசெய்யப்பட்ட வாகரை, செங்கலடி, வவுணதீவு, வெல்லாவெளி மற்றும் கிரான் ஆகிய பிரதேச செயலகங்களிலிருந்து பாதிக்கப்பட்ட 06ஆயிரம் பெண்களுக்கு கொடுப்பனவு வழங்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளது. இவ்வுதவித் தொகைத் திட்டமானது மாற்றுத்திறனாளிகளைக் கொண்டுள்ளோர், சுகாதார பாதுகாப்பு தேவையுடையோர், சிறுவர்கள், பொருளாதார ரீதியில் ஒடுக்கப்பட்ட குடும்பங்கள், பாலின அடிப்படையில் வன்முறைக்கு உள்ளானவர்கள், பெண் தலைமைத்துவ குடும்பம் முதலானோரில் தெரிவுசெய்யப்பட்ட ஒரு பெண்ணுக்கு 10ஆயிரம் ரூபா வீதம் Save the Children நிறுவனத்தின் மனிதாபிமான செயற்றிட்டத்தின் ஊடாக வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

இதற்கான பயனாளர் தெரிவு மற்றும் தரவு திரட்டல் பிரதேச செயலகங்களினூடாக இடம்பெற்று இறுதியாக மாவட்ட செயலகத்தின் விசேட குழுவினால் தெரிவுசெய்யப்படும். இச் செயற்றிட்டத்தின் நிதி அனுசரணை UNFPA மற்றும் Save the Children வழங்கவுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

இந்நிகழ்வில் மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் திருமதி சசிகலா புண்ணியமூர்த்தி, பிரதேச செயலாளர்கள், உதவி பிரதேச செயலாளர்கள், வைத்திய அதிகாரிகள், Save the Children நிறுவனத்தின் மட்டக்களப்பு மாவட்ட செயற்றிட்ட இணைப்பாளர் சிவதர்ஷினி, மாவட்ட முன்பிள்ளைப்பருவ அபிவிருத்தி இணைப்பாளர் வீ.முரளிதரன், சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர், மாவட்ட மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர், மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், Save the Children நிறுவனத்தின் அதிகாரிகள் முதலானோர் கலந்து கொண்டனர்.

# தமிழக முகாம்களில் பதிவின்றி தங்கியுள்ள இலங்கை தமிழர்கள் 258 பேரின் நிலை என்ன?

## மத்திய அரசின் முடிவுக்காக காத்திருக்கும் தமிழக அரசு

உலக அகதிகள் தினம் நேற்று (20) கடைப்பிடிக்கப்பட்ட நிலையில், சொந்த மண்ணைவிட்டு வெளியேறி பிற நாடுகளில் தஞ்சமடைந்துள்ளோரின் எண்ணிக்கை முன்னெப்போதும் இல்லாத வகையில் அதிகரித்து வருகிறது.

உலகம் முழுவதும் சுமார் 08 கோடிபேர் அகதிகளாக இருப்பதாகவும் போர்ச்சூழல் மற்றும் பாதுகாப்பின்மை காரணமாக தினமும் சராசரியாக சொந்த நாட்டைவிட்டு வெளியேறுவோரின் எண்ணிக்கை 28 ஆயிரத்து 300 என ஐ.நா. தெரிவித்துள்ளது.

''எல்லாச் செயலும் கணக்கிடப்படுகிறது. எல்லோருடைய உயிரும் மதிப்புமிக்கவை'' என்பது ஐ.நாவின் அகதிகள் தின முழக்கமாகும்.

இந்தியாவில் பங்களாதேஷ், திபெத், இலங்கை, மியன்மார் என பல்வேறு நாடுகளைச் சேர்ந்த அகதிகள் தங்கியுள்ளனர்.

இலங்கையில் 1983இல் ஏற்பட்ட உள்நாட்டு போரால் தமிழர்கள் பெரும் பாதிப்புக்குள்ளாகி அகதிகளாக உலகம் முழுவதும் புலம் பெயர்ந்தனர். அந்தவகையில் 3 இலட்சத்து 4 ஆயிரத்து 269 அகதிகள் தமிழகத்துக்கு சென்றுள்ளனர்.

இதில் சுமார் 2 இலட்சத்து 12 ஆயிரம் பேர் இலங்கைக்கு திரும்பியுள்ளனர். தற்போதைய நிலவரப்படி தமிழகத்தில் ஒரு இலட்சத்து 2 ஆயிரம் பேர் 108 மறுவாழ்வு முகாம்களிலும் வெளியிலும் தங்கியுள்ளனர்.

அகதிகளின் குடும்பத் தலைவருக்கு ரூ.1,500, 12 வயதுக்கு மேல் ரூ.1000, 12 வயதுக்கு கீழ் ரூ.500 என மாதாந்த உதவித்தொகை, கல்வி உதவி, வீடு, மின்சாரம்,



குடும்பத்துக்கு மாதம் 20 கிலோ இலவச அரிசி, மானிய விலையில் அத்தியாவசியப் பொருட்கள் வழங்கப்படுகின்றன. வெளியே கூலி வேலைக்குச் சென்றுவிட்டு மாலையில் முகாம்களுக்கு திரும்ப அனுமதிக்கப்படுகின்றனர்.

2012ஆம் ஆண்டின் இறுதியில் இலங்கையிலிருந்து அகதிகளாக வருவோர், கைதுசெய்யப்பட்டு கடவுச்சீட்டு ஆவணச் சட்டத்தின் கீழும் சட்டவிரோதமாக வந்ததாகவும் வழக்குப் பதிந்து சிறைகளிலும் சிறப்பு முகாம்களிலும் அடைக்கப்பட்டனர்.

2022இல் இலங்கையில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியால் இலங்கையிலிருந்து இதுவரை சுமார் 60 குடும்பங்களைச் சேர்ந்த 258 பேர் அகதிகளாக தனுஷ்கோடி சென்றுள்ளனர். இவர்களை கைது செய்யாமல் மனிதாபிமான அடிப்படையில் மண்டபம் முகாமில் தற்காலிகமாக தமிழக அரசு தங்க வைத்துள்ளது. மேலும் இவர்களுக்கு தங்குமிடமும் 03 வேளை உணவு மட்டுமே வழங்கப்படுகிறது.

இலங்கை பொருளாதார நெருக்கடியால் அகதிகளாக வந்துள்ளவர்களை எப்படிக் கருதலாம் என்பது குறித்த மத்திய அரசின் முடிவுக்காக கடந்த 15 மாதங்களாக தமிழக அரசு காத்திருக்கிறது.

ஏற்கெனவே தமிழக முகாம்களில் வசிப்போருக்கு வழங்கப்படும் சலுகைகளைப் போன்று, 258 பேருக்கும் புகலிடம் வழங்குவதற்கான சிறப்பு ஏற்பாடுகளை வழங்க அனுமதிக்கவேண்டும் என தமிழக அரசு கோரிக்கை வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

உலக செய்திகள்

# டைட்டானிக் கப்பலை பார்வையிடச் சென்ற சுற்றுலாப் பயணிகளின் நீர்மூழ்கிக் கப்பல் மாயம்

நூறு வருடங்களுக்கு முன்னர் அட்லாண்டிக் கடலில் மூழ்கிய டைட்டானிக் கப்பலின் உடைந்த பாகங்களைப் பார்வையிடச் சென்ற சுற்றுலாப் பயணிகளின் நீர்மூழ்கிக் கப்பல் காணாமல் போயுள்ள நிலையில், ஆழ்கடலில் காணாமல்போன சுற்றுலாப் பயணிகளை அமெரிக்கா மற்றும் கனடா கப்பற்படை வீரர்கள் தீவிரமாக தேடி வருகின்றனர்.








21 அடி நீளம் கொண்ட நீர்மூழ்கிக் கப்பல் 05 சுற்றுலாப் பயணிகளுடன் (பயணத்தில் பிரிட்டிஷ் கோடீஸ்வரர் ஒருவரும் இருந்துள்ளார்) கடந்த ஞாயிற்றுக்கிழமை (18) அட்லாண்டிக் கடலில் புறப்பட்டுள்ளது. புறப்பட்ட 02 மணி நேரத்துக்குள் நீர்மூழ்கிக் கப்பல் தனது சிக்னலை இழந்துள்ளது. நீர்முழ்கிக் கப்பலில் பயணித்த பயணிகளின் நிலைமை திங்கட்கிழமைவரை தெரியவில்லை. மாயமானவர்களை மீட்கும் பணியில் கனடா - அமெரிக்கா கடற்படைகள் இறங்கியுள்ளன.

மீட்புப் பணிகள் குறித்து அமெரிக்க கடற்படையினர் தெரிவிக்கையில்,

''அந்த தொலைதூரப் பகுதியில் தேடுதல் நடத்துவது சவாலானது. அவர்களை கண்டுபிடிக்க அனைத்து தொழில்நுட்பங்களையும் நாங்கள் பயன்படுத்துகிறோம். அவர்களது கப்பலில் போதுமானளவு ஒட்சிசன் இருப்பதாக நம்பப்படுகிறது" என்று தெரிவித்துள்ளது.

கடலில் மூழ்கிய டைட்டானிக் கப்பல் 1985ஆம் ஆண்டு கண்டுபிடிக்கப்பட்டதிலிருந்து அந்தக் கப்பல் விரிவாக ஆராயப்பட்டது. சமீபத்தில் கூட அதன் முப்பரிமாண வடிவம் வெளியிடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

1912ஆம் ஆண்டு ஏப்ரல் 14ஆம் திகதி நள்ளிரவில் 2,200 பயணிகளுடன் சென்று கொண்டிருந்த டைட்டானிக் சொகுசு கப்பல், அட்லாண்டிக் கடலில் பனிமலையில் மோதி மூழ்கியது. இந்த விபத்தில் 1600 பேர் உயிரிழந்தனர்.

1985ஆம் ஆண்டு வடக்கு அட்லாண்டிக் பகுதியிலிருந்து 650 கிலோமீற்றர் தென்கிழக்கே, நியூ பவுன்ட்லாண்ட் தீவு அருகே 04 கிலோமீற்றர் ஆழத்தில் சிதைந்து போயிருந்த கப்பலின் பாகங்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

மூழ்கிய டைட்டானிக் கப்பலின் சிதைந்த பாகங்களை சிறிய வகை நீர்மூழ்கிக் கப்பலில் சென்று சுற்றுலாப் பயணிகள் பார்வையிட்டு வருகின்றனர். இந்நிலையிலேயே டைட்டானிக்கை பார்வையிட கடந்த ஞாயிறு காலை சுற்றுலாப் பயணிகளை அழைத்துச் சென்ற டைடன் என்ற சிறிய வகை நீர்மூழ்கிக் கப்பல், தென்கிழக்கு கனடா கடற்கரையில் திடீரென காணாமல் போயுள்ளது. இதையடுத்து அதனை தேடும் பணியில் அமெரிக்கா மற்றும் கனடாவின் கப்பற்படை கப்பல்கள் மற்றும் விமானங்கள் ஈடுபட்டுள்ளன.

காணாமல்போன நீர்மூழ்கிக் கப்பல் 96 மணிநேரம் மூழ்கும் திறன் கொண்டதாகவும் அமெரிக்க கடலோர காவல்படை தெரிவித்துள்ளது. கேப் கார்ட் கடற்பகுதிக்கு கிழக்கே 1450 கிலோமீற்றர் தொலைவில் சுமார் 13 ஆயிரம் அடி ஆழம்வரை கண்காணிக்கக்கூடிய சோலார் உதவிகளை அமெரிக்க கடலோர காவல்படை பயன்படுத்தியுள்ளது. இந்நிலையில் பிரிட்டனை சேர்ந்த செல்வந்தர் அமீஷ் காணாமல்போன பயணிகளில் ஒருவர் என்பது கண்டறியப்பட்டுள்ளது.



***''டைட்டானிக் கப்பலை பார்வையிடுவதற்கான எட்டு நாட்கள் பயணத்துக்கு சுற்றுலாப் பயணிகளுக்கு $250,000 (இந்திய ரூபாபடி சுமார் ரூ.2 கோடி ரூபா) வசூலிக்கப்படுகிறது. ஒரு நீர்மூழ்கிக் கப்பலில் மூன்று பயணிகள், ஒரு பைலட் மற்றும் ஒரு உதவியாளர் என ஐவர் மட்டுமே அமர முடியும்'***

## SAFF சம்பியன்ஷிப் தொடர் இன்று ஆரம்பம்: முதல் முறையாக வாய்ப்பை இழந்த இலங்கை

தெற்காசிய உதைபந்து கூட்டமைப்பு நடத்தும் 2023ஆம் ஆண்டுக்கான தெற்காசிய உதைபந்து சம்பியன்ஷிப் தொடர் (SAFF) இன்று இந்தியாவில் ஆரம்பமாகிறது. இதில் வரலாற்றில் முதல் முறையாக இலங்கை அணி குறித்த தொடரில் பங்கேற்கும் வாய்ப்பை இழந்தது.

சர்வதேச உதைபந்து சம்மேளனமான பீபா கடந்த ஜனவரியில் இருந்து இலங்கை உதைபந்து நிர்வாகம் மீது தடை விதித்துள்ளது. அதன் விளைவாகவே முதல் முறையாக தற்போது இலங்கை உதைபந்து அணி தெற்காசிய உதைபந்து சம்பியன்ஷிப் தொடரில் இருந்து விலகியுள்ளது.

முதல் முறையாக ஆரம்பமான 1993ஆம் ஆண்டிலிருந்து இலங்கை அணி விளையாடி வருகிறது. இரண்டாவதாக 1995ஆம் ஆண்டு நடைபெற்ற தொடரில் இலங்கை சம்பியன் பட்டத்தை தட்டிச் சென்றது. இந்தியா 08 முறையும் மாலைதீவு 02 முறையும் ஆப்கானிஸ்தான் மற்றும் பங்களாதேஷ் ஆகியன தலா ஒரு முறையும் சம்பியன் பட்டத்தை கைப்பற்றியுள்ளன.

இலங்கை பங்குபெறாத நிலையில் இந்த ஆண்டு நடைபெறும் தொடரில் தெற்காசிய உதைபந்து கூட்டமைப்பில் இடம்பெறாத லெபனான், குவைத் அணிகள் சிறப்பு அழைப்பு மூலம் விளையாடவுள்ளன. இன்று மாலை 3.30 மணிக்கு நடைபெறும் முதல் ஆட்டத்தில் குவைத் நேபாள அணிகளும் இரவு 7.30 மணிக்கு நடைபெறும் ஆட்டத்தில் இந்தியா - பாகிஸ்தான் அணிகளும் பலப்பரீட்சை நடத்தவுள்ளன.

விளையாட்டு செய்திகள்
thamilansports@gmail.com

# பாகிஸ்தானின் கோரிக்கையை நிராகரித்த பி.சி.சி.ஐ.

இந்தியாவில் நடைபெறவுள்ள உலகக்கிண்ணத்தில் விளையாடுவதற்கு பாகிஸ்தான் அரசு இதுவரை முழு ஒப்புதல் கொடுக்காத நிலையில், அந்நாட்டு கிரிக்கெட் வாரியம் வைத்த கோரிக்கையை பி.சி.சி.ஐ. நிராகரித்துள்ளது.

இந்த ஆண்டு இறுதியில் இந்தியாவில் நடைபெறவுள்ள ஒருநாள் உலகக்கிண்ணத்துக்கான வரைவு அட்டவணையை பி.சி.சி.ஐ. ஏற்கனவே ஐ.சி.சி யிடம் ஒப்படைத்துள்ளது. ஆனால் பாகிஸ்தான் அதில் சில மாற்றங்களை செய்யுமாறு கேட்டுக்கொண்டதாக தகவல் வெளியானது.

அது என்னவென்றால், பாகிஸ்தான் கிரிக்கெட் வாரியம் சார்பில் ஆஸி. - ஆப்கானிஸ்தான் அணிகளுக்கு எதிரான போட்டிகள் நடைபெறும் இடத்தை மாற்ற வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டது. உத்தேச அட்டவணையின்படி, பாகிஸ்தான் ஆப்கானிஸ்தானுக்கு எதிராக சேப்பாக்கம் மைதானத்தில் விளையாட வேண்டும். அதே நேரத்தில் அஸ்திரேலியாவுக்கு எதிரான ஒரு போட்டி பெங்களூரில் நடைபெறவுள்ளது.




ஆப்கானிஸ்தானுக்கு எதிராக பெங்களூரில் நடைபெறும் போட்டியை சென்னைக்கு மாற்ற பாகிஸ்தான் வலியுறுத்தியுள்ளது. அதேபோல், சென்னையில் அவுஸ்திரேலியாவுக்கு எதிராக நடைபெறவிருந்த போட்டியை பெங்களூருக்கு மாற்ற வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது. ஆனால் இதற்கு பி.சி.சி.ஐ. சம்மதிக்கவில்லை. உலகக்கிண்ணப் போட்டி நடைபெறும் இடம் தொடர்பாக எந்த மாற்றத்தையும் பி.சி.சி.ஐ. பரிசீலிக்காது என தெரிவித்துவிட்டதாக தகவல் வெளியாகியுள்ளது.

# அயர்லாந்துக்கு அதிர்ச்சியளித்து வரலாறு படைத்த ஓமான்



அயர்லாந்து அணிக்கு எதிரான தகுதிகாண் ஆட்டத்தில் ஓமான் அணி 05 விக்கெட்களினால் வரலாற்று வெற்றியை பதிவு செய்தது.

ஒருநாள் உலகக்கிண்ண தகுதிகாண் தொடரில் பி குழுவுக்கான 02 போட்டிகள் நேற்று முன்தினம் நடைபெற்றன. இலங்கை அணி ஐக்கிய அரபு இராச்சியத்தை இலகுவாக வீழ்த்திய நிலையில் 4ஆவது போட்டியில் அயர்லாந்து – ஓமான் அணிகள் பலப்பரீட்சை நடத்தின.

இப்போட்டியில் நாணய சுழற்சியில் வென்ற ஓமான் அணி முதலில் பந்துவீச தீர்மானித்தது. இதையடுத்து களமிறங்கிய அயர்லாந்து அணி, நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்கள் நிறைவில் 07 விக்கெட்டுகளை இழந்து 281 ஓட்டங்களை சேர்த்தது.

அதன்பின் 282 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய ஓமான் அணிக்கு காஷ்யப் பிரஜாபதி – ஜதீந்தர் சிங் ஜோடி சிறந்த ஆரம்பத்தைக் கொடுத்தனர். பின்னர் அணித் தலைவர் ஜீஸான் மக்சூத் – மொஹமட் நதீம் ஆகிய இருவரும் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்த இறுதியில் ஓமான் அணி 48.1 ஓவர்களில் 5 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது. டெஸ்ட் அந்தஸ்து பெற்ற ஒரு அணிக்கு எதிராக ஒருநாள் கிரிக்கெட்டில் ஓமான் பெற்ற வரலாற்று முதல் வெற்றி இதுவாகும்.

## கொழும்பு ஹமீட் அல்-ஹுசைனியா தேசிய கல்லூரியின் கிரிக்கெட் கானிவல்




***(அஷ்ரப் ஏ சமத்)***

கொழும்பு ஹமீட் அல்-ஹுசைனியா தேசிய கல்லூரியின் அணிக்கு 08 வீரர்கள் கொண்ட கிரிக்கெட் கானிவல் எதிர்வரும் 24, 25ஆம் திகதிகளில் பொரளை பிரிசன் மைதானத்தில் நடைபெறவுள்ளது.

மேற்படி நிகழ்வின் ஊடக மாநாடும் ரீ.சேட் அறிமுக நிகழ்வும் கடந்த வாரம் கல்லூரியின் பௌசி மண்டபத்தில் கொழும்பு ஹமீத் ஹுசைனியா கல்லூரியின் பழைய மாணவத் தலைவர்கள் குழுவின் தலைவர் இன்சாப் பரூன் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கல்லூரி அதிபர் எம்.ஆர்.எம். றிஸ்கி மற்றும் செயலாளர் எம்.அஹ்லம் மற்றும் ஹிரோஸ் காதர், ஆதிப் ஹசன் உட்பட அனுசரணையாளர்கள், பழைய மாணவத் தலைவர்கள், செயலாளர்கள் கலந்து சிறப்பித்தனர்.

16 அணிகளின் பெயர்கள் அடங்கிய ரீ-சேட்டுகளும் மேடையில் காட்சிப்படுத்தப்பட்டு உரிய குழுத் தலைவர்களிடம் கையளிக்கப்பட்டது. அத்துடன் வெற்றிக்கிண்ணமும் அறிமுகப்படுத்தப்பட்டது.

## கிண்ணியா பிரதேச சம்பியன் கிண்ணத்தை சுவீகரித்த ரேஞ்சர்ஸ் அணி

***(சீனக்குடா நிருபர்)***

கிண்ணியா உதைபந்தாட்ட சம்மேளனத்தினால் நடத்தப்பட்ட 2023ஆம் ஆண்டுக்கான வெற்றி கிண்ணத்தை ரேஞ்சர்ஸ் உதைபந்தாட்ட அணி கைப்பற்றி கிண்ணியா பிரதேச சம்பியனானது.

கிண்ணியா பிரதேசத்தில் இருந்து 36 உதைபந்தாட்ட அணிகள் பங்குபற்றிய இந்தத் தொடரின் இறுதி ஆட்டம் கடந்த சனிக்கிழமை குறிஞ்சாக்கேணி மைதானத்தில் நடைபெற்றது. இதில், ரேஞ்சர்ஸ் உதைபந்தாட்ட அணியும் முகம்மதியா உதைப்பந்தாட்ட அணியும் மோதிக்கொண்டன.

மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்ற இந்த இறுதிப் போட்டியில் ரேஞ்சர்ஸ் அணி 2:1 என்ற கோல் அடிப்படையில் முகம்மதியா அணியை வெற்றி கொண்டு, இந்த வருடத்துக்கான கிண்ணியா பிரதேச சம்பியன் கிண்ணம் பட்டத்தை தனதாக்கிக் கொண்டது.



தொடரின் சிறப்பாட்டக்காரராக ரேஞ்சர்ஸ் அணியைச் சேர்ந்த முகம்மது கிப்னியும் சிறந்த கோல் காப்பாளராக ரேஞ்சர்ஸ் அணியைச் சேர்ந்த முகம்மது பெனோஸும் தெரிவு செய்யப்பட்டதோடு, இந்த வருடத்தின் சிறந்த நன்னடத்தை அணியாக முகம்மதியா விளையாட்டுக் கழக அணியும் தெரிவு செய்யப்பட்டது.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7